
திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

பரல் : 6

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2017

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
மட்டக்களப்பு.

'கூடல்' சிறப்புற வாழ்த்துகின்றோம்

AHILA HARDWARE

# Ahila Hardware

General Hardware Merchants

**# 16, Station Road, Batticaloa.**
**Tel : 065 222 2784 Fax : 065 222 7703**
**E-mail : ahilahardware@yahoo.com**

**Authorised Dealer for**


Nippon, Tokyo Super, Pozzolana Cement,
Lanka Tor Steel, PE+ Delivery Centre
Pepsi - Batticaloa

அன்றாட வீட்டுப் பாவனைக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றக் கொள்ள



மாருதி
ரேடிங் குறூப்

பிரதான வீதி, ஆரையம்பதி,
மட்டக்களப்பு.



# Maruthi Trading Group

MAIN STREET, ARAYAMPATHY, BATTICALOA.

பதிவு இல: BT/DS/MP/SSB/04/BR/223

Tel : 065-2051307, 077 9175552

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கடல்

பரல் – 6

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2017

செப்டம்பர் 03 , 04 – 2017
மட் / கது / கிரான் மத்திய கல்லூரி மண்டபம்

விழாமலர் அனுசரணை :
• சட்டத்தரணி கி.துரைராசசிங்கம்

கண்ணகி கலை இலக்கியக் கூடல்,
மட்டக்களப்பு.

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

**பரல் – 6**

**கண்ணகி கலை இலக்கிய**
**விழா மலர் – 2017**

**தொகுப்பாசிரியர்**

கதிரவன் த. இன்பராசா

**மலர்க்குழு**

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
அ.அன்பழகன் குருஸ்
ச. மதன்
மா. சசிகுமார்
மூ. சிவானந்தராசா
தி. புலேந்திரகுமார்
த. சோமசுந்தரம்

படங்கள் : ச.மதன்


**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 0777492861
0652053003
மின்னஞ்சல் : kannahivizha@gmail.com
இணையத்தளம்:www.kannahikoodal.com


## கூடலில் கூடுவோம்

கண்ணகியம்மனை மையமாக வைத்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்துவரும் தனித்துவமான மக்கள் மத்தியில் இவ்வாண்டு கண்ணகி கலை இலக்கிய விழா நிகழ்வது சிறப்பம்சமாகும். காடும் காடுசார்ந்த வயல் வெளிகளும், குன்றுகளும் ஒன்றிணைந்த கோராவெளி எனும் காட்டின் நடுவில் ஆண்டுதோறும் ஒருநாள் சடங்காக கண்ணகி அம்மனை வரவழைத்து பக்திமயமாகவும், கோலாகலமாகவும் கொண்டாடும் கிராமங்களை ஒன்றிணைப்பதாக இவ்வருட விழா அமைகின்றது. கடந்தகால யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட அந்த இறுக்கமான காலங்களில்கூட இப் பிரதேசம் கோராவெளியில் கண்ணகியம்மனின் சடங்கு சம்பிரதாயங்கள் தடைப்பட்டதாக வரலாற்றை ஏற்படுத்தாமை இப் பிரதேச மக்கள் கண்ணகியம்மனில் வைத்திருக்கும் அளவுகடந்த பக்தியை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான சமூகத்தின் மத்தியில் கண்ணகி பற்றிய கலையிலக்கியங்களைப் பரவலாக்கும் இவ் வருடச் செயற்பாடுகள் கல்குடா தேர்தல் தொகுதியில் முத்திசையையும், பல கிராமங்களையும் ஒன்றிணைக்கும் மையக் கிராமமான கிரானில் நடைபெறுவது பிரதேசத்தின் எல்லாத் திசைகளிலும் கண்ணகி கலையிலக்கியங்கள் பற்றிய சிலாகிப்புக்கும், பரவலாக்கத்துக்கும் தக்கபடி அமையும் என்பது உறுதியாகும்.

இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கண்ணகியம்மன் நம்பிக்கை பக்திகடந்து கலையிலக்கியங்களால் வியாபித்து, காலவோட்டத்தில் இப்பிரதேச மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களுடனும், கலை கலாசாரக் களத்திலும் வலுவடையும் என்பதனை இங்குள்ள செயற்பாட்டாளர்களின் வெளிப்படுத்துகை புலப்படுத்துகின்றது.


தொன்மங்கள் நிறைந்த இப் பிரதேசம் இவ்வருட விழாவோடு எமது கூடலின் பிரதான நோக்கங்களில் ஒன்றான பண்பாட்டுத் தளமொன்றை உருவாக்கி அத்தளம் தொடருற இவ்வருட விழாவில் முனைப்புடன் செயற்படும் அனைவரும் தொடர்ந்து இப் பண்பாட்டுத் தளத்தைப் பேணுதல் வேண்டும்.

இவ்வாறான பண்பாட்டுத் தளம் ஒன்றை ஒருவாக்கும் முயற்சியில் நிதானத்துடன் செயற்படும் கண்ணகி கலை இலக்கியக் கூடலுடன் கூடுதற்கு கோறளைப்பற்று மற்றும் கோறளைப்பற்று தெற்குப் பிரதேசம் இணைவது சாலவும் பொருந்துகின்றது.

இன்னும் யாவரும் வாருங்கள். கூடலுடன் கூடுவோம். கண்ணகி கலையிலக்கியங்களைப் பரவலாக்கி, கண்ணகி பற்றிய தொன்மங்களை மீட்டு, எமக்கென்றொரு பண்பாட்டுத் தளத்தை உறுதிப்படுத்துவோம்.

**அன்பழகன் குருஸ்**
செயலாளர், கண்ணகிகலை இலக்கியக் கூடல்.

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்



தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.

இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா 2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி **கோமேதகவல்லி செல்லத்துரை** அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் **திரு.சுந்தரம் அருமைநாயகம்** அவர்களிடம் கையளிக்கப்பட்டது.



# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்"

## 'கூடல்' குடும்ப (செயற்குழு) உறுப்பினர்கள் விபரம் – 2017

**காப்பாளர்** : **பேராசிரியர் சி.மௌனகுரு**

45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை, மட்டக்களப்பு. 0773405414, 0652223053

**துணைக் காப்பாளர்** : **எஸ்.எதிர்மன்னசிங்கம்**

22, 5ம் குறுக்கு, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு. 0772029888

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ. பே. எண் |
|---|---|---|---|
| 1 | தம்பியப்பா கோபாலகிருஸ்ணன். **(தலைவர்)** | 607, பார்வீதி, மட்டக்களப்பு. | 0771900614 |
| 2 | அ.அன்பழகன் குரூஸ். (JP) **(செயலாளர்)** | 45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0777492861 |
| 3 | ச.ஜெயராஜா. (பொருளாளர்) | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0777249729 |
| 4 | மாணிக்கப்போடி சதாசிவம். (JP) (துணைத்தலைவர்) | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0757735507 |
| 5 | செல்வி. கதிராமன் தங்கேஸ்வரி. **(துணைத்தலைவர்)** | 268/26, பார் வீதி, மட்டக்களப்பு. | 0776854619 |
| 6 | சி.சாமித்தம்பி. **(துணைத்தலைவர்)** | 32/2, கண்ணகியம்மன் கோவில் வீதி, தாண்டவன்வெளி, மட்டக்களப்பு. | 0772933537 |
| 7 | கதிரவன் த.இன்பராசா | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0754265201 |
| 8 | ச.மதன் | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0773620328 |
| 9 | திருமதி. சுந்தரமதி வேதநாயகம். **(துணைச்செயலாளர்)** | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0652225090 |
| 10 | அ.செல்வேந்திரன் | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. | 0773618402 |
| 11 | சட்டத்தரணி கி. துரைராசசிங்கம். | 73, வாவிக்கரைவீதி-1, மட்டக்களப்பு. | 0718497158 |
| 12 | க. செல்வாநந்தம். | 10, சிவன்கோவில் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. | 0771272984 |
| 13 | ச.தெய்வேந்திரன் | 394/42A, நாகதம்பிரான் கோவில் வீதி, ஞான சூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | 0777917577 |
| 14 | க.டனிஸ்கரன். | 111, அருச்சுனர் வீதி, பாண்டிருப்பு-1, கல்முனை. | 0778511890 |
| 15 | வெ.ஜெயநாதன். | 157, விஷ்னு கோயில் வீதி, காரைதீவு. | 0672250442 |
| 16 | ஆர்.சயனொளிபவன் | 90, கண்ணகியம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0774368089 |
| 17 | எஸ்.பி.நாதன். | "பொதிகை", V.C. வீதி, தம்பிலுவில் -02. | 0779230682 |
| 18 | த.கைலாயப்பிள்ளை. | நாவலர் வீதி, விபுலாநந்த இல்லம், அக்கரைப்பற்று. | 0773664282 |
| 19 | வ.ஜயந்தன். | சந்தை முன் வீதி, தம்பிலுவில். | 0775024968 |
| 20 | ம.வேதநாயகம். | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0718112652 |
| 21 | செ.துரையப்பா. | 4, முதலியார் வீதி, மட்டக்களப்பு. | 0652222547 |
| 22 | த.அழகையா. (JP) | 14/10, கூழாவடி, மட்டக்களப்பு. | 0773599875 |
| 23 | காசுபதி நடராஜா. | 42, 2ம் குறுக்கு, கல்லடி வேலூர், மட். (34A ½ , Initium Rd, Dehiwala) | 0773247132 |
| 24 | செ.தபராசா | 17, நல்லையா வீதி, மட்டக்களப்பு. | 0652225848 |

| | | | |
|---|---|---|---|
| 25 | கதிர் பாரதிதாசன். | 15/4, அதிகார் வீதி, மட்டக்களப்பு. | 0770837335 |
| 26 | மண்டூர் அசோகா. | 8/22, பிள்ளையார்கோவில் கல்லடி, மட்டக்களப்பு. | 0771026140 |
| 27 | திருமதி. சி.ஞானசூரியம். | 25/2, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0771768830 |
| 28 | இ.பாக்கியராஜா | 10/4, 1ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0779068411 |
| 29 | க.சுதர்சன் | தலைவர் வீதி அக்கரைப்பற்று - 08 | 0774004984 |
| 30 | இ.தேவராசா | வில்லியம் பிள்ளை வீதி, தம்பிலுவில்-01. | 0672265294 |
| 31 | அ.குலேந்திரராஜா. | விபுலாநந்த வீதி, புதுக்குடியிருப்பு (கி.மா) | 0778163717 |
| 32 | ப.குணசேகரம். | வன்னியர் வீதி, களுதாவளை -01. | 0652250605 |
| 33 | தா.தங்கவேல். | பண்டிங்ஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு. | 0773444124 |
| 34 | கா.இராமச்சந்திரன். | விஷ்ணுவித்தியாலய வீதி, வந்தாறுமூலை | 0773620328 |
| 35 | மு.மகேந்திரராசா. | பழைய டி.ஆர்.ஓ ஒழுங்கை, செங்கலடி. | 0779415620 |
| 36 | மா.சசிகுமார் | 114/1. ஜெயந்தி வீதி, ஜெயந்திபுரம். மட்டக்களப்பு. | 0772350374 |
| 37 | ஞா.சிறிநேசன் | 56/03, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0766648048 |
| 38 | சு.முருகேசபிள்ளை. | 65/14, கூளாவடி வீதி, மட்டக்களப்பு. | 0776166711 |
| 39 | திருமதி. சரஸ்வதி விஜயநாதன். | பிரதான வீதி, ஆரையம்பதி. | 0772768072 |
| 40 | மூ.சிவாநந்தராஸஜா. | 141/5, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு. | 0775155903 |
| 41 | தி.புலேந்திரகுமார். | கன்னன்குடா, மட்டக்களப்பு. | 0776966786 |
| 42 | பொறியியலாளர் வ.கருணாநாதன் | சாண்டோ சங்கரதாஸ் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு. | 0773876361 |
| 43 | வைத்திய கலாநிதி க.முருகானந்தன் | 10/15, அரச விடுதி ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு. | 0714471081 |
| 44 | பொறியியலாளர் செ.திலகராஜா | விபுலாநந்தவீதி, காரைதீவு - 06. | 0777580171 |
| 45 | பொறியியலாளர் அரிமா P.D.A ஜெயக்குமார் | 06, கிளனி ஒழுங்கை, மட்டக்களப்பு. | 0779771600 |
| 46 | க.தவராஜா | 515/41, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0752869984 |
| 47 | வி.ரஞ்சிதமூர்த்தி | 130/01, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0777589711 |
| 48 | மா.திருநாவுக்கரசு | நாவலர் வீதி, குருக்கள்மடம். | 0652250292 |
| 49 | மு.விநாயகமூர்த்தி | 191/23, பார்வீதி, மட்டக்களப்பு. | 0776044810 |
| 50 | திருமதி. பிரியா கருணாகரன். | 8/21, 1ம் குறுக்கு. பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0770303550 |
| 51 | சிவ. வரதகரன் | 163, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0771530901 |
| 52 | இரா.கலைவேந்தன் | 71, தண்ணீர்க் கிணற்றடி வீதி, பாலமீன்மடு, மட்டக்களப்பு | 0776746922 |
| 53 | சௌந்.லெனாட் லோரன்ஸோ | தாழங்குடா. | 0772276543 |
| 54 | ஜீ.எழில்வண்ணன். | 32/2, கூட்டுறவுக் கடை வீதி, கிரான்குளம். | 0771995932 |
| 55 | திருமதி. கயல்விழி வினோதரன். | பேத்தாழை, வாழைச்சேனை. | 0775113174 |
| 56 | ஆ.தனுஷ்கரன் (சோலையூரான்) | கொக்கட்டிச்சோலை. | 0779008943 |
| 57 | செ.துஜியந்தன். | கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு. | 0754303309 |
| 58 | த.அமர்நாத் | 'பேரின்பகம்', விபுலாநந்த வீதி, வாழைச்சேனை. | 0772288383 |
| 59 | மா.தவராஜா. | தபாற்கந்தோர் வீதி, கிரான். | 0773821575 |
| 60 | து.நகுலேஸ்வரன். | 218, சர்வோதய வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0776168859 |
| 61 | ச.கதிரவன். | பிரதான வீதி, கிரான். | 0779351371 |
| 62 | க.ஜெகதீஸ்வரன். | 134, இந்துக் கல்லூரி வீதி, வாழைச்சேனை. | 0777756474 |

# முரசம்



**இலக்கிய ஆர்வலர்கள் இணைந்தொன்றாய்க் கூடி**
**சிலப்பதி காரசீர் கண்ணகி சிறப்பை**
**முழங்கிடக் கூறும்கலை இலக்கிய விழாவை**
**பழமைபுகழ் மட்டுநகர் புதுக்குடி யிருப்பு**
**அழகுமிகு அக்கரைப் பற்றுதம் பிலுவில்**
**வழக்காறு வந்தாறு மூலைகன் னன்குடா**
**வளமிகு தென்கோறளைப் பற்று கிரானென்று**
**கிழக்கிலே ஏழாண்டாய் கிளர்ந்தெழச் செய்தோம்.**

வரலாற்றுச் சிறப்புமிக்க "கோராவெளி கண்ணகை அம்மன்" ஆலயம் அமையப் பெற்ற கிரானில் (கோறளைப்பற்று தெற்கு) காலடி பதிக்கும் கண்ணகி கலை இலக்கிய விழாவில் மீள்பதிப்பாகிய "கண்ணகி வழக்குரை" வெளியிடப்பெறுகின்றமையானது காரைதீவுக்கு அடுத்தபடியாக கிரானுக்கு புகழாரம் சூட்டுகின்றது.

கண்ணகி கலை இலக்கிய விழா, பண்பாட்டு எழுச்சிக்கான விருட்சமாய் மக்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. தமிழ் சமூகத்தின் பாரம்பரியங்களை, பண்பான வாழ்க்கை முறையினை பக்குவமாக கண்ணகி சார்ந்த கதைகள் எடுத்தியம்புகின்றன. இக்கதைகளின் வழியாக கலை, இலக்கியங்களை, தமிழர் கலாசாரங்களை பறைசாற்றி மீளச்சொல்லி மக்கள் மயப்படுத்துகின்ற கைங்கரியத்தினை முன்னெடுக்கின்ற போது தமிழர் பண்பாட்டு அடையாளங்கள் பாதுகாக்கப்பெறும்.

கூத்து, கரகம், கும்மி, கொம்பு முறிப்பு, குரவை இவைகளெல்லாம் என்ன? என்று கேட்கும் நிலையிலும் எமது இளஞ்சமுதாயம் இருக்கின்றது. களியாட்டத்திற்கான மேலைத்தேய இசைநிகழ்வுகளும் "றம்செற்" வாத்திய இசைக்கான ஆட்டங்களும் எமது கலை எனக் கருதும் சூழல் உருவாகாமல் தடுத்து, மாற்றத்தை தோற்றுவிக்கும் பாரம்பரிய கிராமியக் கலைகளை இவ்விழாவில் ஆற்றுப்படுத்துகின்றோம். மாணவர்களின் கலையுணர்வும் இலக்கிய ஆற்றலும் இதனால் மேலோங்குகின்றது.

கண்ணகை அம்மன் வழிபாடு - கண்ணகி கலை இலக்கிய வெளிப்பாடு இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாட்டினை உணர்ந்து கொள்ள வேண்டும். வைகாசி பிறந்தால் கண்ணகை அம்மனுக்கு ஊரூராய் சடங்கெடுத்து மெய்யுருகி பயபக்தியுடன் வழிபடும் மரபு ஒருபக்கம். கண்ணகி தொன்மங்கள் சார்ந்து உருவான கலை இலக்கியங்களை ஆற்றுகை செய்து ஆற்றலை வெளிப்படுத்துவதுடன் அறிவினை வளர்த்துக் கொள்ளுதல் மறுபக்கம். இவையிரண்டுமே அம்மன் சடங்கில் காலங்காலமாக நடைபெறுகின்றன.

**"ஆலயத்திற்குள் வழிபாடு, அரங்கிலே வெளிப்பாடு"** இவ்வெளிப்பாடுகளை பண்பாட்டுப் பேரணியாக, ஆய்வரங்காக, இயலரங்காக, கலையரங்காக காட்சிப்படுத்தி சமூகத்தை எழுச்சி பெறச் செய்வதே கண்ணகி கலை இலக்கிய விழா. இதனையே கண்ணகி கலை இலக்கிய விழாப்பட்டயம் தெளிவுப்படுத்துகின்றது.

கடந்து வந்த ஏழாண்டுப் பயணத்தில் காலத்தால் அழியாத கலை - இலக்கிய மற்றும் கலாசார அம்சங்களை மக்கள் சார்ந்து ஆற்றல்மிகு ஆளுமைகளின் பதிவாக கூடல் ஆவணப்படுத்தியுள்ளது. பற்பல தேடல்களைச் சுமந்து, கன்னன்குடாவின் கனதிகளை உள்ளடக்கி, கிரானை அறிமுகப்படுத்தி கூடல் பரல் - 6 உதிக்கின்றது. இப்பிரசவத்திற்கு சுற்றி நின்று துணை புரிந்த கூடல் குடும்பத்தாரை மனதிலிருத்தி நிறைவடைகின்றேன்.

**கதிரவன் த. இன்பராசா**
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**

# கண்ணகி கலை இலக்கிய விழா 2017 – விழாக்குழு – கிரான்



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) :**

திரு. இ.நடராஜா , திரு. கி.சேயோன் , திரு. மு.முத்துமாதவன் , திரு. க.கிருஷ்ணபிள்ளை (ஆலோசகர்), திரு. மு.மகேந்திரராசா (துணைத்தலைவர்), திரு. து.நகுலேஸ்வரன் (செயலாளர்), திரு. மா.தவராஜா (தலைவர்), திரு. ந.கதிரவன் (பொருளாளர்), திரு. க.ஜெகதீஸ்வரன் (துணைச் செயலாளர்), திரு. க.பகீரதன், திரு. க.நடேசன், திரு. த. கணபதிப்பிள்ளை.

**பின்வரிசை (இடமிருந்து வலம்) :**

திருமதி. கயல்விழி வினோதரன், திரு. க.ருத்திரன், திரு. க.சௌந்தரராஜன், திரு. எ.ஜெயரஞ்சித், திரு. மு.சுப்பிரமணியம், திரு. க.செல்வராஜா, திரு. மு.கோகிலதாசன், திரு. சோ.பத்மயோகன், திரு. ந.விஜிந்தன், திரு. ம.செல்வகுமார், திரு. ம.சிவசுந்தரம் (நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்), திரு. ஆர்.இலங்கேஸ்வரன், திரு. கு.சுதாகரன், திரு. க.சிவப்பிரகாசம், திருமதி. கலைவாணி மகேந்திரன்.

## "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு - 2017



**முன்வரிசையில் அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக) :**
திருமதி. கயல்விழி வினோதரன், திருமதி. சரஸ்வதி விஜயநாதன், வ.கருணாநாதன், மா. சதாசிவம். (JP) (துணைத்தலைவர்), ஞா.ஸ்ரீநேசன், தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் (தலைவர்), செ.எதிர்மன்னசிங்கம் (துணைக் காப்பாளர்), சட்டத்தரணி கி. துரைராசசிங்கம், செ.திலகராஜா, திருமதி. சுந்தரமதி வேதநாயகம் (துணைச் செயலாளர்), திருமதி. பிரியா கருணாகரன்.

**நடுவரிசை (இடமிருந்து வலமாக) :**
பாலமீன்மடு இரா கலைவேந்தன், ச.ஜெயராஜா (பொருளாளர்), மா.தவராஜா, தா.தங்கவேல், மா.திருநாவுக்கரசு, த.அழகையா, க.தவராஜா, கா.இராமச்சந்திரன், ச.தெய்வேந்திரன், மூ.விநாயகமூர்த்தி, து.நகுலேஸ்வரன், செ.தபராசா, ச.கதிரவன், ம.வேதநாயகம், மாணிக்கப்போடி சசிகுமார்.

**பின்வரிசை (இடமிருந்து வலமாக) :**
கதிரவன் த. இன்பராசா (தொகுப்பாசிரியர்), ச.மதன், அ.அன்பழகன் குரூஸ்.(JP) (செயலாளர்), சு.முருகேசபிள்ளை, சிவ. வரதகரன், அ.குலேந்திரராசா, த.அமர்நாத், தீ.எழில்வண்ணன், வெ.ஜெயநாதன், மூ.மகேந்திரராசா, க.டணிஸ்கரன், ஆர்.சயனொளிபவன்.




## நிகழ்ச்சித் தொகுப்பு

2016 ஜூன் 25, 26 ஆகிய தினங்களில் மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைமேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் (வவுணதீவு) மட்/ம.மே/ கன்னன்குடா மகா வித்தியாலய கன்னல் அரங்கிலே நடைபெற்ற ஆறாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான "கண்ணகி கலை இலக்கிய விழா - 2016" இன் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

- தொகுப்பாசிரியர் கதிரவன் த.இன்பராசா

# கண்ணகி கலை இலக்கிய விழா 2016

கன்னன்குடா



## 25 ஜூன் 2016, சனிக்கிழமை – முதலாம் நாள் காலை

### தொடக்கவிழா (காலை 6.30 – பி.ப. 1.00)

**பண்பாட்டுப் பவனி. (காலை 06.30 – 09.00)**

பண்பாட்டுப் பவனியின் ஒரு அணி ஈச்சந்தீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து விழாக்குழுத் துணைத்தலைவர் திரு.ஞா. ஸ்ரீநேசன் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களின் தலைமையிலும்.....

**பண்பாட்டுப் பவனி –** ஈச்சந்தீவு







மற்றொரு அணி பருத்திச் சேனையிலிருந்து விழாக்குழுத் துணைத்தலைவர் **திரு.சு.முருகேசபிள்ளை** (உதவிக் கல்விப்பணிப்பாளர்) அவர்களின் தலைமையிலும்.....

## **பண்பாட்டுப் பவனி –** பருத்திச்சேனை








இன்னுமொரு அணி மட்டக்களப்பு - தாண்டவன்வெளி - குளக்கட்டு (பூம்புகார்) ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து கலாநிதி அரிமா அ.செல்வேந்திரன் அவர்களின் தலைமையிலும் புறப்பட்டு

## **பண்பாட்டுப் பவனி** – மட்டக்களப்பு







குறிஞ்சாமுனை காளி அம்மன் ஆலய முன்றலில் ஒன்றிணைந்து

## பண்பாட்டுப் பவனி – குறிஞ்சாமுனையில் ஒன்றிணைவு







கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலயத்தை அடைந்து பூஜையின் பின்.....







அங்கிருந்து விழா மண்டபத்தை (மட் / ம.மே / கன்னன்குடா மகா வித்தியாலயம்) வந்தடைந்தது.

**பண்பாட்டுப் பவனி இணைப்பாளர்கள்**

**ஈச்சந்தீவு**
- திரு.சி. லுகன்
- திரு.தி. தேவநிதி

**பருத்திச்சேனை**
- திரு.க. புவிக்குமார்
- திரு.இ. நாகலிங்கம்

**பூம்புகார், மட்டக்களப்பு**
- திரு.ச. தெய்வேந்திரன்
- திரு.த. அழகையா



**கள ஆற்றுகை (காலை 09.00 - மு.ப 09.15)**


கன்னன்குடா கண்ணகி அம்மன் வசந்தன் கூத்து

**நெறியாள்கை:** ❖ திரு.மு. யோகானந்தராஜா ❖ திரு.வீ. கனகரட்ணம் ❖ திரு.இ சதுஜன்





நுழைவாயில் கோலம்



பேராளர் பதிவு



## காலை அமர்வு (மு.ப 09.15 – பி.ப 01.00)

## "கூலவாணிகன் சாத்தனார் அரங்கு"

### மாங்கல விளக்கேற்றல்

முதன்மை அதிதிகள்



திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்
(பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டு, அலுவல்கள் திணைக்களம்)




பேராசிரியர் மா. செல்வராசா
(காப்பாளர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்)

சிறப்பு அதிதிகள்



திரு. சி. சுதாகர்
(பிரதேச செயலாளர், மண்முனை மேற்கு)



ஈசான சிவாச்சாரியார் ஆச்சாரிய கலாபூஷணம்
இரா கு. அருளானந்தம் குருக்கள்
(பிரதமகுரு, ஈச்சந்தீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்)



திரு. மா. பரராசசிங்கம்
(தலைவர், ஈச்சந்தீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)



திரு. க. விமலநாதன்
(தலைவர், கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலயம்)



சைவப் புரவலர்
திரு. **வி. ரஞ்சிதமூர்த்தி**
(பொருளாளர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்)



திரு. **ரவி தமிழ்வாணன்**
(நிர்வாக இயக்குநர் - மணி மேகலை பிரசுரம், சென்னை, இந்தியா)



திரு. **ஞா. ஸ்ரீநேசன்**
(விழாக்குழுத் துணைத்தலைவர்)



செங்கதிரோன்
**த.கோபாலகிருஷ்ணன்**
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)




**வரவேற்பு நடனம்**
**செல்வி. அனுஜா வேதநாயகம்**
(திருச்சி கலைக்காவேரி கல்லூரி, தமிழ் நாடு, இந்தியா)



**இறைவணக்கம்**
**செல்வன். நல்லரெட்ணம் டிஷாந்**
(கன்னன்குடா மகா வித்தியாலய மாணவன்)



**தமிழ்மொழி வாழ்த்து**
(கன்னன்குடா மகா வித்தியாலய மாணவிகள்)



**விழாக் கீதம்**
திரு. **ச.செல்வபிரகாஷ்**



**வரவேற்புரை**

திருமதி. சரஸ்வதி விஜயநாதன்

(விழாக்குழுத் துணைத்தலைவர்)



**அரங்க அறிமுகம்**

இணைப்பாளர் திரு.மா. சசிகுமார்

(விழாக்குழுப் பொருளாளர்)



**கண்ணகி இலக்கிய விழாப்பட்டயம் வாசித்தல்**

திருமதி. சுந்தரமதி வேதநாயகம்

(துணைச்செயலாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



**தொடக்கவுரை**

செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்

(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



**தலைமையுரை**

ஞா. ஸ்ரீநேசன் (விழாக்குழுத் துணைத்தலைவர்)



# தொடக்கவுரை

**செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்**
**(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)**

2016 ஜுன் 25,26ம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டம், கன்னன்குடாவில் நடைபெற்ற ஆறாவது கண்ணகி இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கிய விழா -2016' இன் முதல் நாள் காலை அமர்வில் **'கூலவாணிகன் சாத்தனார்'** அரங்கில் கண்ணகி கலை இலக்கியக் கூடல் தலைவர் **செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்** அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை.

இயந்திர நாகரிகத்தால் கற்பழிந்துவிடாத மட்டக்களப்புப் படுவான்கரைப் பிரதேசக் கிராமமான வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதநில மண் கன்னன்குடாவிலே நடைபெறுகின்ற ஆறாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கியவிழா -2016' இன் தொடக்க விழா அரங்கான கூலவாணிகன் சாத்தனார் அரங்கின் தலைவர் அவர்களே!

அரங்கை அணி செய்கின்ற முதன்மை அதிதிகளே! சிறப்பு அதிதிகளே! அரங்கில் நிகழ்ந்த மற்றும் நிகழவிருக்கின்ற நிகழ்வுகளின் ஆற்றுகையாளர்களே! அவையில் நிறைந்திருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்களே! ஊடகவியலாளர்களே! அனைவருக்கும் இனிய காலை வணக்கங்கள்.

**திருமாமணி நங்கை வந்தாள்! : எங்கள்**
**தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!!**

அன்பானவர்களே!

ஒரு தேசிய இனத்தின் அடையாளம் மொழியேயாகும். அம்மொழியின் இருப்பை வெளிப்படுத்துவன அம்மொழியில் எழுந்த கலை இலக்கியங்களே. ஒரு தேசிய இனம் வாழும் போதுதான் அம்மொழியும் அம்மொழியில் எழுந்த கலை இலக்கியங்களும் வாழும்: வளரும். மறுதலையாகக் கலை இலக்கியங்கள் வாழும் போதுதான் அக்கலை இலக்கியங்கள் எழுந்த மொழிக்குரிய தேசிய இனமும் வாழும்:வளரும். எனவே ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கு அத்தேசிய இனத்தின் மொழியும் அம்மொழியில் எழுந்த கலை இலக்கியங்களும் அக்கலை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்ற பண்பாட்டு விழுமியங்களும் பேணிப்பாதுகாக்கப் பெற்று வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

அண்மையில் வெளியிடப்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்றில் பன்னாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளினால் இன்னும் சிலகாலங்களில் உலகில் இன்று வழக்கிலுள்ள இருபத்தைந்து மொழிகள் காணாமல் போகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதில் தமிழ் எட்டாவது இடத்தில் உள்ளது எனவும் அறியக் கிடக்கிறது.

ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் சரியா? பிழையா? அது நடக்குமா? நடக்காதா? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் நாம் சிந்திக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. அது என்னவெனில், இன்றைய தமிழ்ச்சூழலில் கைத்தொழிற் புரட்சிகளினால் ஏற்பட்ட இயந்திர நாகரிகம் - நுகர்வுக் கலாசாரம் - திறந்த பொருளாதாரம் - உலகமயமாக்கம் - தகவல் தொழிநுட்பத்தின் அதீத வளர்ச்சி – பல் தேசியக் 'கொம்பனி'களின் வணிகச் செயற்பாடுகள் போன்ற புறத்தாக்கங்களினால் கற்பழிந்து விடாமல் எமது மொழியையும் அம்மொழியின் முதுசொம்களான கலை இலக்கியங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் காப்பாற்றிப் பேண வேண்டிய தேவை இருக்கிறது என்பதுதான்.

நமது கலை இலக்கிய வடிவங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் அருகிவிடாமலும் - அழிந்து விடாமலும் பாதுகாப்பது மட்டுமல்ல 'நவீன மயமாக்கம்' என்ற போர்வையில் அவை சிதைந்துவிடாமலும் இருக்கவும் சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

இத்தகைய சிந்தனைப் பின்புலத்திலேதான், மேற்கூறப்பட்ட ஐ.நா அறிக்கை வெளியிடப் பெறுமுன்னரே 2011இலிருந்து கண்ணகி கலை இலக்கிய விழாக்களை வருடம் தோறும் வெவ்வேறு இடங்களில் நடாத்தி வருகிறோம்.

2011இல் மட்டக்களப்பு நகரிலும் - 2012இல் மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பிலும் - 2013இல் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பிலும் - 2014இல் அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலிலும் - 2015இல் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையிலும் நடைபெற்று அதன் தொடர்ச்சியாக ஆறாவது கண்ணகி கலை இலக்கிய விழா இவ்வருடம் கன்னன்குடாவில் கால் பதித்துள்ளது.

கண்ணகி கலை இலக்கிய விழாக்களின் பிரதான நோக்கம் தமிழ்ச்சமூகத்தைக் குறிப்பாகக் கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகத்தைச் சாதி, மத, பிரதேச, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அவர்களைச் சமூக - பொருளாதார - கல்வி - கலை - இலக்கிய - ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அறிவு பூர்வமாக ஆற்றுப்படுத்துவதாகும்.

கன்னன்குடா மகாவித்தியாலய கன்னல் கலை அரங்கிலே இவ்வருடக் கண்ணகி கலை இலக்கிய விழா நடைபெறுகின்ற இச்சந்தர்ப்பத்திலே கன்னன்குடா மண்ணின் மைந்தன் அமரர் க. ஆறுமுகம் அவர்களை நினைவு கூருகின்றேன். இன்றைய காலை அமர்வான தொடக்கவிழா நிகழ்ச்சி நிரலில் அன்னாருடைய நினைவுப் பரவல் நிகழ்ச்சியும் இடம்பெற்றுள்ளது. கண்ணகி கலை இலக்கிய விழாவுக்குக் கால்கோள் இட்டவர்களுள் அவரும் ஒருவர்.

கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் வெறுமனே கூடிக்களிக்கும் அல்லது கூடிக்கலையும் கேளிக்கை நிகழ்வுகள் அல்ல. மக்களுக்கு விழிப்புணர்வூட்டி – மக்களை அறிவூட்டி அவர்களைப் புதிய சிந்தனை வெளிக்கு இட்டுச் செல்லும் ஓர் சமூக அசைவியக்கமாகவே கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் விழாக்களோடு மட்டும் நின்று விடாமல் - கலை இலக்கியச் செயற்பாடுகளோடு மட்டும் எம்மைக் கட்டுப்படுத்தாமல் சமூக - பொருளாதார - கல்வி - சூழல் பாதுகாப்பு மற்றும் – வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க நாம் எண்ணம் கொண்டுள்ளோம். கண்ணகி கலை இலக்கியக் கூடலை ஒரு பாரிய பண்பாட்டு நிறுவனமாகக் கட்டியெழுப்பி அதனூடாகவே மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எதிர்காலத்தில் எமது செயற்பாட்டுடன் இணைந்துகொள்ளும் படி இங்குள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ஒன்றிணைந்த கூட்டுச் செயற்பாடுகள் மூலமே எமது சமூகத்தை உயர்வடையச் செய்ய முடியும். பிரிவினைகளும், பேதங்களும், தற்பெருமைகளும், தன்னலம் மட்டுமே கருதும் தன்னிச்சையான செயற்பாடுகளுமே எம்மைப் பின்தள்ளும் காரணிகளாகும். இன்றைய தமிழ்ச்சூழலின் அவசரத் தேவை உணர்ச்சியைக் குறைத்து உண்மையைத் தேடுவதேயாகும்.

பாண்டியன் நெடுஞ்செழியன் உண்மையைத் தேடாது உணர்ச்சிக் கொந்தளிப்பில் நிரபராதி ஆன கோவலனைக் கள்வன் என்று அவசரப்பட்டுத் தவறான முடிவை மேற்கொண்டதாலேயே அவனுடைய அரசு நீதி வழுவவும் - அதன் விளைவாக அவனும் அவனுடைய மனைவியும் உயிர் துறக்கவும் - இறுதியில் மதுரை மாநகரம் எரியவும் ஆன அழிவு ஏற்பட்டது. இது சிலப்பதிகாரம் நமக்குத் தருகின்ற செய்திகளில் ஒன்று. அதனால்தான் உணர்ச்சியைக் குறைத்து உண்மையைத் தேடுங்கள் என்றேன். அன்பானவர்களே!

- ❒ கலை இலக்கியங்களினூடாக சமூக மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாக மனித மனங்களைச் செழுமைப்படுத்தி மனித உறவுகளையும் மனித விழுமியங்களையும் கட்டியெழுப்புவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாகப் பொருளாதாரவளங்களை மேம்படுத்துவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாக ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்துவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாக இயற்கை அனர்த்தங்களினாலும் யுத்தக் கொடுமைகளினாலும் ஏற்பட்ட அவலங்களினால் நொந்து போயுள்ள மனித மனங்களை ஆசுவாசப்படுத்துவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாகப் பண்பாட்டுத்தளமொன்றில் ஒன்றிணைவோம்!
- ❒ கலை இலக்கியங்களினூடாக அறிவார்ந்த சமூகமொன்றை நிர்மாணம் செய்வோம்!

இப்பாரிய பணிகளையெல்லாம் மேற்கொள்ள **'கண்ணகி கலை இலக்கியக்கூடல்'** காத்திருக்கிறது. மனித வளம் எம்மிடம் உண்டு. பொருள் வளப் பற்றாக்குறையே எம்முன்னால் உள்ள சவால். இங்கு கூடியுள்ள அனைவரிடமும் ஓர் அன்பான வேண்டுகோள். எம்மால் திட்டமிடப்பட்டுள்ள பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க எமக்குக் கை கொடுங்கள். நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தும் - நிதி குறைந்தவர் காசுகள் தந்தும் - ஆண்மையாளர் உழைப்பினை நல்கியும் - அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளியும் இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்!

நிறைவாக இவ்விழாவினை இத்தனை சிறப்புறக் கட்டமைத்த விழாக்குழுவின் தலைவர், செயலாளர் உட்பட்ட அனைத்து விழாக்குழு மற்றும் உபகுழு உறுப்பினர்களுக்கும் குறிப்பாக இவ்விழாவின் நெம்புகோலாக நின்று சுழன்று பணியாற்றும் விழாக்குழுப் பொருளாளர் தம்பி சசிகுமார் மற்றும் விழா அரங்குகளைச் சிறப்பாக ஒழுங்கமைத்து 'சொல்லாமலே பெரியர்' ஆகச் செயற்படும் கன்னன்குடா மகாவித்தியாலய அதிபர் புலேந்திரகுமார் ஆகியோருக்கும் விழாச் செலவுகளைத் தாங்கி நிற்கும் அனுசரணையாளர்களுக்கும் பேராளர்களுக்கும் குறிப்பாக 'கூடல்' பரல் - 5 விழாமலரின் அனுசரணையாளர்களான ஞா.ஸ்ரீநேசன் மற்றும் கிரிதரன் ஆகியோருக்கும் விருந்தோம்பல் பொறுப்பை ஏற்று விழாவைச் சிறப்பித்துள்ள ஈச்சனத்வு ஸ்ரீ கண்ணகை அம்மன் மற்றும் மற்றும் கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினருக்கும் கண்ணகி கலை இலக்கியக்கூடல் தாய்ச்சங்கத்தின் சார்பில் நன்றிகள். இவ்விழா சிறப்புறப் பங்களிப்புக்களை நல்கிய மட்டக்களப்புப் படுவான்கரைப் பிரதேசக் குறிப்பாக மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊர் மக்களின் உழைப்புக்கும் ஒத்தாசைக்கும் தலை வணங்கி எனது தொடக்கவுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி. வணக்கம்.



# தலைமையுரை

**ஞா. ஸ்ரீநேசன்**

**(விழாக்குழுத் துணைத்தலைவர்)**

கண்ணகி கலை இலக்கியக் கூடல் தலைவர் அவர்களே!
இன்றைய விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற முதன்மை அதிதி அவர்களே!
கௌரவ அதிதிகளே! சிறப்பு அதிதிகளே!
பேராளர்களே! பெரியார்களே !
இலக்கியவாதிகளே! இலக்கியப்பிரியர்களே!
கலைப்பிரியர்களே! ஊடகவியலாளர்களே!

வணக்கம்,

பிறப்பு, இறப்பு என்கின்ற முகவுரைக்கும், முடிவுரைக்கும் இடையில் மனித வாழ்க்கை அமைந்துள்ளதை யாமறிவோம். அப்படியான அவதரிப்புக்கும் அஸ்தமனத்திற்கும் இடையில்தான் வாழ்க்கை என்ற பயணம் அமைந்துள்ளது. இந்தப் பயணத்தில் மறக்கமுடியாத மனிதர்களாக, தெய்வங்களாக வாழ்க்கை பயணத்தின் ஊடாக நிலைத்து நிற்கின்ற பிறவிகளும் உள்ளனர்.


அப்படியானவர்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். அவர்களில் ஒருவராக நாம் கண்ணகியாளைப் பார்க்கமுடியும். எப்படியும் வாழலாம் என்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதிகள், நியமங்களுக்கு உட்பட்டு வாழ வேண்டியவர்களே மனிதர்களாகும். அப்படியான உயர்விழுமிய வாழ்க்கையினை வாழ்ந்து காட்டியவராக கண்ணகி காணப்படுகின்றார். ஒழுக்க நெறியோடு உன்னதமான வாழ்வை வாழ்ந்து காட்டியவராகவும், மனிதரும் தெய்வமாகலாம் என்பதற்கு வழிகாட்டியாகவும் கண்ணகி திகழ்கிறார். மனிதனாக பிறந்து, மிருகத்தனமாக வாழ்கின்றவர்களும் இன்று காணப்படுகின்றனர். அவர்கள் மத்தியில் மனிதனும் தெய்வமாகலாம் என்பது நினைக்க முடியாத அடைவாகும். அந்த அடைவை அடைந்தவர்களில் ஒருவராகக் கண்ணகியை நாம் பார்க்கின்றோம்.

பக்திக்கு ஒரு பாத்திரமாக, இலக்கியத்திற்கு ஒரு பாத்திரமாக கண்ணகி விளங்குகின்றார். கண்ணகி பிறந்த தமிழினத்தைச் சார்ந்து நாம் பிறந்ததனால் நாமும் பெருமை யடைகின்றோம். இப்படியான இலக்கியப் பாத்திரத்திற்கு நாம் விழா எடுப்பதனால் நாமும் பெருமையடைகின்றோம். இந்த இடத்தில் கண்ணகி கலை இலக்கியக் கூடல் அமைப்பினருக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இந்த ஆறாவது கண்ணகி இலக்கிய விழாவினை மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில், கன்னன்குடாக் கிராமத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைத்த அனைத்து அன்பு நெஞ்சங்களையும் பாராட்டுகின்றேன்.

நல்லவற்றை விதைப்போம், நல்லவற்றை அறுவடை செய்வோம், நல்லவற்றையே மக்களுக்கு அளிப்போம்.

நன்றி.

உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்த கண்ணகி கலை இலக்கியக் கூடலின் துணைத்தலைவரும் கண்ணகி கலை இலக்கிய விழா 2016, கன்னன்குடா விழாக்குழுத் தலைவருமான செல்வி க.தங்கேஸ்வரி அவர்கள் திடிரென்று சுகயீனமுற்று கொழும்பில் மருத்துவ சிகிச்சை பெறும் நிலையில் - விழாவுக்குத் தலைமை வகிக்க முடியாத நிலையில் - அவர் அனுப்பிய செய்தி.



(17)B

ககக. ஆடித்திங்கள் பேரிருள் பக்கத்து
அழல் சேர் குட்டத்து அட்டமி ஞாயிறு
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் பத்தினியோடு அரசு கேடுறும்
(இது சிலப்பதிகாரம் அழற்படு காதை வரி 4270 - 4271)


இது மதுரை தீப்பற்றி எரிவது பற்றிய நிகழ்வைச் சொல்.
ஒன்றிலேயே மதுரை மூதூர் தீப்பற்றி எரிந்தது,
வெப்பத்தின் தீவிரத்தால் விரிந்தது, ஒரு முலை திருகி
இது மா பத்தினிக்கு உயர்வை உணர்வது, மதுரையின்
அவலமும் சொல்லப்படுகிறது. குற்றத்தின் இழைத்த தீர்ப்பது.
ஆடித்திங்கள் தோறும் மாரிவிழா கொண்டாடப்படுகிறது.
என சிலப்பதிகாரம் மூலம் அறிய முடிகிறது.
சேரன் செங்குட்டுவன் கோமாதேவி கோட்டம் கொண்டாடி
விழா எடுத்தான். பாண்டிய நாடு மழை இன்றி வறுமை
வாடி, வெப்பு நோய் தோன்றிய போது
கொற்கையிலிருந்து வெற்றிவேல் செழியன் வேள்வி
செய்ய மழை பெய்தது.
கஜவாகு மன்னன் நாடுபதி (இலங்கை) கோட்டமும் எடுத்து
ஆடித்திங்கள் பாத விழா எடுத்து - மாரி பெய்வித்தது.
சோழன் பெருங்கிள்ளி - பத்தினிக் கோட்டம் அமைத்தான்.
இவை எல்லாமே அன்று நடந்தது.
இன்று நாம் காண்பது பக்தியுடன்
கூழ் வழிபாடு. பால், பழம், பரப்பு மாவு பொங்கலுடன்
கூடிய பக்தி வழிபாடு.

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**

முன்னாள் பொருளாளர் / துணைத்தலைவர்

**அமரர். க.ஆறுமுகம் அவர்களின் நினைவுப்பரவல்**






பூமாலை: செல்வி **சாகின்யா ஆறுமுகம்**



# பாமாலை

## கவிக்கோ வெல்லவூர்க் கோபால்



**வ**ந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்!
இந்த விழாவதனை எடுக்கின்ற
கண்ணகி விழாக் குழுவின்
இனியபணி வாழட்டும்!

கன்னன்குடா! வங்கக் கடலின் அலைக்கரத்தில்
வாவிமகள் கட்டிய அழகான தொட்டில்.
செந்தமிழ்ப் பாட்டொலிக்கச் சீதளத்துத் தென்றல்
வந்து வந்து மோதும்.
வட்டுநிறைத்து மதாளித்த தென்னைகளோ
வான்பரப்பி நிற்கும்.
பச்சை நிறைத்த பசிய வயல் பரப்பை
பார்த்தாலே இச்சையெழும்.
எழுவானும் படுவானும் இணைந்து சதிராட
எழுந்தாளக் கட்டுக்கு
கால் சலங்கை கொஞ்சும்.
வட்டக் களரியிட்டு வாகாய் அமர்ந்து கண்
கொட்டாது இரவெல்லாம் குதூகலிக்க நெஞ்சமெல்லாம்
பட்டாம் பூச்சிகளாய் பறந்தவர்கள் இவ்வூரார்!

வந்தாரை வரவேற்று வண்ணப்பன் பாய்போட்டு
சொந்தம் குலாவி சுகதுக்கம் கேட்டறிந்து
செம்பிலே நீர்வைத்து சேவரக்கால் வட்டில் வைத்து
சம்பா அரிசிகொண்டு சமைத்தவெண் சோறிடுவார்.

கண்ணகித் தெய்வத்தின் காலடியே தஞ்சமென
வாழ்ந்திருக்கும் மக்கள், படுவான்
மண்ணீந்த பெரும் கொடைகள்!
இக் கன்னன்குடாவின்......
சிறப்புக்கு மேலும் சிறப்பூட்டவந்து
பிறந்தவன்நம் ஆறுமுகம் பெயருக்கும் அவன்சாட்சி!
எல்லோர்க்கும் நல்லவனாய் எல்லாம் உணர்ந்தவனாய்
பல்லோரும் ஏற்றப் பவனிவந்தான் இம்மண்ணில்!!
ஈழக் கீழ்வானின் இலட்சியப் பரம்பலிலே

கிளர்ந் தெழுந்த ஞாயிறவன்!
ஆழக் கதிர்பரப்பி அத்தனையும் சூடேற்றி
வாழும் பொதுப் பணியே வாழ்வான மாமனிதன்!

ஆறுமுகம்பற்றிச் சுருக்கமாகச் சொல்வதானால் - ஆறுமுகம்,
தன்னுழைப்பில் உயர்ந்ததனால் தலைவனானவன் - தனது
செல்வம் எல்லாம் பகிர்ந்ததனால் வள்ளலானவன்.
தன்னைத்தேடி வந்தவர்க்கு தங்கலானவன்.
தன்னைத் தந்து தன்னைத் தந்து தியாகியானவன் - பிறர்க்கு
இன்னலற்ற நல்வழியே இவனும் வாழ்ந்தவன்.
இன்றினிலே நாளையையும் இணைத்துக்கொண்டவன்.
அன்பு தர்மம் நிலைக்குமென்று நம்பி வாழ்ந்தவன் - இவன்
ஆருக்குமே பாரமின்றி வானுலகம் போனவன்.

ஓய்வென்றும் சாயாமல் நோயென்றும் வீழாமல்
தேய்வே அறியாத் திருமகனாய் இம்மண்ணில்
சுற்றித் திரிந்த இவன் சுகமான வரலாறு
இற்று விழுமுன்னே முற்றுப் பெறுமென்று
எண்ணி யிருந்தோமா? இல்லையே! சொல்லாமல்
கண்மூடிக் கொண்டானே! காலனவன் உள்ளிருந்து
மெல்லமெல்லத் தழுவி மேலழைத்துச் சென்றானோ?

நண்பா, ஊரென்றும் உறவென்றும் உற்றார் சுற்றமென்றும்
யாரென்றே அறியாமல் யாவிலுமே சால்பாகி
பேரென்ன செய்யும் நம் பின்முன்தான் என்செய்யும்
சேருமிடம் தேர்ந்தா தெரிந்துநீ போய்விட்டாய்?

காலச் சுமையாய் அதில் கனவுகளே பெருஞ்சுமையாய்
வாழ்வே சுமையாய் நாம் வாழ்ந்திருக்கும் வாழ்வியலின்
கோலச் சுமைவிட்டு நீ கூடழித்த மாயமது
நாளை எமக்கெனவுன் நாடகத்தை முடித்தாயோ?

மாதம் பதினாறு ஆனாலும் எம் துயரம்
மாளாது மாளாது மீளா உறவே நாம்
வாழும் வரையிந்த வையகத்தே உன்நினைவு
நெஞ்சிருக்கும் அந்த நினைவுக்குள் நீயிருப்பாய்

கண்திறந்த தாய்மண்ணில் கண்ணுறங்கும் உந்தனைநாம்
எண்ணாமல் இந்தவிழா எப்படித்தான் சிறப்படையும்.
முன்னீடு காரனென முன்னிற்க நீயில்லை.
என்பதனால் உன்னுருவை இங்கேநாம் முன்னிறுத்தி
அஞ்சலித்தோம் விழாசிறக்க ஆசியெமக்களிப்பாய்!

தன் தந்தைக்கு சாகின்யா மாலையிட்டாள் அத்
தருணத்தில் என்கண்ணுள் நீ நிறைந்து நின்றாய்!
மந்திரத்து தென்றலாய் உன்வரவைக் கண்டேன்!
மனதார நீயிருந்து வாழ்த்தக் காண்பேன்! இனி
மனதார நீயிருந்து வாழ்த்தக் காண்பேன்!

மனிதரை வெல்வதொன்றே மரணத்தின் மேன்மையாகும்
மனிதத்தின் பெருமையெல்லாம் மரணத்தை வெல்வதாகும்.
தனியொரு மனிதனாகி சமூகமாய் மாறிப்போன
புனிதனாம் ஆறுமுகம் புரவலன் வென்றுவிட்டான்!

வள்ளலே! இந்த வையத்துள் நீயென்றும்
வாழ்வாங்கு வாழ்ந்ததனால் வானுறையும் தெய்வத்துள்
மேலாம் பெரும்பேறாய் வீற்றிருத்தல் நிச்சயமே!
நாளும் பொழுதுமெம் நனவிடை தோய்ந்திருக்கும்
காலக்கொடையே உனைக் கண்ணீரால் அஞ்சலித்தோம்!



# நினைவுரை

## நீத்தார் பெருமை

**திரு.மா. சதாசிவம்**
**(துணைத்தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)**

## அமரர் க. ஆறுமுகம் அவர்கள்

மட்டக்களப்பு நகரின் மேற்குக் கரையில் வயல் சூழ்ந்த பழம்பெரும்கிராமம் கன்னன்குடா, இங்கே வைத்தியர் கணபதிப்பிள்ளை – பெரியபிள்ளை தம்பதிக்கு மூத்த மகனாக 1949-09-21 இல் அமரர் ஆறுமுகம் அவர்கள் பிறந்தார். இவருக்கு மூன்று தம்பிமார்களும் நான்கு தங்கைமார்களும் உடன் பிறந்தவர்கள். இவர் நற்பிட்டிமுனையில் சபாரெட்ணம் பூமணி தம்பதியின் புதல்வியான சாந்தினியை 1983 இல் திருமணம் செய்து "சாகின்யா" எனும் பெயர் கொண்ட பெண் குழந்தையின் தந்தையுமானார்.

அமரர் ஆறுமுகம் அவர்கள் கன்னன்குடா ஆரம்பப் பாடசாலையில் (தற்பொழுது மகா வித்தியாலயம்) ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். இப்பாடசாலையில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 1960 ஆண்டில் முதன் முதல் சித்தியடைந்த மாணவன் எனப் பெருமை பெற்றவர். இதனால் தனது இடைநிலைக் கல்வியை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் வாய்ப்பும் பெற்றார். 1966 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சசையிலும் 1968 இல் உயர்தரப் பரீட்சையிலும் சித்தியடைந்ததுடன், கொழும்பு விவேகானந்த சபை நடத்துகின்ற இந்து சமயபாடப் பரீட்சையில் முழு இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக தங்கப் பதக்கம் பெற்று கௌரவிக்கப் பெற்றார்.

க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவுடன் 1969 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் நியமனம் பெற்று வங்கிச் சேவையில் இணைந்து கொண்டார். அமரர் ஆறுமுகம் அவர்கள் ஆரம்ப தரத்திலிருந்து முகாமையாளர் தரம்வரை பதவி உயர்வு பெற்று சேவையாற்றியதுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற சிறந்த பணியாளனாகவும் இடம் பிடித்துக்கொண்டார். மட்டக்களப்பு, கல்முனை, காத்தான்குடி, காரைதீவு, ஏறாவூர், செங்கலடி, கொழும்பு போன்ற பல இடங்களில் பணி செய்தமையால் பலரது அறிமுகமும் பல நண்பர்களையும் பெற்றுக்கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் 1974 ஆம் ஆண்டு எனக்கும் அமரர் ஆறுமுகம் அவர்களுக்குமான தொடர்பு ஏற்படுகின்றது. 1975 ஆம் ஆண்டு சில காலம் மட்டக்களப்பில் நானும் அவரும் ஒரே அறையில் தங்கி இருக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இக்காலத்தில்தான் அவரை ஒரு மாற்றுச் சிந்தனையாளனாக இனம் கண்டு கொண்டேன். எனக்கும் அவருக்கும் மிகநெருக்கமான நட்பு ஏற்பட்டது. என்னைப்போல் மேலும் பல நண்பர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

1979 ஆம் ஆண்டில் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்திலும் வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்து 1980 ஆம் ஆண்டில் பட்டயக் கணக்கறிஞர் ஆரம்ப பரீட்சையிலும் 1981 ஆம் ஆண்டு சட்டமுதற்பரீட்சையிலும் சித்தியெய்தினோம்.

இக்காலத்தில்தான் மட்டக்களப்பு விபுலானந்தா வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரியை ஸ்தாபித்து கல்விப் பணிக்கு முடிந்தளவு பங்களிப்புச் செய்வதில் அக்கறையுடன் செயற்பட்டார். அத்தோடு "விபுலம்" வெளியீட்டகத்தையும் நிறுவி பல நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு மிகமுக்கிய காரணகர்த்தாவாகவும் செயற்பட்டார். சமூகச் சிந்தனையாளன் திரு த.கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்) அவர்களுடன் இணைந்து "மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கான முன்மொழிவுகள்" ஒன்றை வெளிப்படுத்தியதில் இவரின் சிந்தனை மேலானதே.

அரசியல், சமூக, கலை, இலக்கிய காலாண்டு சஞ்சிகையான "வயல்" ஆசிரியர் குழுவின் தலைவராகச் செயற்பட்டு 1986 இல் மக்களை விழிப்படையச் செய்வதில் காத்திரமான பங்களிப்புச் செய்தவர் அமரர்.க.ஆறுமுகம் என்பதை மறந்துவிடமுடியாது.

கொக்கட்டிச்சோலை சிறி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பிரதான வண்ணக்கர்களில் ஒருவராக இருந்து ஆன்மீகப் பணி செய்த இவர் தேரோட்டம் அன்னதான சபையை ஸ்தாபிப்பதில் மிகவும் கரிசனையுடையவராகவும் இருந்தார். இக் காலத்தில் தாந்தாமலை சிறி முருகன் ஆலய போசகராகவும் இருந்து பணியாற்றியதுடன் இவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் பங்களிப்புச் செய்யத் தவறவில்லை. மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவராக இருந்து பல ஆலயங்களின் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் முன்னின்று உழைத்தார்.

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் கன்னன்குடாக் கிளைத் தலைவராகவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மண்முனை மேற்கு பிரதேசக் கிளைத் தலைவராகவும் இருந்து மக்களுக்குப் பல சேவை செய்தார்.

கலை இலக்கிய வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்ட அமரர். ஆறுமுகம் அவர்கள் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுடன் இணைந்து பல கலை இலக்கியப் பணிகளில் முன்னின்று உழைத்தவர். கிழக்கிலங்கையின் அடையாளச் சின்னமாக விளங்கும் கண்ணகி இலக்கியங்களை உலகறியச் செய்யும் முகமாக மட்டக்களப்பு "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" ஸ்தாபிப்பதில் பெரும் பங்கு வகித்தவர். அவரது இறுதிக் காலம் வரை கூடலின் பொருளாளராகப் பணியாற்றி முன்னெடுத்தவர்.

சமூகத்தின் பரந்துபட்ட சிந்தனை உடையவராகக் காணப்பட்டவராயினும் தான் பிறந்த மண்ணை உயிரிலும் மேலாக நேசித்தவராகவும் காணப்பட்டார். கன்னன்குடா இந்து சமய விருத்தி சங்கம், கன்னன்குடா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் தலைவராகவும், போசகராகவும், ஆலோசகராகவும் இருந்து வழிகாட்டியவர் இவரே. எல்லாச் சந்தர்பங்களிலும் கிராமியக் கலை இலக்கியங்களை வெளிப்படுத்துவதற்காக அறிஞர் பெருமக்களை அழைத்துச் சென்று உபசரித்துப் பெருமை சேர்த்தவர் என்பதை நினைத்துப் பார்க்கும் போது அவரது தாய்ப்பற்று எங்ஙனம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. இதனால் இவரை கன்னன்குடா கிராம மக்கள் நேசித்தவர்களாகவும், உயர் மதிப்பை கொடுத்தவர்களாகவும் இன்றும் நினைக்கத் தவறவில்லை.

மட்டக்களப்பு மக்களின் மேம்பாட்டுக்காக அரச திணைக்கள அதிகாரிகளுடனும், கிழக்கு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுடனும் நெருக்கமான உறவைப் பேணி அவர்களின் உச்ச சேவையைப் பெற அயராது உழைத்தவர். அமரர் க.ஆறுமுகம் அவர்கள் தனது நண்பர்களுடன் இணைந்து "ஏடு" "விமோசனா" "ஆரத்தி" போன்ற அமைப்புகளுக்கூடாகப் பல சமூகப் பணிகளைச் செய்ததோடு, மட்டக்களப்பில் இருந்து ஒரு நாளேடு வெளிவர வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களுள் அமரர் ஆறுமுகம் அவர்களும் ஒருவர்.

மக்கள் வங்கியின் நீண்ட கால சேவையாளனாக இருந்ததனால் தொழிற்சங்கப் பிரதிநிதியாகவும் மக்கள் வங்கியின் ஓய்வூதியச் சங்கத் தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்பும் பெற்றார்.

அவர் நோயுற்றிருந்த காலத்திலும் தனது உபாதைகளைப் பெரிதுபடுத்தாது இயல்பு வாழ்க்கையை நடத்தியவர். அவரது குடும்பத்தினர் மனம் சோராது கூடஇருந்து அவருக்கு உறுதுணையாக வாழ்ந்து வாழ்க்கையைச் சிறப்பித்தனர். அன்னார் 21.02.2015 இல் இறைபதமடைந்தார். எனினும் அவர் மறைந்தும் மறையாதவர்களுள் ஒருவராக மக்கள் மனதில் நிலைத்திருக்கிறார்.



# உரை

## திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்

**(கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்)**

எல்லாம் வல்ல இறைவனையும், நிகழ்வின் நாயகியான கண்ணகி அம்மாளையும் வணங்கியவளாக, கூலவாணிகர் சாத்தனார் அரங்கிலே 2016 கண்ணகி கலை இலக்கிய விழாவின் முதல் நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்திருக்கும் விழாக்குழுத் துணைத்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சிறிநேசன் ஐயா அவர்களே,

பெருமதிப்பிற்குரிய முதன்மை மற்றும் சிறப்பு அதிதிகளே, அரங்கினை நிறைத்திருக்கின்ற பெருமதிப்பிற்குரிய ஆன்றோர்களே, சான்றோர்களே, கலைஞர்களே, கலை ஆர்வலர்களே, பெரியோர்களே, மாணவர்களே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள்.........

**2016ம்** ஆண்டுக்கான மாபெரும் கண்ணகி கலை இலக்கிய விழாவினை கன்னன்குடாவில் மிகவும் செம்மையாக ஆரம்பித்து வைத்திருக்கும் கண்ணகி கலை இலக்கிய கூடலின் ஆறாவது கண்ணகி இலக்கிய விழா இது என்பது பிரமிப்புடன் பாராட்ட வைக்கின்றது. இவ் விழாவினை தொடர்ச்சியாக நடாத்த முயற்சி எடுத்து ஆற்றுகை செய்திருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவர் மற்றும் பேராளர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

கிழக்கு மாகாணத்தில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் 150 இற்கும் மேற்பட்ட கலைக்கழகங்கள் தம்மை பதிவு செய்திருந்தாலும் கூட அவை தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டான தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் கீழும் பிறரது நிகழ்ச்சி நிரலிற்கமைவாகவுமே செயற்படுகின்றன. ஆனால் கண்ணகி கலை இலக்கிய கூடல் பண்பாட்டு விழுமியங்களுக்கு மதிப்பளித்து ஆறாவது தடவையாகவும் கண்ணகி இலக்கிய விழாவினை பிரமாண்டமாக நடாத்தியிருப்பது பாராட்டுக்குரியது என்பதுடன் ஏனைய கலைக்கழகங்களும் கண்ணகி கலை இலக்கிய கூடலை முன்மாதிரியாக கொள்வது சாலச்சிறந்ததாகும்.



தமிழிலக்கிய வரலாற்றிலே காணப்படும் ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மை இலக்கியமானதும், இளங்கோவடிகளால் இயற்றப்பட்டதுமான சிலப்பதிகாரத்தின் காவிய நாயகி கண்ணகி. கற்பிற் சிறந்தவளாக காட்டப்பட்டுள்ள இவள் எவ்வித ஆராய்வுமின்றி பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு கொலைத்தண்டனைக்கு ஆளான தன் கணவனின் குற்றமற்ற தன்மையை பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வாதிட்டு நிரூபித்ததாகவும் தம் பிழை கண்டு அரசனும் அரசியும் அவ்விதிலேயே உயிர் துறந்ததாகவும் கோபமடங்காத கண்ணகி மதுரை நகரை தன் கற்பின் வலிமையால் எரித்ததாகவும்தானே சிலப்பதிகாரம் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தையும் அதன் தலைவியான கண்ணகியின் வாழ்க்கையையும் நான் தற்கால நிகழ்வுகளுடன், தற்கால சமூக அம்சங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றேன்.

இன்றைய மட்டக்களப்பு, இன்றைய சமூக அமைப்பு, இன்றைய வாழ்வியல் அம்சங்கள், இன்றைய அரச நிர்வாக நடைமுறைகள், இன்றைய அரசியல் போக்கு இவற்றுடன் ஒப்பிட்டு பார்க்க விழைகின்றேன். கண்ணகியும், அவள் கதையும் இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எங்கிருந்தோ கண்ணகியின் வாழ்வில் வந்த மாதவியால் கண்ணகிக்கு எற்பட்ட அநீதி போல இன்றும் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்பட்டுக் கொண்டு தானே இருக்கிறது.

ஆராய்ந்து பாராமல் தீர்ப்பு வழங்கிய மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியனால் கணவன் மனைவியான கோவலனுக்கும் கண்ணகிக்கும் இழைக்கப்பட்ட அநீதி போல இன்றும் சமூகத்தில் நடந்து கொண்டுதானே இருக்கிறது.

தன் கணவன் கோவலனைத் திருடன் எனப் பொய்க்குற்றம் சாட்டிக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டு கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் வடிவமாக மன்னன்முன் கோபம் கொப்பளிக்க நின்ற கண்ணகியிடம் "யாரம்மா நீ" என்று அரசன் கேட்க **"ஆராய்ந்து பார்க்கும் அறிவில்லாத அரசனே உன்னால் எவ்வித குற்றமும் செய்யாமல் தண்டிக்கப்பட்ட கோவலனின் மனைவி கண்ணகி நான்"** என கண்ணகி பதிலுரைத்ததாகவும் **"கள்வனைக் கொல்வதுதானே அரச நீதி?"** என்று மன்னன் கேட்க கொதித்தெழுந்த கண்ணகி **"அற வழி தவறி கொலை வழி போன மதுரையின் மன்னனே"** என விளித்துத் தன் காற்சிலம்பை உடைத்து மன்னனின் தவறைச் சுட்டிக்காட்டி நீதியை நிரூபிக்கின்றாள்.

தன் தவறுணர்ந்த மன்னன் **"பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட நானே கள்வன்"** எனக் கூறி உயிரிழந்ததாகவும் மன்னனோடு சேர்ந்து மதுரையை எரித்த கண்ணகியின் போர் தர்மயுத்தம் என்றே மதுரை தாய்க்குலம் கூறி கொழுந்து விட்டு எரியும் நெருப்பையும் கண்ணகியையும் வணங்கியதாகத் தானே சிலப்பதிகாரம் கூறுகிறது.

எவ்வளவு ஆழமான கருத்துக்கள், எத்துணை ஆழமான படிப்பினைகள், அவ்வளவும் கருத்தோட்டமுள்ள சம்பவங்கள். ஆடவர்கள், பெண்கள் மட்டுமல்ல, அதிகாரத்திலுள்ளவர்கள், அரசியல் பலமுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது எனப் படிப்பினை வழங்கும் கதையல்லவா கண்ணகி வரலாறு.

குறிப்பாக ஆராய்ந்து பாராது தீர்ப்பு வழங்கிய பாண்டியன் நெடுஞ்செழியனின் பாத்திரம், இன்றும் ஆராயாமல் ஆய்ந்தறியாமல் தீர்மானங்களை எடுப்போருக்குச் சிந்திக்க வைக்கும் சிறந்த பாடமல்லவா? **'பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட கள்வன் நானே'** என்ற வரிகள் பிறர் கதை கேட்டு, யாரோ சொல்வதை கேட்டு ஆராயாமல் அரசன் அல்லது அது போன்ற பதவியில் இருப்போர் எடுக்கும் தீர்மானங்கள் எப்போதும் சரியாக இருக்காது என்பதை எத்துணை இயல்பாகக் கூறுகிறது.

கண்ணகி பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஓர் தனித்துவமான அடையாளம். நான் கற்பை மட்டும் கூறவில்லை. சாதாரண குடிமகளான கண்ணகி இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டோ, தானும் தன் கணவனும் வஞ்சிக்கப்பட்ட போதோ ஒடுங்கிப் போய்விடவில்லை. குட்டக் குட்டக் குனிபவளாகவும் அவள் சித்திரிக்கப்படவில்லை. பெண்ணியம் பேசுபவளாகவும் அவள் படைக்கப்படவில்லை. தனக்கும் தன் கணவனுக்கும் ஏற்பட்ட அநீதிக்காக நீதி கேட்டுத் தைரியமாகத் துணிச்சலுடன் போராடி அரசனிடம் நீதியை நிலைநிறுத்தியவள்.

அரசனேயானாலும் அதிகாரத்தில் இருப்போர் தவறிழைக்கும்போது தம் தவறை உணர்த்த வைக்கும் வரை நீதிக்காகப் போராடத் தயங்கக் கூடாது என்பதை அழகாக உணர வைத்த அற்புதமான காவியப் படைப்பு கண்ணகி பாத்திரம்.

இன்றைய பெண்கள் கண்ணகி போல் சிலம்பை கையில் எடுக்க வேண்டியதில்லை, தலையை விரித்து விடத் தேவையில்லை, மதுரையை எரித்தது போல் எதையும் எரிக்கவும் தேவையில்லை. ஏனென்றால் இன்று சமூகத்தில் மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் போல் தன் தவறுணர்ந்து யாரும் உயிர் விடவும்

போவதில்லை.

ஆனால் நியாயத்துக்காகவும் நேர்மையான விடயங்களுக்காகவும் போராடத் தயங்கவோ பின் நிற்கவோ கூடாது. தாம் வஞ்சிக்கப்படும் போது துவண்டு விடவும் கூடாது. தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்கின்ற பகவத் கீதையின் வரிகள் எக்காலத்துக்கும் பொருத்தும். அதன்படி வெற்றியும் வந்து சேரும்.

கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவர், செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன் தன் தொடக்கவுரையில் குறிப்பிட்ட போது இவ்விழா வெறும் கேளிக்கை விடயங்களைக் கொண்டதல்ல, சமுதாயத்திற்கான விழிப்புணர்வு என்று குறிப்பிட்டார். கிழக்கிலங்கையின் தனித்துவமான வழிபாடு கண்ணகி வழிபாடு என்பதற்காக மட்டுமல்ல, கண்ணகி வரலாற்றினூடான பல படிப்பினைகள் சமூகத்திற்கும், இளம் சந்ததிக்கும் கையளிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. பொருள் பொதிந்ததாக, புத்துணர்வு ஊட்டுவதாக, சமூக நோக்கு கொண்டதாகச் சமூக எழுச்சிக்கானதாக இத்தகைய கலை இலக்கிய விழாக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எம் சமூகத்தின் தேவை இது. காலத்தின் முக்கிய தேவையான இவ் இலக்கிய விழாவினை வருடந்தோறும் நடாத்திக் கொண்டிருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவரையும் பெருமதிப்பிற்குரிய உங்களனைவரையும் மனதாரப் பாராட்டி வாய்ப்பளித்த விழா ஏற்பாட்டுக் குழுவிற்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.



தொடக்க விழாவில் அவையோர்

'கூடல்' (பரல் - 05) விழா மலர் - 2016 வெளியீடு

- **வெளியீட்டுரை** : கதிரவன் த.இன்பராசா (தொகுப்பாசிரியர்)
- **வெளியீடு** : திரு.ச. ஜெயராஜா (பொருளாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)
- **அனுசரணை** : திரு.ஞா.ஸ்ரீநேசன் (விழாக்குழுத் துணைத்தலைவர்)
  திரு.கு. கிரிதரன்








முதற்பிரதி பெறுநர் : **திருமதி. செல்லம்மா கனகசிங்கம்**

**'சிலப்பதிகாரம் கூறும் உண்மைகள்'**

**சிலப்பதிகாரத்தில் சிறப்பான வாழ்வியல் சிந்தனைகள்'**

**'சிலப்பதிகாரத்தில் சிலையெடுத்த சேரன்'** ஆகிய மூன்று நூல்களின் வெளியீடு.

- ❖ **வெளியீட்டுரை** : **திரு. ரவி தமிழ்வாணன்**
  (நிர்வாக இயக்குநர் – மணிமேகலை பிரசுரம், சென்னை, இந்தியா)
- ❖ **வெளியீடு** : **கலாநிதி அரிமா. அ. செல்வேந்திரன்**
  (செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியகூடல்)



**வெளியீட்டுரை**



முதற்பிரதி பெறுநர் :

**சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி**

(பொருளாளர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்)



◀ பிரதிகள் வழங்கல் ▶




வழங்குநர் : **செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன்**

பெறுநர் : **திரு. செ.எதிர்மன்னசிங்கம்**

வழங்குநர் : **திரு.மா. சதாசிவம் ஜே.பி**

பெறுநர் : **தேசபந்து மு.செல்வராசா**

## சிறப்பு அதிதிகள் உரை



ஈசான சிவாச்சாரியார் ஆச்சாரிய கலாபூஷணம்

**இரா கு. அருளானந்தம் குருக்கள்**



**திரு.க. விமலநாதன்**

## முதன்மை அதிதிகள் உரை



**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**



**பேராசிரியர் மா.செல்வராசா**

## விபரண ஒளிப்படக்காட்சி

### *கண்ணகி கலை இலக்கிய விழா - 2015, வந்தாறுமூலை*

❖ **இணைப்பாளர்** : திரு. ச. மதன்
(ஆவணவாக்கப் பொறுப்பாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



அறிமுகவுரை
**திரு.கா. இராமச்சந்திரன்**
( கண்ணகிகலை இலக்கிய விழா - 2015
வந்தாறுமூலை - விழாக்குழுச் செயலாளர்)




ஆரம்பித்து வைத்தவர்
**திரு. மு. மகேந்திரராசா**
( கண்ணகிகலை இலக்கிய விழா - 2015,
வந்தாறுமூலை - விழாக்குழுப் பொருளாளர்)



இணைப்பாளர்
**திரு. ச.மதன்**

# கண்காட்சி


❖ **இணைப்பாளர்கள்** : **திரு. கு. பிறைசூடி**
**திரு. அ. இராஜகோபால்**
**திரு. ச. விசாகன்**





கண்காட்சி அறிமுகவுரை
**திரு. வி. திருக்கேதீஸ்வரன்**




கண்காட்சி திறந்து வைப்பு
**திரு. சி. சாமித்தம்பி**
(துணைத்தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)











தொடக்க விழாவில் அவையோர்






நிகழ்ச்சித் தொகுப்பு
திரு.இ. தியாகரெத்தினம்
(விழாக்குழு உறுப்பினர்)







நன்றியுரை
திரு.மூ. சிவானந்தராசா
(நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்)

## நூலங்காடி







## 25 ஜூன் 2016, சனிக்கிழமை முதலாம் நாள் மாலை

### இயல் அரங்கு (மாலை 03.00 – 08.45)

### "சேரன் செங்குட்டுவன் அரங்கு"

**மங்கல விளக்கேற்றல்**



முதன்மை அதிதி
**திரு. சி.மகிந்தன்**
(மாகாணப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் கி.மா)



சிறப்பு அதிதி
**அருட்திரு. அ. நவரெத்தினம் (நவாஜி)**



சிறப்பு அதிதி
**வி. சந்திரகாசன்**
(பொறியியலாளர்)



சிறப்பு அதிதி
**திரு. த. வினோத்ராஜ்**
(பொறியியலாளர்)



சிறப்பு அதிதி
வைத்தியர் **கே. முரளிதரன்**
(பல் அறுவைச்சிகிச்சை நிபுணர்)



**சட்டத்தரணி பாடும்மீன்**
**சு. ஸ்ரீகந்தராசா**
(அவுஸ்திரேலியா)



**கதிரவன் த. இன்பராசா**



**சைவப்புலவர்**
**திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம் எம்.ஏ**




**திரு.செ. எதிர்மன்னசிங்கம்**



வரவேற்பு நடனம்

மணிபுரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவிகள்

நெறியாள்கை: **செல்வி. அ.ருசாந்தினி** (பழைய மாணவி)



வரவேற்புரை

**திரு. ப.குணசேகரன்**

(செயற்குழு உறுப்பினர்
கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



அமர்வு அறிமுகம்

**திரு. இ. தட்சணாமூர்த்தி**


(விழாக்குழு உறுப்பினர்)



தலைமையுரை

**செ. எதிர்மன்னசிங்கம்**

(துணைக்காப்பாளர்
கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



நிகழ்ச்சித் தொகுப்பு

**திரு. ப.பவளநாதன்** (விழாக்குழு உறுப்பினர்)



# உரை

## "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"

**சைவப்புலவர் திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம் எம்.ஏ**

"தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊன் ஊண் துறமின் உயிர்க்கொலை நீக்குமின்
தானம் செய்மின் தவம்பல தாங்குமின்"

என்ற சிலப்திகாரச் செய்தியுடன் "ஊழ்வினை உருத்து வந்தூட்டும்" என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதில் "ஊழ்" என்பது முற்பிறவியில் செய்த வினையின் பயனாக இந்தப் பிறவியில் ஒருவருக்கு ஏற்பட்ட சூழ்நிலையைக் குறிக்கும். விதி என்பது பிராரத்த வினையாக விதிக்கப்பட்டது. இதில் மாற்ற மில்லை. வினை என்பது செயல், தொழில்,கடமை என்னும் அடிப்படையில் கன்ம வினையாகும்.

"அவரவர் விதிவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்"

என சிவபோக சாரம் எனனும் நூல் கூறுகிறது. இவ்வினை மனம், வாக்கு, காயம்,(உடம்பு) என்னும் மூன்றினாலும் வரும். இதற்கு பிறவி உண்டு.

"ஊழ் வலிது" என்று கூறினார் வள்ளுவர். ஊழை வெல்லமுடியாது என்று கூறவில்லை. ஊழினால் வரும் தண்டனையை அனுபவிக்கும்போது நாம் வருத்தமுறுவோம். அது இரண்டு வகையில் அமையும். ஒன்று தண்டனையைத் தாங்கமுடியாமல் வருந்துவது. மற்றையது இந்தத் தண்டனைக்கு நான் ஆளாவதற்கு என்ன (பாவம்)வினை செய்தேனோ என வினையை நொந்து நொந்து வருந்துவது.



ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதில் முன்னிட்ட சாபம் என சிலப்பதிகாரம் 135ம் பாடலில் கூறப்பட்ட செய்தி ஆடி மாதம் கிரு'ணபட்சம் அட்டமித் திதி வெள்ளிக்கிழமை அன்று தீ, நெருப்பால் புகழ் மிக்க மதுரையும் அதன் அரசும் அழியும் என்னும் ஒரு பழிச்சொல் முன்னமேயே உண்டு. இதை அறிவாயாக என மதுராபதித்தெய்வம் கண்ணகிக்குக் கூறிய சங்கமன் கதை... வாசமணம் வீசும் ர்சாலைகளும் மூங்கிற் காடுகளும் சூழ்ந்தல கலிங்க நாட்டையும் வளம் மிக்க வயல் சூழ்ந்த சிங்கபுரத்தையும் அரசாண்டிருந்தவர்கள் வசு, குமரன் என்னுமழ் இ.ரு அரசர்கள். இருவரும் செல்வச் சிறப்புடையவர்கள். ர்பாராற்றல் மிக்கவர்கள். தாயாதிகள் என்றாலும் இருவரும் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். எனவே இ.வ்விரு நாடுகளுக்கும் இடைப்பட்ட தூரமான அறுபது கல் தொலைவுக்கு உட்பட்ட இடங்களில் ஓயாத போர் நடந்துகொண்டிருந்தமயால் அவ்வழியே எவரும் செல்வதில்லை. அப்டியிருந்தும் பெரும் பொருள் சேர்க்கும் ஆசையில் நிறைய அணிமணிகளை சுமந்துகொண்டு திருடுத்தனமாக தப்பி ஓடுபவர்களைப்போல தன் மனைவியை அழைத்துக்கொண்டு சங்கமன் என்னும் வணிகன் தான் வாழ்ந்த கபிலபுரத்தை விட்டு நீங்கி புகழ்மிக்க

சிங்கபுரம் போய்ச்சேர்ந்தான். சேர்ந்தவன் சிங்கபுரக் கடை வீதிகளில் தான் கொண்டு வந்திருந்த அணிமணிகளை விற்றுக்கொண்டிருந்தபோது அப்பிறப்பில் பரதன் என்னும் பெயருடன் இருந்த கோவலனைக் கண்டான். கடை வீதியில் சங்கமனைக் கண்ட கோவலன்(பரதன்) அவனைப் பிடித்துக்கொண்டு போய் அரசனிடம் "இவன் நம் பகை நாட்டு ஒற்றன்" எனக் கூறி கொலை செய்தான். இப்படிக் கொல்லப்பட்ட சங்கமன் மனைவி நீலி என்பவள் பதறித் துடித்தபடி ஓடிச்சென்று "அரசே இது முறையோ, தர்மமோ, இது நீதியோ, ஊர்ப்பெரியோர்களே! வணிகப் பெருமக்களே! பல குடியிருப்புகளில் வாழும் பல்லோரே இத்தண்டனை தகுமோ?" என்று வேதனைப்பட்டு வீதிகளில் அலைந்தும், பொதுவிடங்களிலும் விம்மி விம்மி அலைந்து அலைந்து ஆற்றல் இழந்து அழுதாள். இப்படி ஏழு நாட்கள் அலைந்தாள். இறந்த கணவனைத் தொழுதற்காக பதிநான்காம் நாள் இதுவே உரிய நாள் என முடிவுசெய்து ஒரு மலைமீது ஏறிநின்று வான எல்லையில் இறந்த தன் கணவன் சங்கமனோடு சேர்ந்து இன்புறுவேன் என்று கூறி நின்றவள் பின்வருமாறு சொன்னாள்:

"ஆனால் ஒன்று எனக்கு இத்தகைய தீமையைச் செய்தவர்கள் யாராயினும் யான் அடைந்த துன்பத்தை அடைந்து மடிவார்கள். மலைமீது ஏறி விழ இருந்த "நீலி" இட்ட சாபம் உங்களால் பற்றியது" என மதுராபதித்தெய்வம் கூறியது. "முன்செய்த தீவினை வருத்த வருகிறபோது அப்பிறப்பின் நல்லறம் போதாதாயின் அவர்கள் செய்த புண்ணியம் வந்து துணை நிற்காதுபோகும். தீவினையின் பயனை அடைந்தே ஆகவேண்டும். இதை சாக்கியநாயனார் புராணத்தில் சேக்கிழாரும்,

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்....."

என்று கூறுகிறார்.

மேலும் அறவழிப்போதனை, அறவழி ஒழுகல் மனித இனத்திற்கென்றே வகுத்துரைக்கப்பட்டதொன்று. மனிதனுக்கு பகுத்தறிவுண்டு. விலங்குகளுக்கு பழக்கவறிவு மட்டுமே "உறுவினை அறுத்து உய்த்திடப்பிறந்த பிறவி மனிதப்பிறவி(தொல்காப்பியம்) மனித வாழ்க்கை ஏற்றமும் எழிலும் பெற்று சிறப்படைய வழிகாட்டுகிறது அறம். மனித வாழ்க்கையின் மூச்சாக, முதுகெலும்பாக, ஒளிவிளக்காக நிமிர்ந்து நிற்பது அறம்.

சிலம்பு கூறல் காவியத்தில் உட்பிரிவில் பாண்டிய மன்னன் அரசிருப்பு ஏழாவது ஓலையின் முதற்பக்கத்தில் உள்ளது. நீர்வளம், ஆற்று வர்ணனை, நால்வகைப் படையின் பெருக்கம், குலப்புகழ், தருமம் பேசப்படுகிறது. முக்கண்ணனிடம் குறையிரந்து குழந்தை பெற தவம்செய்ய புறப்படுகிறான். எங்களுக்கு மழலைச் செல்வம் கிடைக்காத காரணம் யாதோ? என மனைவி கேட்க அதற்கு பாண்டியன் "கும்பமுலை அம்புவிழிக் கோதையிந்தக் காதைதனை நம்புமினி" என்று கதை கூறினான். கண்ணபிரான் குழந்பைெற தவம் வேண்ட சிவனுமை தோன்ற என்ன வரம் வேண்டும் என இடபாருடன் கேட்க பிள்ளை வேண்டுமென கருடவாகனன் கூறியதும் எழுதமுடியாத அழகு பொருந்திய ஆண் குழந்தை ஒன்று பிறக்கும்." என வரம் கொடு:க்க மாயவனும் மகிழ்ந்து நின்றதனால் இடப்பாகப் பத்தனியை தொழ மறந்தான். கோபமுற்ற உமை சாபமிட்டாள். "மற்றவன் கண்ணாலே வெந்தழிந்து நீறாகும்." என்றதும் கண்ணன் மீண்டும் கைலை சென்று சாபவிமோசனம் பெற்று மன்மதனை பிள்ளையாகப் பெற்று சாபப்படி நெற்றிக்கண்ணால் காமதகனம் நடந்து மீண்டும் உருவம் பெற்று சாப விமோசனம் நீங்கியது. இதைக் கூற ஊழ் வினை எம்மை உறுத்தும். அவரவர் விதி வழி வினை வழியே என்றும் கொலை புரிந்தவர்கள் மருந்து,மந்திரம் செய்து குடி கெடுத்தவர்கள், நல்ல பாம்பை கொன்றவர்கள்,பசு வதை செய்தவர்கள், சிவனடியார்களை அவமதித்தோர், கோயில் உரித்துக்களை கொள்ளையிட்டோர் ஆகியோருக்கு பிள்ளை இல்லை என்று விளக்கி சிவனிடம் வேண்டி பிரதோச விரதமிருந்து சோம சூத்திர பிரதட்சணம் செய்து வேண்டினால் குறை தீர வழியண்டு. இதுசிலம்பு கூறல் காவியத்தின் பதினாறாவது ஓலையின் முன்பக்கம் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.பின் பக்கத்தில் கண்ணகி திருவவதாரம் கூறப்பட்டுள்ளது.பாண்டியன் இக்கதையை மனைவியிடம் கூறி தாமும் குறை தீர் வழியாக இறைவன் இறைவியை இதயத்திலிருத்தி தவம் புரிந்ததும் சிவனுமை தவத்தில் மகிழ்ந்து தோன்றினர். "பெண் மகவொன்றை உமக்குத் தந்தோம்" என்றதும் பாண்டியன் மனம் மகிழ்ந்தான். அவ்வேளை இறைவனின் இடப்பாகத்திலிருந்த இறைவியின் இடதுபக்க மார்புக்கச்சை காற்றினால் சிறிது விலகியது. அதனைக் கண்ட பாண்டியன் காம இச்சையுற்று சிறிது

சிரித்தான். உமாதேவி கோபமுற்று வஞ்சினம் கூறுகிறாள். "கூடலுடன் உன்னைக் கொன்றிடுவேன்" என்று கூறி மாவடுவாகினாள். காரணம் ஒன்று வந்தால் ஊழ்வினையால் காரியம் நிகழும். இதுதான் வினைத்தொடர்பு.

பராசர முனிவனின் மகளின் அருங்குணத்தயும் பேரழகையும் கண்டு மகிழ்ந்த சிவபிரான் அவளை நோக்கி நீயும் பூலோகதில் போற்றப்படும் தகைமையுயைவளாகவும் கற்புக்கரசியாக விளங்கவும் மானிடர் உன்னை பத்தினித் தெய்வமாக வணங்கவும் ஒரு வரம் தந்தோம் என்றதும், இச்சந்தர்ப்பத்தை உமையம்மை தனக்குச் சாதகமாக்கிக்கொண்டாள். சிவபிரானைப்போல் தவப்பேற்றினால் நெற்றியில் கண்கொண்டிருந்த பாண்டிய மன்னனிடமிருந்து அக்கண். நீங்கிடவேண்டுமென்று தன்னிடமிருந்த நீண்டநாள் ஆசையை இறைவனிடம் வேண்டினாள். இதனால் பரராசமுனிவரின் மகளுக்கு பூலோகப் பிறப்பிடம் பாண்டிய நாடு அமையட்டுமென்றார் சிவபிரான். மாவடுவாகிய உமையம்மை புதுமை மாங்கனியாகக் காணப்பட்டதும் அதைப் பறிக்க முற்பட்டவர்களுக்கு ஓடி மறைந்தது. அதையறிந் அரசன் முனிவர் சிலரின் ஆலோசனைப்படி அம்பினால் எய்து வீழ்த்தினான். அக்கனி நிலத்தில் வீழாது அந்தரத்தில் தொங்கியது. அதைப் பிடிக்கஅரசன் கைகளை நீட்டியது நெருப்புருண்டையாகி அது விழவே அரசனும் பயந்து நிலத்திலை அதனை விட்டெறிந்து தன் கையால் நெற்றியின் வியர்வையைத் துடைத்தான். மாங்கனியைத் தொட்ட அக்கை நெற்றியில் பட்டதும் அரசனின் நெற்றிக் கண் அழியலாயிற்று. நிலத்திடை வீழ்ந்த கனியை மனைவியிடம் கொடுத்து நடந்தவற்றை கூறினான். அவளும் தெய்வத்தன்மை பொருந்திய அக் கனியைப் பொற்குடத்திலிட்டுவைத்தாள். மூன்றாம் நாள் அழகிய குழந்தையாகக் காட்சியளித்தது.

"கூடலுடன் உன்னைக் கொன்றிடுவேன் என்ற கூற்று உருத்துற்று பொற்குடத்தைத் திறந்ததும் "பீடுறும் மதுரை அரசொழியக் காரணமாகும்" என அசரீரி ஒலி கேட்டது. குழந்தையின் வலது காலில் நாகமணி தரித்திட்ட சிலம்பு காணப்பட்டது. பாண்டிமாதேவி குழந்தையை மார்போடணைத்ததும் அவள் முலையில் பால் சுரந்தது. அதை ஊட்டியதும் துர்மிர்த்தங்கள் நிகழ்ந்தன. குழந்தை கணவளர்ந்ததும் கனவு கண்டு திணுக்கிட்டெழுந்தது. ஊழ்வினை உருத்தாக மாறி கூடல் அழியுமென்று பயந்து குழந்தையை பேழையிலிட்டு கடலில் விடுத்தாள்.

கொள்வதும் மிகைபடாது : கொடுப்பதும் குறைபடாது வாழ்ந்த வணிகர்கள் மாசாத்தான், மாய்நாகன். அவர்கள் கடலிலே ஒரு பேழையைக் கண்டதும் மாசாத்தான் பேழை எனக்கு என்றும் மாய்நாகன் உள்ளிருப்பது எனக்கு என்றும் கூறி பேழயைத் திறந்ததும் குழந்தையின் மேனி ஒளியினால் இருவரது கண்ணொளியும் மங்கியது. ஒளிதரும்படி குழந்தைய வேண்டியதும் குழந்தை நகைத்தது. கண்ணொளி கிடைத்தது. அதனால் கண்ணகை என பெயரிட்டனர். மாய்நாகன் மனைவி வேதவல்லியிடம் குழந்தையைக் கொடுத்தான். கண்ணகை கன்னியானாள். காற்சிலம்பிற்கு இணைச் சிலம்பு தேடி நாகமணிக்காக நாகதீவு சென்றனர்.

மாசாத்தான் மனைவி வன்னமாலை குழந்தை வரம் வேண்டி தவமிருந்து பெற்றறெடுத்த கோவலன் கட்டிளங் காளையானான் கோவலனுக்கும் கண்ணகிக்கும் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. முதலிரவன்று கண்ணகியை நெருங்கியதும் பெருநெருப்பு முகட்டளவும் கொழுந்துவிட்டெரிந்தது. அக்கனி கண்டு கோவலன் அஞ்சினன். கண்ணகி தேவரகசயமான தன் பிறப்பின் நோக்கத்தை கோவலனுக்குத் தெரியப்படுத்தினாள். உலகம் பழி தூற்றாதிருக்க உலக ஆசாரப்படி தம்பதிபோல் இணைந்திருந்தனர். பின் கண்ணகியின் வாழ்க்கையில் மாதவியின் நுழைவு, கோவலன் கொலைசெய்யப்படல் இவை எல்லாமே ஊழ்வினையின் காரணமே.

கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்றுக் காதையில் எட்டாம், ஒன்பதாம் பாடல்களில் இடம்பெற்ற செய்தி..... தேவலோகம் இந்தரன் சபை. இந்திரன் சபையில் நடனம். ஊர்வசி ஆடுகிறாள். நாரதர் யாழ் மீட்டுகிறார். இந்திரன் மகன் சயந்திரன் ஆணழகன். அதில் ஊர்வசி மயங்கி நடனம் தவறுகிறாள். நாரதர் சாபத்தால் பூவுலகில் ஊர்வசி மாதவியானாள். சயந்தரன் கோவலனானான் என முற்பிறப்பு வினை இப்பிறப்பில் சூழ்வதாகக் காட்டப்படுகிறது. நேரம் கருதி கண்ணகி, கேரவலன், மாதவி முற்பிறப்பு கதைகள் கூறப்பட்டு ஊழ்வினை உருத்தாகவே தொடரும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவை சைவசித்தாந்தமும் பல திருமுறைப் பாடல்களில் எடுத்துக்காட்டுகிறது. பூம்பாதச் சிலம்பு, மலர்சிலம்படி, பாதம் பணிந்து, அரன்கழல் செலுமே என சாத்திர நூல்களும், தோத்திர நூல்கழும் கூறுவது இறைவன் திருவடியையேயாகும். வினையாகிய அறியாமையை அறத்தினால் அறுத்து ஊழை வென்று அரனடி அடைவோமாக.

இலக்கியச் சமர் : **"சிலப்பதிகாரக் காப்பியத்தில் சிறந்த பாத்திரப்படைப்பு"**






நடுவர் : **சட்டத்தரணி பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா** (அவுஸ்திரேலியா)

## சமரிட்டோர்

கண்ணகியே!




**சௌந் லெனாட்லொரன்ஸோ**

மாதவியே!



**கதிரவன் த. இன்பராசா**

கோவலனே!




**அகரம். செ. துஜியந்தன்**

கவுந்தி அடிகளே!



பாலமீன்மடு **இரா. கலைவேந்தன்**

பொற்கொல்லனே!



**மட்டுநகர் சிவ. வரதகரன்**

பாண்டியன் நெடுஞ்செழியனே!



**கவிஞர் ஜீ. எழில்வண்ணன்**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மண்முனை மேற்கு கோட்டப் பாடசாலை மாணவர்களுக் கிடையே நடாத்திய பேச்சு, கட்டுரை, வில்லுப்பாட்டு போட்டிகளில் 1ம் பரிசு பெற்ற மாணவர்களின் ஆற்றுகை.

பேச்சு



செல்வி. பத்மநாதன் நவேந்தினி

கட்டுரை



செல்வன். விக்னேஸ்வரன் விதுசன்

வில்லுப்பாட்டு



மட்/ம.மே/ கன்னன்குடா மகா வித்தியாலய மாணவ மாணவிகள்

## முதன்மை அதிதிகள் உரை



பொறியியலாளர் திரு. சி.மகிந்தன்




**உயர்திரு. மா. கணேசராஜா**
(மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி)



சிறப்புச் சொற்பொழிவு
**"கற்பின் கனலி"**
**தமிழுருவி த. சிவகுமாரன்**
(ஸ்தாபகர் / தலைவர், வவுனியா தமிழ்ச்சங்கம்)




உரை
**"இளங்கோவடிகளும் மதச்சார்பின்மையும்"**
சைவப்புலவர் கலாநிதி
**திரு. சா.தில்லைநாதன்**



நன்றியுரை
**திரு. தி.சந்திரகுமார்**
(விழாக்குழு உறுப்பினர்)



**இயல் அரங்கில் அவையோர்**



# சிறப்புச் சொற்பொழிவு

## “கற்பின் கனலி”

**தமிழருவி த. சிவகுமாரன்**

(25.06.2016 கன்னன்குடாவில் நடந்த கண்ணகி கலை இலக்கிய விழாவில் தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

“செங்கதிரோன் உள்ளிட்ட பெரியோர்கள் அனைவருக்கும் வணக்கம் தொடர்ந்து இடம்பெறும் நல்ல விழா இது. ஆறாவது தடவையாக இடம்பெறுகிறது. உயர் நோக்கம் கொண்டு நடைபெறுகிறது. செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் அவர்களும் அவரோடு இணைந்தவர்களும் நிகழ்த்தும் அபார முயற்சி இது. கண்ணகித்தாய், அவளின் வரலாறு கலை இலக்கியமாக இருப்பதை ஜனரஞ்சகமாக்கும் முயற்சி இது. மட்டக்களப்பிற்கு மிகப்பெருமை தருகிற விழாவாக இருக்கிறது. இந்த மண்ணில் கண்ணகிக்குச் சிலை வைக்க வேண்டும்.

வசந்தன் கூத்து, கண்ணகி அம்மன் கதை, சிலம்பு போற்றுதல், கோவலன் கண்ணகி நடனம், கண்ணகியம்மன் காவிய நடனம், கானல்வரி நாட்டிய நாடகம், சிலம்பு சொல்லல் என நடன வகைகள் என மிகப்பெரிய விழாவாக நடைபெறுவதையிட்டு மனம் மிக மகிழ்வடைகிறேன்.

கண்ணகியின் பெருமைகள் எனப்பார்த்தால் அவை மிகவுண்டு, மனிதரும் தெய்வமாகலாம், கண்ணகி வழிபாடு ஒரு வீர வழிபாடு, கண்ணகையின் படிப் படியான பத்தினித் தெய்வ வளர்ச்சி, மண்ணக மாந்தருள் ஒருத்தி (புகார் காண்டம்) மனித நிலை கடந்து வளரக் (மதுரைக் காண்டம்) விண்ணகத் தெய்வமானாள் (வஞ்சிக் காண்டம்) எனப் பார்க்கலாம்.

வட இலங்கையில் கண்ணகை வழிபாடு இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, முத்துமாரி, நயினை நாகபூசணி, (நாகராஜேஸ்வரி), கண்ணகா பரமேஸ்வரி என உண்டு.

இலங்கையின் மிகப்பழைய கண்ணகி கோவில்கள் கந்தரோடையில் (கயற் கண்ணி பத்தினி கோவில்) புளியன்குளம் (கண்ணகி கோவில்) வற்றாப்பளை கண்ணகையம்மன் கோவில் என்பனவாகும்.



முதலில் நயினாதீவிலும், சுருட்டுப்பனை (வட்டுக்கோட்டை), நவாலி, களுவோடை, சுதுமலை, சீரணி, அளவெட்டி, தங்குகங்களை ஆகிய இடங்களிலும் கண்ணகி வழிபாடுகள் ஆலயம் அமைத்து இடம்பெற்றிருந்தன.

நாவலர் கண்ணகி வழிபாட்டை ஆதரிக்கவில்லை, அதனாலேயே பல கண்ணகி கோவில்கள் பல்வேறு பெயர்களில் அம்மன்கோவில்களாகின. கண்ணகி துர்க்கையாகப் பிறந்தாள் என உரையாசிரியர்கள் குறிப்பிட்டனர். திருவொற்றியூர் வட்டபுரி அம்மன் கோவிலில் இன்றும் கோவலன் கதை படிக்கப்படுகிறது.

கண்ணகியின் காவியத்தில் எல்லாச் சமயத்தவர்களின் இணைவையும்

பார்க்கலாம். இளங்கோவடிகள் (சமணர் - ஜைனர்), செங்குட்டுவன் (சைவன்) கோவிலில் எடுத்தான். கவுந்தியடிகள் (சமணம்) கற்புக்கடம் பூண்ட தெய்வம் எனப் போற்றியவர், ஐயை (ஆயர் குலம் - வைணவம்) தேவந்தி - சாத்தன் மனைவி (பூசை வழிபாடியற்றியவர்) வேடுவர் (வேணமார்), முருக வழிபாடுடையவர்கள், "தெய்வம் கொணமின்" எனப் போற்றியவர்கள். இவ்வாறாகப் பல சமயப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் கண்ணகியைப் போற்றியதைக் காணமுடிகிறது.

இமயம், கங்கை, வஞ்சி, இலங்கை (கஜபாகு) என நீண்ட இடப் பரப்பில் கண்ணகி வழிபாடு இடம் பெற்றது. வரட்சியின் குளுத்தி என்பது மனங்குளிர குளுமை என்பவற்றிலிருந்து குளுத்தி என்ற சொல் வந்தது, தென்னகத்தில் மாரி என்பர்.

ஆடி மாதத்தில் கண்ணகிக்கு விழா எடுத்தான் கஜபாகு மன்னன். பிற்காலத்தில் விவசாயம் தொடர்பாக வைகாசிப் பௌர்ணமியில் மட்டக்களப்பு முதலான இடங்களில் இடம்பெறலாயிற்று. பத்தினி தெய்யோ (கண்டி தலதா மாளிகையில் சிலை) முதலாம் இராஜசிங்கன் 48 கண்ணகி கோவில்களைக் கட்டுவித்தான் என வரலாறு உண்டு. மதுரையிலிருந்து திரும்பி சினம் தணிந்து களைப்பு நீங்க தங்கிய பத்தாம் இடம் பத்தாம்பளை, வற்றாப்பளை எனப்படுகிறது. இங்கு கண்ணகித் தாய் முதுமைக் கோலத்தில் வீற்றிருக்கிறாள். கடல் நீர் கொண்டு விளக்கேற்றும் அதிசயம் இக்கோவிலில் நடைபெற்று வருகிறது.

கண்ணகி என்பதற்கு, கண்ணகை (மட்டக்களப்பில் சொல் வழக்கு) "கண்ணிற்கு ஒளி கொடுப்பவள், பார்ப்பதற்கு அழகு மிக்கவள்" என்னும் பொருள்களுள் இடத்துக்கிடம் கண்ணகி கதைகளில் மாற்றங்கள் உள்ளன. உ+ம்:- "கண்ணகி வழக்குரை காவியம்" மூலக் கதையாகிய இளங்கோவடிகளின் "சிலப்பதிகாரத்தில்" இருந்து வேறுபடுகின்றன. சிவன், மாங்கனி, பராசர முனிவர், நாகமங்கலம் என்பவற்றோடு தொடர்புபட்ட தன்மையைப் பிற்கால கண்ணகி காவியங்களில் காண்கிறோம். கண்ணகி சிவபூசை செய்து ஐந்து தலை நாக வடிவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தாள் எனவும் கதைகள் உள்ளன. கண்ணகி கதையை மீகாமன், வெடியரசனுடைன் தொடர்புடுத்தியும் இரண்டு வேறுபட்ட கதைவடிவங்கள் உள்ளன. மட்டக்களப்பில் மட்டும் 62 கண்ணகி கோவில்கள் உள்ளன.

கண்ணகியின் வரலாறு "கற்பின் கனலியின் வரலாறு." "தீதிலிரவட மீனின் திறம் இவள் திறம்", பிறப்பு, திருமணம், மங்கல வாழ்த்துப் பிரிவு, மாதவி, புறப்பாடு, கவுந்தி அடிகள், மதுரை சென்றமை, அங்கு கோவலன் இறப்பு, வழக்குரைத்தமை, தீமூட்டியமை, சேர நாட்டில் தெய்வமானமை என்பன சிலப்பதிகாரத்தின் முக்கியமான சுவையான இடங்கள். விரித்துச் சொல்ல வேண்டியவை. கற்பின் கனலியின் பெருமை யாதெனில், "இனி தனக்குக் கணவன் வரமாட்டான் (இறந்து விட்டான்) எனத் தெரிந்த பிறகும் கனல் போன்ற தன் கற்பால், இன்னொரு பெண்ணுக்கு இப்படி அநியாயம் நிகழக்கூடாது என எண்ணிக் கற்பால் நெருப்பை ஏவி தீயவரை அழித்தாளே! அதுதான் பெருமை.

மட்டக்களப்பு மக்கள் உபசரிப்பதில் மிகுந்த பண்பாடுடையவர்கள். அவர்களின் அன்பே அனைவரையும் கட்டிப் போட வல்லது. அந்த அன்புக்கு நாமனைவரும் கட்டுப்பட்டவர்களே. வாய்ப்புக்கு நன்றி வணக்கம்.



# உரை

## "இளங்கோடிகளும் மதச்சார்பின்மையும்"

**சைவப்புலவர் கலாநிதி. சா.தில்லைநாதன்**

சைவப்புலவர், கலாநிதி சா. தில்லைநாதன் அவர்கள்– மட்டக்களப்பு கண்ணகி இலக்கிய விழாவின் 2016 முதலாவது நாள் மாலை அமர்வில் ஆற்றிய உரை :

**இளங்கோ அடிகளும் மதச் சார்பின்மையும் :**

அறிவும் ஆற்றலும் சார்ந்த இப்பெருவிழாத் தலைவர் அவர்களே! அறிஞர் பெருமக்களே! ஒருமை உணர்வோடு இவ்விழாவிற் கூடியிருக்கின்ற அன்புடை யோர்களே! உங்கள் முன்னே காம்பு நெகிழும் கனிபோன்ற காட்சியளிக்கின்ற எனது அன்புகலந்த வணக்கத்தை நீங்கள் எலலோரும் இனிதே ஏற்பீர்களாக. இவ்விழாவின் அமைப்புக் குழுவினரும் எனது உணர்ச்சி கலந்த நன்றியை உள்ளம் உவந்து ஏற்பார்களாக.

எமது மட்டக்களப்புத் திருநாட்டில் கற்புக்கரசி கண்ணகியைப் பெரிதும் போற்றுதல் செய்கின்ற கன்னன்குடாக் கிராமத்தில் இப்பிரதேச மக்களின் ஆர்வத்தினால் இப்பெருவிழா வியத்தகு சிறப்பாக நடைபெறுவதும், அறிவு சார்ந்த பெருந்தகையினர் குழுமியுள்ள கண்ணகி கலை இலக்கியக் கூடல் அவையத்தாரால் நடத்தப்பெறுவதும் நற்றிறம் புரிந்தோரும் அற்புளஞ் சிறந்தோரும் பற்றுவழி விழைத்த அறப்பயன் எனக் கருதுகின்றேன்.

கூசுமதி சேர்நுதலியாம் கண்ணகியை எனது மனத்தகம் இருத்தி எனது விடயத்திற்கு வருகின்றேன்.

இவ்விழா அவையினரால் இளங்கோவடிகளும் மதச்சார்பின்மையும் எனும் எனது சிறப்புரைக்குத் தரப்பட்ட காலவரையறை பதினைந்து நிமிடங்களே. எனவே அக் காலவரையறையுள் எனதுரையை சபைக்குரிய வாழ்த்து வணக்க மரபுவழி செயலுக்கும் வருபொருளுரைத்தலுக்கும் ஐந்தும் பத்தும் என வகுத்துக் கொண்டு இப் பரந்த விடயத்தில் உங்களுடன் பகிர்ந்து அமையலாம் என உளங்கொள்கின்றேன்.



ஐம்பெருங்காப்பியங்களில் சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய மூன்று காப்பியங்கள் வடநாட்டுக்குரியன. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டு காப்பியங்களும் தமிழ்நாட்டுக்குரியன. தமிழ்நாட்டுக் குடிமக்களைக் கதாபாத்திரங்களாக அமையும் வண்ணம் ஆக்கப்பெற்றவை.

மணிமேகலை பௌத்த சமயத்தைமட்டும் வெளிப்படுத்திக்காட்ட சிலப்பதிகாரம் மதச்சார்பின்மையினால் சைவம் வைணவம் சமணம் பௌத்தம் முதலிய அனைத்துச் சமயங்களையும் தொட்டுச் செல்கிறது. நீதி, அறம், வினை என்னும் முப்பரிமாணம் கொண்டு ஆக்கப்பெற்றது.

மேற்படி நான்கு சமயத்தாரும் தத்தமது சமயத்தில் பற்றுடன் வீறுகொள்ளும் காலத்தில் சமணம் சார்ந்த இளங்கோ அடிகள் சமணசமயத்தைச் சார்ந்தவர்களைத்

தலைமக்களாகக் கொண்டு சிலப்பதிகாரக் காவியம் எழுதும்பொழுது சைவம் வைணவம் பௌத்தம் ஆகியவற்றைப் பழிக்கவில்லை. அதுமட்டுமன்றி அனைத்து மதத் தெய்வங்களையும் அவற்றை வழிபடும் மக்களையும் அமைத்துக் காட்டுகின்றார்.

மேலும் காப்பியத் தலைவனாகிய சமணம் சார்ந்த கோவலன் வைதிகநெறி சார்ந்த மாடலனை வணங்குவதாகவும் வைணவநெறி சார்ந்த மாதரியிடம் சமணத் துறவியாகிய கவுந்தி அடிகள் அன்பு காட்டுவதாகவும் கூறுகிறார். காப்பியத் தலைவிக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்க மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் புத்தனை வழிபட்டு பௌத்த துறவியாரின் அருளினால் பௌத்த துறவியாவதையும் கூறுகின்றார். எனவே இவ்வாறு காட்டுவதையிட்டுஇளங்கோவடிகள் சமணசமயத்தைச் சார்ந்தவராயினும் மதத்திற்கும் அப்பாற்பட்டு மனிதத்தை போற்றுகின்றவர் என்பது தெற்றெனத் தெரிகிறது. அம்மட்டுமன்றோ, செங்குட்டுவன் வைதிக மதத்தவன். அவனுடன் பிறந்த இளங்கோ அடிகள் சமணஞ் சார்ந்தவர்.இவ்விருவருடனும் நெருங்கிய நட்புக்கொண்ட கூலவாணிகன் சாத்தனார் பௌத்த மதத்தினர். இவர்கள் வெவ்வேறு மதத்தினராயினும் ஒருவரையொருவர் வெறுக்காமல் அன்பு பூண்டதைக் காட்டுகிறது. இளங்கோ அடிகளது மதச் சார்பின்மைப் படைப்பு. சமய வேறுபாடுகளைக் கடந்து பொதுமை நோக்குடன் பல்வேறு சமயங்களைச் சார்ந்தோரையும் போற்றும் தெளிவுடைய மனங்கொண்டவர் இளங்கோ அடிகள். மேலும், சமண மதச் சிறப்புக் கூற கவுந்தியடிகளையும் வைணவ மதக் கருத்துக்களைக்கூற மாங்காட்டு மறையோனையும் இடையர்குலப் பெண்களையும் சைவமதக் கருத்துக்களைக் கூற மாடல் மறையோனையும் பத்தினி வழிபாட்டுக்கு சேர செங்குட்டுவனையும் காப்பியத்துட் கொண்டு வருகிறார். பல்வேறு மதக் கருத்துக்களையும் அங்கீகரித்து நிற்கும் மதச் சார்பின்மையை இளங்கோ அடிகள் காட்டியுள்ளார்.

பௌத்தமும் சமணமும் கடவுள் கொள்கையைக் கடுமையாக எதிர்க்கும் மதங்கள். சைவமும் வைணவமும் கடவுள் கொள்கைளை உறுதியாக ஏற்றுக்கொள்பவை.

சிலப்பதிகாரத்தில் இயற்கை வழிபாடு, பத்தினி வழிபாடு, திருமால் வழிபாடு, முருக வழிபாடு, இந்திர வழிபாடு, சிவ வழிபாடு, பாசண்டச் சாத்தன் வழிபாடு, அருகன் வழிபாடு, புத்ததேவன் வழிபாடு, கொற்றவை வழிபாடு என்பனவற்றையெல்லாம் மதச் சார்பின்மை நோக்கில் வெளிக் காட்டியுள்ளார். பல்வகைப்பட்ட வழிபாடுகளில் தேசியத் திருவிழாவாக இந்திர விழா சிறப்பித்துக் காட்டப்படுகிறது, அங்கே நான்மறை வேள்விகள் ஒருபக்கமும் நடந்தபடி இருந்தன. இன்னுமோர் பக்கலாக விழாக்களும் பூசைகளும் சிறப்பாக நடந்தன. அருகர், புத்தர் தவச்சாலைகளும் அறம் செய்யும் தருமச் சாலைகளும் துறவிகள் வாழும் புனித இடங்களும் திறமைமிக்க பெரியோர் உரைக்கும் செயல்களெல்லாம் மறுபக்கமுமாகச்சிறந்து விளங்கின. இவ்வாறான காட்சியை இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் நாம் பார்க்கமுடிகிறது. அங்கே

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் விழா
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்
நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறு வேறு கடவுளர் சாறு ஒருபால்
அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஒருபால்"

எனக்கூறப்பட்டுள்ளது.

இறுதியாக மேலும் ஒன்றினை எடுத்துக் கூறி நிறைவுக்கு வருகின்றேன். காப்பியத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில் இயற்கையைப் போற்றுவதைக் காண்கின்றோம்.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்"

என வரும் வாழ்த்துப்பாடலின் நயம் பார்க்கின், உலகத்திற்கு ஒளிகொடுத்து விளங்க வைப்பவை கதிர். அவை சூரியனும் சந்திரனும் ஆகும். எனவே இவற்றிற்கு முதல் வணக்கம் செலுத்துகின்றார். அடுத்து உலகத்திற்கோர் ஆதரமான நீரினை வழங்கும் மழைக்கும் வாழ்த்துரைக்கின்றார். அடுத்ததாகப் பூம்புகாரைப் போற்றுகின்றார். இதன்மூலமாக நற்றிறம் புரிந்து அற்புளம் சிறந்து பற்றுவழியில் அறம் செய்தலினால் உயர்ந்தோர் வாழும் பூம்புகாரைப் போற்றுகின்றார். இவ்வாறு இயற்கையைப் போற்றுவன் மூலசந்திரனைக் கூறி சோழனின் குடையையும், சூரியனைக் கூறி மன்னனின் ஆணைச் சக்கரத்தையும் மாமழையைக் கூறி அவனது அருளாட்சியையும் தலைநகரமாகிய பூம்புகாரைக் கூறி அவனது புகழும் போற்றப்படுகின்றன. இங்கு தனியொரு மதத்திற்கு மங்கல வாழ்த்துக் கூறாது, சமயங்கள் அனைத்துக்கும் பொதுவான இயற்கைக்கு வாழ்த்துக் கூறுகின்றார். சிலப்பதிகாரம் காட்டும் சமய சமரச நிலை தமிழர் பண்பாட்டுச் சால்பின் ஒரு அங்கமாகும். பண்டைய சால்புடை மக்கள் தமது வாழ்வின் நலத்திற்காக பற்பல சமயங்களைக் கைக்கொண்டொழுகினும், சமயக் காழ்ப்புணர்வுகளின்றி அவர்கள் தம்மிடையே ஒற்றுமையுடனே வாழ்ந்தனர் என்பதற்கு சிலப்பதிகாரம் ஒரு சான்று.

மேலும் அறிஞர்களென்போர் தத்தமக்கு சமூக வரையறைகள் இருந்தாலும் அவர்கள் சமூகவரையறைகளுக்கும் அப்பாற்பட்டு ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் நன்மை பயக்கும் வண்ணமாகத் தமது கருத்துக்களை எடுத்தியம்புவர்.அவ்வரிசையிலேதான் இளங்கோ அடிகளும் வைத்து மதிக்கப்படுகின்றார். இளங்கோ அடிகளின் தூய புலமை உள்ளத்துச்சமயச்சார்பின்மையை,சிலப்பதிகாரம் எனும் முத்தமிழ் பெருங்காப்பியத்தின் மூலமாக,நாம் நாளும் பொழுதும் நயந்து நயந்து போற்றுவோமாக.

# கண்ணகி கலை இலக்கிய விழா - 2016, கன்னன்குடா

## உடுக்கு அடித்தல் (திறந்த போட்டி) வெற்றியாளர்களின் விபரம்


| நிலை | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01 | சின்னத்துரை நவரெட்ணம் | குறிஞ்சாமுனை, கன்னன்குடா |
| 02 | ஆறுமுகம் கார்த்திகேசு | மங்கிகட்டு, நாவற்காடு |
| 03 | குமாரவேல் பிறைசூடி | கன்னன்குடா, மட்டக்களப்பு |
| 03 | முத்தையா வசந்தகுமார் | ஈச்சந்தீவு, நாவற்குடா |

# அஞ்சலி

பன்முக ஆளுமையாளர் **முருகேசு தவராஜா**

(கண்ணகி கலை இலக்கியக் கூடல் முன்னாள் செயற்குழு உறுப்பினர்)

## 1950.03.18 - 2016.09.13



பல்லாளுமை கொண்ட பலசாலி முருகேசு வள்ளியம்மையின் பத்து சகோதரர்களின் ஆறாவது நபரான இவர் ஆரம்பக்கல்வியை வாழைச்சேனையிலும் புலமைப்பரிசில் வெற்றியின் பின் மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கணித விஞ்ஞான துறையில் கற்று பல்துறை திறனுடைய முழு ஆளுமையுடைய கல்வியின் நோக்கம் வெற்றி பெற்ற முழுமைத் தரமுடைய சமூகப் பிரஜையாகத் திகழ்ந்தார். தொழிலை பெற்றும் தொடர்கல்வி வாழ்நாள் கல்வி என்பதில் ஈடுபாடுடைய இவர் தமது காகித தொழிற் சாலை தொழிலை விட்டு இவர் யாழ் கல்கலைக்கழகத்தில் B.Sc வர்த்தக முகாமைத்துவ பட்டத்தையும் பெற்று ஆங்கில மற்றும் வர்த்தக ஆசிரியராகி தொடர்ச்சியாக அதிபரானார். இவர் சமூகத்தில் ஒரு உளவியலாளராக, கல்வித் தத்துவவியலாளராக கல்வித்துறைசார் பல்நோக்கம் கொண்ட முகாமையாளனாக பாடசாலை முதல்வர் தொழிலை மிகச் சிறப்பாக செயற்பட்டார். பாடசாலையின் கலைத் திட்ட செயற்பாடுகளை திட்டமிடுவதிலும், நிறைவேற்றுவதிலும் அவர் கண்ட வெற்றிகளை வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர்களாக இருந்தவர்கள் பெருமைப்பட்டதையும் இவரது செயற்பாடுகளை பல கல்விக் கருத்தரங்குகளில் எழுத்தியம்பியதையும் பெருமையுடன் அறிவேன்.

மாவட்ட மாகாண தேசிய ரீதியிலும் பல சாதனைகளை புரிந்த ஒரு விளைதிறன் பாடசாலையாக மட்/ககு/வாழைச்சேனை இந்துக்கல்லூரி மிளிர்வதற்கு இவரது நல்லாளுமை (Good Governance) காரணமாயிற்று. 1999 இல் இவரது தலைமையில் வாழைச்சேனை மக்களும் இணைந்து வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட கண்காட்சி இன்றும் வாழைச்சேனை பிரதேசத்தில் பேசுபொருளாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கல்விப் பணியோடன்றி பல சமூக, சமய, இலக்கியப் பணிகளில் சமகாலத்தில் தடம் பதித்தவர். சமூக முன்னேற்றத்திற்கான பற்பல செயற்திட்டங்களை வகுத்து செயற்பட்டவர். இலக்கியவாதியான இவர் சிறந்த பேச்சாளனாய், கவிஞராய், நடிகனாய் ஆய்வாளனாய், எழுத்தாளராய் ஆற்றிய பணிகளை யாவரும் அறிவர். சமய சொற்பொழிவுகள், அரசியல் பேச்சுக்கள் விமர்சனங்கள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்கள் துணிவான மண்பற்றாளனாக செய்த பங்களிப்புக்கள் மறக்க முடியாதவை.

தமிழுக்காக பல வடிவங்களில் அவரது சேவை தொடர்ந்தது. மறுபக்கம், மறைமுகம் என்ற இரு சிறுகதை நூல்கள் இவரது எழுத்தாற்றலுக்கு சான்றாக விளங்குகின்றன. இவரது மொழி ஆற்றல், வல்லமை, அதனூடாக ஆற்றிய பணிகள் பல. இன்று பலர் ஆங்கில ஆசிரியர்களாகவும் ஆங்கில புலமையுள்ள வர்களாகவும் திகழ்வதற்கு இவரது கற்பித்தல் காரணமாகவிருக்கிறது. பல அமைச்சர்கள் வாழைச்சேனைப் பகுதிக்கு வருகை தந்த வேளையில் மொழிபெயர்ப்பாளராக சேவையாற்றி சமூகத்தின் பல தேவைகளை நிறைவு செய்ய காரணமாகவிருந்தவர். பலதடவை பலவிதமான மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டும் போர் மிகுந்த வேளையிலும் துணிச்சலாக சமூகத்தின் பிரச்சனைகளுக்காக தன் கடமைகளை மேற்கொண்டவர்.

நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, மனித நேயம், மற்றவரை மதித்தல், உண்மை, நேர்மை, நேர முகாமைத்துவம், கடமை, கண்ணியம் முதலான முழு மனிதப் பண்புகளையும் கொண்ட சமூக, சமய அரசியல் பெரியாரை இழந்து விட்டோம். இவரது இவ் வெற்றிகளுக்கெல்லாம் உறு துணையாகவிருந்த குடும்பத்தார், உறவுகள், நண்பர்கள், பழைய மாணவர்கள், ஊரவர்கள் அனைவருக்கும் பற்றும் பண்பும் உண்டு. பன்முக ஆளுமை கொண்ட மாமனிதன் இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டிய வதிரும் இயற்கையின் முடிவு இவ்வாறாக இருந்து விட்டது. இவரது எண்ணங்கள் சிந்த னைகளை வெற்றி பெறச் செய்ய வேண்டியது இவரது நட்புக்கள் மற்றும் வளர்ப்புக்களின் கடமையாகிறது.

மறைந்த அமரர் முருகேசு தவராஜா அவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**ஆறுமுகம் செல்வநாயகம்**

ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை.

# கண்ணகி கலை இலக்கிய விழா
## 2016
கன்னன்குடா



## 26 ஜூன் 2016, ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள் காலை

### ஆய்வரங்கு (மு.ப 09.30 – பி.ப 01.30)

### "இளங்கோவடிகள் அரங்கு"

#### மங்கல விளக்கேற்றல் - முதன்மை அதிதிகள்



பேராசிரியர் **துரைமனோகரன்**
(முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)



உடுவை **எஸ்.தில்லைநடராசா**
(செயலாளர், அகில இலங்கை இந்து
மாமன்றம், கொழும்பு)



பேராசிரியர் **செ.யோகராசா**
(ஓய்வு நிலைப் பேராசிரியர்)

#### சிறப்பு அதிதி



கலாநிதி **சி.சந்திரசேகரம்**
(தலைவர், புலவர்மணி பெரியதம்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்)





வரவேற்பு நடனம்

**பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலய மாணவிகள்**

நெறியாள்கை : **செல்வி. பகவதி ஆறுமுகம்** (ஆசிரியை)



வரவேற்புரை

**திரு. செ.தபராசா**

(செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



அரங்க அறிமுகம்

**இணைப்பாளர் திரு.த.சோமசுந்தரம்**

(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
மண்முனை மேற்கு)


## ஆய்வரங்கு


- **பொருள் :** **"கண்ணகி வழக்குரை காதையின் வீரக் கதாபாத்திரங்கள்"**
- **தலைமை :** பேராசிரியர் **சி.மௌனகுரு** (காப்பாளர் - கண்ணகி கலை இலக்கியக்கூடல்)
- **ஆய்வு மதிப்பீட்டாளர்கள் :** **பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ்**
(மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

  **க. இரகுபரன்**
(முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)




ஆய்வரங்கில் அவையோர்





# தலைமையுரை

பேராசிரியர் சி.மௌனகுரு

கண்ணகி கலை இலக்கிய விழாவில் கருத்தரங்கம் ஓர் அம்சமாக இடம் பெறுவதை யாவரும் அறிவீர்கள். இக்கருதரங்கத்திற்குத் தொடர்ச்சியாக வருடா வருடம் தலைமை தாங்கும் பாரிய பொறுப்பினை இக்கண்ணகி கலை இலக்கியச் கூடல் தலைவர் தம்பி கோபாலகிருஸ்ணன் எனக்கு அளிக்கிறார்.வேறு ஆட்களைத் தலைமை தாங்குவதற்குப் போடுங்கள் என்றாலும் கேட்காமல் விடாப் பிடியாக என்னையே தலைமை தாங்குமாறு அன்புரிமைக்கட்டளை இடுகிறார்.

அதற்கான காரணமும் உண்டு. ஒவ்வொரு முறையும் கருத்தரங்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நாம் இருவரும் திட்டமிடுவோம், அதற்கான ஆட்களையும் தெரிவோம்.

இதற்காகச் சில நாட்களை நாம் செலவிடுவோம். கருத்தரங்கு பயனுள்ளதாகவும் பெறுமதியானதாகவும் அமையவேண்டும் என்ற அக்கறையில் இதனை நாம் செய்வோம்.

ஆரம்ப காலத்தில் கண்ணகி இலக்கியங்களின் பல் பரிமாணத் தன்மைகளுக்கு முக்கிய மளித்து உருவாக்கப்பட்ட அக்கருத்தரங்குகள் உருவாக்கப்பட்டன, பின்னால் கண்ணகி வழக்குரையை முதன்மைப்படுத்தும் போக்கு உருவானது. தமிழ் நாட்டில் சிலப்பதிகாரம் உலகம் வாழ் முழுத்தமிழருக்கும் கண்ணகி பற்றிக்கூறும் காப்பியமாக அறிமுகமாகியுள்ளது.அதனைப் பலரும் பயின்றனர்.பல்கலைக்கழகங்களில் அது பாட நூலானது..சிலப்பதிகாரத்தில் பாண்டித்தியம் மிக்கோர் உருவானார்கள். திராவிடக் கழகங்கள் சிலப்பதிகாரம் பேசியே தமிழர் மனங்களைக் கவர்ந்தனர்.

பண்டைத் தமிழரின் வரலாற்றைப், பண்பாட்டை,வாழ்க்கைமுறைகளை அறியும் ஆவணமாகவும் சிலப்பதிகாரத்தைக்காணும்போக்கும் தமிழ் நாட்டில் உருவானது. இலங்கை மணித்திரு நாட்டில் கண்ணகி வேறு வகையில் அறிமுகமானாள். சிங்கள மக்கள் மத்தியில் பத்தினி எனவும், வடபுல மக்கள் மத்தியில் அம்மாளாய்ச்சி எனவும்,கிழக்கு மக்கள் மத்தியில் கண்ணகை அம்மன் எனவும் அறிமுகமானாள்.

மட்டக்களப்பில் வைகாசி மாதம் இந்து மக்களுக்கு கண்ணகி மாதமாகும். ஊரெல்லாம் கூடி ஒன்றாகி கண்ணகை அம்மனை நினைவுகூரும் மாதம் அது. மட்டக்களப்பின் கண்ணகையம்மன் வழிபாடு தனித்துவமானது. அதற்கெனப் பத்தாசிமுறைகளு முண்டு. இங்கு படிக்கப்படும் காவியம்தான் கண்ணகி வழக்குரை. ஏட்டுவடிவிலிருந்த இக்காவியத்தை எழுத்துருவில் கொணரப் பலர் உழைத்தனர்..பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வித்துவான் எப்.எக்ஸ்.சி நடராஜா ஆகியோர் முக்கியமா னவர்கள். பல ஏட்டுப்பிரதிகளையும் ஒப்பு நோக்கி ஓர் நல்ல பதிப்பாக இதனைக் கொணர்ந்தவர் வித்துவான்.வீ.சீ.கந்தையா அவர்கள்.

இதற்காக அவருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் கடமைப்பட்டுள்ளது. கண்ணகி வழக்குரை காவியம் நூல் வடிவில் வந்ததாயினும் அது கண்ணகை அம்மன்

கோவில்களில் படிக்கப்படும் ஏடாகவே தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது.அதனை இலக்கிய நோக்கில் அணுகும் முறை இருக்கவேயில்லை.பாடநூல்களிலும் அது இடம் பெறாது போயிற்று. இலக்கியமொன்றினை வழிபாட்டுக்குரியதாக பக்திக்குரியதாகக் கொள்கையில் அதனை நுணுகி நோக்கும் பண்பும்,பல்துறைப்படுத்தி ஆராயும் பண்பும் போய் விடுகிறது. தமிழ்க்காப்பியங்கள் சிலவற்றிற்கும் சமயம் சார் இலக்கியங்கள் சில வற்றிற்கும் இத்தகைய அவலங்கள் நேர்ந்துள்ளன. இந்நிலையில்தான் கண்ணகி வழக்குரையை இலக்கியமாக சமூகவியலாக, வரலாறாக, இசை நடனம் கூறும் காவியமாக, தொன்மமாக, ஒரு சமூகத்தின் உளவியலையும் கூட்டு மனோநிலையையும் அறியும் ஆவணமாகப் பார்ப்பது அவசியம் என நாம் எண்ணினோம்.

இதன்மூலம் சமூகம் பயன்பெறும் பல செய்திகள் கிடைக்கலாம் எனவும் எண்ணினோம், அதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டிலும் கண்ணகி வழக்குரையை மையமாகக் கொண்ட கருத்தரங்குகளை கட்டாயமாக வைக்க ஏற்பாடுகள் செய்தோம்.

கருத்தரங்கின் மையப்பொருள் கண்ணகி வழக்குரையான கதை இதுதான். கண்ணகி வழக்குரையை கருத்தரங்கின் மையப்பொருளாக்கியதுடன் அதனை மையப்படுத்திப்பேச வரும் ஆய்வாளர்களுக்கு நெறிப்படுத்தும் குறிப்புகளும் வழங்குதல் எமது பணியாயிற்று. கவனக் குவிப்பு கண்ணகி வழக்குரையிலிருந்து மாறிவிடக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருந்தோம்.

இதனால் ஆய்வாளர்கள் கண்ணகி வழக்குரையை தூசிதட்டி ஆழமாக நுணுக்கமாகப் படிக்கும் சந்தர்ப்பம் உண்டானது. கண்ணகி வழக்குரை சம்பந்தமான பல தகவல்கள் பொது மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறுவதற்கான வாய்ப்பும் உண்டாயிற்று.

இது கண்ணகி கலை இலக்கியக் கூடலின் பெரும் சாதனை என நான் எண்ணுகிறேன். கண்ணகி வழக்குரை நூற்பிரதிகள் இக்காலத்தில் கிடைப்பது வெகு அருமை. இவ்விலக்கியம் கற்றோர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் பரவாலாகச் சென்றடைய வேண்டுமாயின் இவ்விலக்கியம் மீள்பதிப்புச் செய்யப்பட வேண்டும்.இப்பெரும்பணியினைக் கண்ணகி கலை இலக்கியக் கூடல் செய்ய வேண்டும் என நான் இவ்விடத்தில் வேண்டுகோள் விடுக்கிறேன்.

சென்ற கருத்தரங்குகளில் கண்ணகி வழக்குரையின் வெவ்வேறு அம்சங்களை நோக்கிய நாம் இம்முறை அதன் வரலாற்று அம்சத்தை நுணுகி நோக்க எண்ணியுள்ளோம். சிலப்பதிகாரத்தில் கூறப்படாத சில பாத்திரங்கள் கண்ணகி வழக்குரையில் வருகின்றன. கண்ணகிக்குச் சிலம்பு செய்ய மாணிக்கம் எடுக்க வந்த மீகாமன், அவன் எதிர் கொண்ட வீரநாரணன், விளங்குதேவன், வெடியரசன் என்ற பெரு வீரர்கள் இதில் வரும் முக்கிய பாத்திரங்களாகும்.

ஈழத்தை ஆண்ட ஓர் குலம் முக்குக குலமாகும்.அதன் அரசனாக வெடியரசன் விளங்குகிறான்.அவன் பரந்ததோர் நிலப்பரப்பை இலங்கையில் ஆள்வதுடன் பாரியதோர் கப்பல் படையினையும் வைத்திருக்கிறான் என்ற செய்திகளைக் கண்ணகி வழக்குரை தருகிறது. வெடியரசன் கதை எனும் நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் கா.சிவத்தம்பி யாழ்ப்பாண வரலாற்றின் அகற்சியை வேண்டி நிற்கும் ஒரு நூல் என அதனைக் குறிப்பிட்டமையை நாம் இங்கு நினைவு கூர்வோம். ஈழத் தமிழர் வரலாறு இன்னும் பல அகற்சிகளை வேண்டி நிற்கிறது என்பதை நாம் மனம் கொள்வோமாக. சிலப்பதிகாரம் கூறாத இக்கதை,இப்பாத்திரங்கள் ஏன் கண்ணகி வழக்குரையில் வருகின்றன? என்பது ஒரு வினா.

அத்தோடு இவற்றின் குணாதிசயங்கள் செயற்பாடுகள் என்பன யாவை? என்பது இன்னொரு வினா. இவற்றிற்கும் ஈழத்தமிழர் வரலாற்றிற்குமிடையே காணப்படும் தொடர்புகள் யாவை என்பன அடுத்த வினா? வினாக்களை எழுப்புவதும் அதற்கான விடைகளைத் தேடுவதும் ஆய்வாளர் கடனாகும்.

இங்கு வந்துள்ள ஆய்வாளர்கள் இந்த வினாக்களை எவ்வாறு அணுகுகிறார்கள்.இப்பாத்திரங்களை என்ன கோணத்தில் ஆராய்கிறார்கள் என்பதை நாம் இங்கு கேட்கவுள்ளோம். கண்ணகி வழக்குரையில் மேற்கொள்ளப்படும் நுணுக்க ஆய்வுகள் இவ்விலக்கியத்தின் பல்பரிமாணங்களை எமக்கு உணர்த்துவதுடன் நம்மையே நமக்கு உணர்த்தவும் கூடும்.



# ஆய்வுரை - I

## "வெடியரசன்"

ஆய்வாளர் **திரு. த.மேகராசா** (கவிஞர் மேரா)

### 1. அறிமுகம்.

போர்த்திறனும் வீரமும் மிக்க பாத்திரங்களே வீரக்கதாபாத்திரங்கள் என்று கருதப்படுகின்றன. கண்ணகி வழக்குரைக் காப்பியத்தில் வெடியரசன், வீரநாரணன், விளங்குதேவன், மீகாமன் ஆகிய நான்கு வீரக்கதா பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இக்காப்பியத்தில் வருகின்ற கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை ஆகிய இரு காதைகளிலும்இப்பாத்திரங்களின் போர்த்திறன், கப்பல் கட்டும் ஆற்றல், வீரக்குணம் ஆகியவை எடுத்துக் கூறப்பட்டுள்ளன. கண்ணகிவழக்குரையில் வருகின்ற இவ்வீரப்பாத்திரங்கள் சிலப்பதிகாரத்தில் இல்லாதவையாகும். இவ்வகையில் கண்ணகி வழக்குரையில் வருகின்ற வீரப்பாத்திரங்களை ஆராய்வது அவசியமானதாகும். இவ்வாய்வு வெடியரசன் பாத்திரம் பற்றியதாக அமைகின்றது.

### 2. ஆய்வின் நோக்கங்கள்

2.1. வெடியரசன் ஓர் வீரக்கதா பாத்திரம் என்பதனை எடுத்துக் கூறுதல்.

2.2. வெடியரசன் பாத்திரத்தினூடாக ஈழத்தின் சமூக அமைப்பினை அடையாளப்படுத்துதல்.

2.3. கண்ணகிவழக்குரைக் காப்பியத்தினை வாசிக்கத் தூண்டுதல்.

### 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு வீ.சி.கந்தையாவினால் பதிப்பிக்கப்பட்ட கண்ணகிவழக்குரை காப்பியத்தினை அடிப்படையாகக்கொண்டு பகுப்பாய்வு மற்றும் விவரண முறையியல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. தேவையான இடங்களில் ஒப்பியல், சமூகவியல் ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

### 4. நூலறிமுகம்: கண்ணகிவழக்குரை

கண்ணகி தொன்மம் சமூகத்தில் ஆழ வேரூன்றியதாகக் காணப்படுகின்றது. கண்ணகி-கோவலன் வாழ்வியலை எடுத்துக் கூறும் சிறந்ததொரு முத்தமிழ்க் காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரமாகும்.இச்சிலப்பதிகாரக் கதையினை அடிப்படையாகக் கொண்டு ஈழத்திலும் தமிழகம், கேரளா உள்ளிட்ட இடங்களிலும் பல கண்ணகி இலக்கியங்கள் எழுந்துள்ளதுடன் அவை பற்றிய ஆய்வுகளும் வளர்ச்சிபெற்றுள்ளன. இவ்விதத்தில் மட்டக்களப்புப் பிரதேச கண்ணகியம்மன் ஆலயங்களில் கண்ணகிவழக்குரை என்றும் வன்னிப் பிரதேச கண்ணகியம்மன் ஆலயங்களில் சிலம்புகூறல் என்றும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோவலனார்கதை என்றும் வழங்கி வரும் கண்ணகி இலக்கியங்கள் கவனிக்கப்படவேண்டியவையாகும். இவ்விலக் கியங்கள் நீண்டகாலமாக ஏட்டுவடிவில் கைமாறப்பட்டு வந்துள்ளமையினாலும்,



வாய்மொழிப் பயில் நிலை காரணமாகவும்பிரதேசத்திற்குப் பிரதேசம் மாற்றமடைந்து வந்துள்ளன. ஆரம்ப கால ஈழத்து இலக்கியங்களை நோக்குமிடத்து சோதிட, வைத்திய நூல்களோடு கண்ணகி வழக்குரையும் முக்கியத்துவமுடையதாக உள்ளது. இந்நூலே மட்டக்களப்பில் எழுத்துருவில் கிடைக்கப்பெற்ற முதலாவது இலக்கியம் என்றும் கூற இடமுண்டு. கண்ணகியம்மன் சடங்கு காலத்தில் மட்டக்களப்புப் பிரதேச கண்ணகி கோயில்களில் பக்தியோடு படிக்கப்படும் இந்நூலை இப்பிரதேச மக்கள் "வழக்குரை ஏடு"எனவும் ''வழக்குரைக் காதை'', எனவும்''வழக்குரை படிப்பு''எனவும் வெவ்வேறு விதங்களில் அழைப்பர். இந்நூல் சகவீரன் என்பவனால் பாடப்பட்டதெனக் குறிப்பிடப்படுகின்ற போதிலும் இக்கருத்து ஆய்வுக்குரியதாகவே உள்ளது.

ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில்(கி.பி.1284 – கி.பி.1628) எழுந்த நூலாக கண்ணகி வழக்குரை குறிப்பிடப்படுகின்றது. இந்நூல் கி.பி 14ம் நூற்றாண்டில் இயற்றப் பட்டதெனக் குறிப்பிடலாம். எப்.எக்ஸ்.சி.நடராஜா செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஏட்டிலுள்ள பாடலில் இக்காப்பியம் கி.பி. 1393 இல் பாடப்பட்டதெனக் கூறப்பட்டுள்ளதாகக் கூறி இக்காலமே இந்நூல் தோன்றிய காலமெனக் குறிப்பிடுகின்றார்.(1989:பக்.13)

''வாயுணர்ந்த நல்லோர் முன் வழங்கு சிலப்பதிகாரம்
தூயபுகழ்த் தாழிசையாற் தொகுத்துரைத்த ஆசான்
ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்று மூன்றுதனில்
நேயமுடன் இக்கதையை நிறுத்தினார் மாநிலத்தே'' (திருத்தப்பட்டது)

கண்ணகி வழக்குரையின் அமைப்பு சிலப்பதிகாரத்திலிருந்து வேறுபட்டது. சிலப்பதிகார வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் எவையும் கண்ணகி வழக்குரையில் இல்லை. பாண்டிய மன்னனுடன் வழக்குரைத்த பின்னர் மதுரை எரித்து தணியாத கோபத்துடன் நின்ற கண்ணகியை இடைச்சேரி மக்கள் கோபம் தணிந்தருளுமாறு பாடிய குளிர்ச்சிக் காதையுடன் கண்ணகி வழக்குரை முடிவடைகின்றது. சிலப்பதிகாரத்தில் காணப்பட்ட உரையாடல் பாங்கு கண்ணகி வழக்குரையில் இல்லை. அதேவேளை நாகமணி வாங்கிய கதை, மீகாமன், வெடியரசன் போர் உள்ளிட்ட தகவல்கள் சிலப்பதிகாரத்தில் இல்லை.

கண்ணகி வழக்குரையில் பதினொரு காதைகள் உள்ளன. இந்நூல் வெண்பாவால் அமைந்த பல தாழிசைகளைக் கொண்டிருப்பதோடு விருத்தச் செய்யுள்களையும், அந்தாதித் தொடையமைப்பையும் கொண்டு பொதுமக்கள் படிப்பதற்கேற்ற இனிய நடையில் அமைந்துள்ளது. வரம் பெறு காதை முதல் குளிர்ச்சிக் காதையீறாகப் பதினொரு காதைகளையுடையதாய் 2226 செய்யுட்களால் நிறைவுறுகின்றது. சில செய்யுட்கள் புதுப் பெயர்களைப் பெற்று நிற்கின்றன. கலி விருத்தங்களை "நடை" என்றும் "நடை சாரி" என்றும் மற்றைய சந்த விருத்தங்களை "சிந்து" என்றும் வழங்கக் காணலாம்.

ஈழத்துக் கூத்துமரபு, கிராமிய பண்பாடு ஆகியவை கண்ணகிவழக்குரையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பல பேச்சுமொழிச் சொற்களை இந்நூலில் காணமுடியும். மட்டக்களப்புப் பிரதேச கண்ணகி அம்மன் கோவில்களில் காணப்பட்ட கண்ணகி வழக்குரை ஏடுகளை பரிசோதித்து, வீ.சி.கந்தையா 1968 ஆம் ஆண்டு கண்ணகிவழக்குரை காப்பியத்தினைப் பதிப்பித்துள்ளார்.

## 5. வீரக்கதாபாத்திரம் : வெடியரசன்

கண்ணகி வழக்குரையில் அதன் ஆசிரியர் கதையமைப்புக்கு ஏற்றவாறு பாத்திரங்களைப் படைத்துள்ளார்.ஈழத்தில் வாய்மொழியாக வழங்கி வருகின்ற கதைகளும் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன. அவ்விதத்தில் சிலப்பதிகாரத்தில் காணப்படாத பாத்திரங்களும் இந்நூலில் படைக்கப்பட்டுள்ளன. கண்ணகி, கோவலன், மாதவி, மீகாமன், வெடியரசன், வீரநாரணன், விளங்குதேவன், நீலகேசி, சித்திராபதி, மாசாத்தார், மாநாயகன், விஞ்சையன், இடைச்சியம்மை, மாலகன், செம்மான் எனப்பல பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. இப்பாத்திரங்களில் ஏலவே குறிப்பிட்டதுபோல வெடியரசன் ஒரு வீரக்கதா பாத்திரமாகப்படைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

கண்ணகிவழக்குரையில் கப்பல் வைத்த காதை, கடலோட்டுக்காதை ஆகிய இரு காதைகளிலும் வெடியரசன் பற்றிய தகவல்கள் உள்ளன. இக்காப்பியத்தில் முதன்முதலாக "வெடியரசன்" என்ற பெயரை மீகாமன் மூலமாகவே வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர். கண்ணகியின் திருமணத்தின் பொருட்டு இலங்கைக்குச் சென்று நாகமணி எடுப்பதற்குப் பொருத்தமான வீரனாக மீகாமனைத் தெரிவு செய்கின்றனர். கண்ணகியின் தந்தையான மானாகர் மீகாமனிடம் நாகமணியை எடுத்துவருமாறு கூறிய வேளையில் வெடியரசன் வழிமறிப்பான் என்றும் மரக்கலங்கள் ஆயிரம் தந்து எனை மணி வாங்க அனுப்பும்படியும் கேட்கிறான் மீகாமன்.

"மணி வாங்கித் தாருமென்ற வணிகேசா நீர் கேளும்
மணிவாங்கப் போம்வழியில் வழிமறிப்பான் வெடியரசன்
மணிவாங்க மனதுமுண்டால் மரக்கலமா யிரந்தேடி
மணிவாங்க எனைவிடுநீ வாங்கிவந்து தருவேனே"

(க.வ., கப்பல் வைத்தகாதை, செய்:105)

மீகாமனின் இக் கூற்றுமூலம் வெடியரசன் இலங்கைக்கடலரசனாகவும் வீரம் பொருந்தியவனாகவும், எல்லோராலும் நன்கு அறியப்பட்டவனாகவும் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம்.

## 5. 1. வெடியரசனின் பிறப்பும் குலமும்

வெடியரசனின் பிறப்புப் பற்றியும் அவனது குலம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவன் விஷ்ணுவின் தொடையிலிருந்து பிறந்தவன் (கண்ணகிவழக்குரை, கடலோட்டு காதை, வெடியரசன் போர், செய்:3) என்றும், தன்னை எதிர்த்து வருகின்ற படையினை வெல்வதற்குரிய சக்தியை விஷ்ணுவிடமிருந்து பெற்றவன் (மேலது, செய்:5) என்றும் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் வெடியரசன் விஷ்ணுவின் புத்திரன் என்பது புலப்படுத்தப்படுகின்றது. அத்துடன் தொடை என்பது வீரத்தின் அடையாளம் என்பதனால் வெடியரசன் தொடையிலிருந்து பிறந்தவன் என்பதன் மூலம் அவன் வீரம் மிக்கவன் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. கடலில் முக்குளித்து வலம்புரி சங்கினை எடுத்துவந்தவனாதலின் முக்கியன்(மேலது, செய்:4) எனவும் வெடியரசன் குறிப்பிடப்படுகின்றான்.

"பிறந்துமுன்னே தொழுதுநிற்கப் பெருமாளும் என்சொலுவார்
மறந்துவந்தோம் வலம்புரியை வாரியிலே நீர்போகி
அறிந்தபடி முக்குளித்து அதனைஇங்கே தருவதென்ன
சிறந்தவன்போய் எடுத்துவந்து திருமுன்னே வைத்துநின்றான்"

(க.வ., கடலோட்டு காதை, செய்: 4)

"நின்றவனை முகநோக்கி நெடியோனு மேதுசொல்வான்
சென்றுதிருப் பாற்கடலிற் திரிந்துஇது தந்தமையால்
உன்றன்பேர் முக்கியன்காண் உனக்கென்னால் வேண்டியது
இன்றிங்கே நான் தருவேன்என்னவேணு மென்றுரைத்தான்"

(மேலது, செய்: 5)

மேலும் பல இடங்களில் முக்கியர்கோன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். முக்கியன், முக்கியர் கோன் என்று குறிப்பிடப்படுவதனடிப்படையில் வெடியரசனும் அவனது தம்பிமாரும் முற்குகர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடுகின்றனர்.வெடியரசனின் மனைவி இளவரசி நீலகேசி என்பவளாவாள்.

## 5. 2. வெடியரசனின் வீரக்குண இயல்பு

வெடியரசன் ஓர் வீரக்கதா பாத்திரம் என்பதனை நிரூபிப்பதற்குரிய பாடல்கள் கடலோட்டுக்காதையிலேயே காணப்படுகின்றன. நீலகேசி கொடிய கனவுகளைக் கண்டு, மிகுந்த பதட்டத்துடனும் அச்சத்துடனும் வெடியரசனிடம் சொன்ன வேளையில் அவன் கூறுகின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் வீர உணர்ச்சியை எடுத்துக்கூறுவனவாக உள்ளன.

"ஆறாத சொற்பனங்கள் கண்டவற்கங் கடாது கண்டாய்
மாறாக மீகாமன் வாரணந்தான் வந்தாலும்
கூறாகக் கொன்றிடுவேன் கொடியிடையே யஞ்சாதே"
(மேலது, செய்: 15)

மீகாமன் வந்தாலும் அவனைக் கூறாகக் கொன்றிடுவேன் என்று வெடியரசன் கூறுவதன் மூலம் உலகிலேயே தனக்கு நிகராக போர் செய்ய வல்லவன் யார் என்பது தொடர்பாக வெடியரசன் அறிந்து வைத்துள்ளான் என்பதையும் அவனைக் கூட கொன்று விடுகின்ற ஆற்றல் மிக்கவன் அவன் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

"கொடியை வென்ற இடையாளே கோடிகாகம் வந்தாலும்
கடுகவொரு கல்லெறிந்தாற் காகமஞ்சியோடாதோ
வெடியரசன் என்றென்னை மேதினியோரறியாரோ
படியிலுள்ள எலி திரண்டாற் பாம்பாமோ பார் மொழியே"
(க.வ.,கடலோட்டுக்காதை, செய்:16)

இப்பாடலிலுள்ள "வெடியரசன் என்றென்னை மேதினியோரறியாரோ" என்ற கூற்று உலகத்து மக்களால் வெடியரசன் நன்கு அறியப்பட்டவன் என்பதை எடுத்துக் கூறுவதாகவுள்ளது. மேலும் எத்தனையாயிரம் படைகள் வந்து சூழ்ந்துகொண்டாலும் அப்படைகளை அழித்து விடும்ஆற்றல் தனக்குஉண்டு என்பதனை "கோடி காகம் வந்தாலும் ஒரு கல்லை எறிந்துவிட்டால் அக்காகங்கள் பறந்துவிடும்" என்ற கூற்று மூலம் சுட்டிக்காட்டுகின்றான் வெடியரசன்.

வெடியரசன் தன்னை நாய்,சிங்கம், புலி, கற்றூண் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு நாய்,சிங்கம் ஆகியவற்றின் முன்னே முயல் திரண்டு வந்ததுண்டோ என்றும், புலியின் வாயின் முன்னே மேற்கூறியவை திரண்டு சென்றிடுமோ என்றும், கற்றூணைக் கறையான் தின்றதுண்டோ என்றும் கூறுகின்றான். இக்கூற்றுக்கள் வெடியரசன் ஓர் வீரக்கதா பாத்திரம் என்பதனை எடுத்துக் கூறுவனவாகவுள்ளன.

"மொழியில் நாய் சிங்கம்முன்னே முயல்திரண்டு வந்ததுண்டோ
செழுவாயின் புலியின்முன்னே திரண்டு புல்லாய் சென்றதுண்டோ
கிளிமொழியே கற்றூணைக் கறையானும் தின்றதுண்டோ
மழைமுகில் சேர் குழலாரே மற்றெனக்கிங்கெதிரியுண்டோ"
(மேலது, செய்: 17)

எதிர்த்துவருகின்ற படைகளை அழித்து வெற்றி பெற்றவன் என்றே என்னை உலகத்தோர் அறிந்துள்ளனர் என்றும் தான் பகையை வீழ்த்தி வெற்றி பெறுவதென்பது புதிதோ என்றும் வெடியரசன் குறிப்பிடுகின்றான். வெடியரசனின் இக் கூற்றும் அவனொரு தன்னிகரில்லாத போர் வீரன் என்பதனையே புலப்படுத்துகின்றது.

"எதிர் பொருத வந்தவனை இமயபுரம் ஏற்றேனோ
மதியாமல் மரக்கலங்கள் வாரியின்மேல் வந்ததுண்டோ
சதியாக வெட்டியங்கே தாழ்ப்பதுவு மறியாரோ
புதிதோதான் என்சமத்துப் புவியிலுள்ளோ ரறியாரோ"
(மேலது, செய்: 18)

மீகாமனை பட்டணத்தான் என்று குறிப்பிடும் வெடியரசன் அம்மீகாமனையும் அவன் படையையும் மான்கள் கூட்டத்தை புலி சென்று துரத்துவதைப்போன்று வெட்டி கொன்றும் துரத்தியும் விடுவேன் என்று குறிப்பிடுகின்றான். உவமை அணி பொருத்தமுறக் கையாளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

"அறிவுடைய பட்டணத்தான் அவனேதான் வருவானாகில்
செறிவுடைய மான்திரளைச் சென்று புலி துரந்தாற்போல்

முறிய வெட்டி யவன்படையை முனையின்முன்னே கொன்றிலனேல்
*மறையவர்க்குத் தாரைவார்த்து மற்றில்லையென்றவனாவேன்*"

(மேலது, செய்: 19)

"வீரமெல்லாம் மிகப் பெரிய வெடியரசன்"(செய்: 24) மரக்கலங்கள் வருகின்றன என்பதனை அறிந்து மாற்றானை வெல்வதற்குத் திக்குகளிலுள்ள வீரர்களைச் சென்றழைத்து வாருமென்று கூறுகின்றான். இத்தன்மை வருகின்ற படைகளை எதிர்ப்பதற்குத் தயாராகின்ற படைத்தளபதிக்குரிய தலைமைத்துவ ஆற்றலை எடுத்துக் கூறுகின்றது. மேலும் படைகள் வரக்கண்ட வெடியரசன்

"பேணிவந்த கப்பலெல்லாம் பிடியாமல் விட்டோமால்
ஆண்மைவிட்டுப் பெண்மை நச்சு அலியனாம் ஆவோமென்றான்"

(மேலது, செய்: 35)

மனைவி நீலகேசியிடம் போரிடச் செல்வதற்கு விடை பெற்று வாளையும் வாங்கிக் கொண்டு படைகளைத் திரட்டிச் சென்ற வெடியரசன் மணி வாங்குவதற்காக இங்கே வந்தவனை ஓடி வெட்ட வேண்டுமென்றும், முட்டிய வர்களை வெட்டி கொன்றுவிடுவேன் என்றும், படைவீரர்களே அஞ்ச வேண்டாம் என்றும் குறிப்பிடுகின்றான்.

வேடிதனில் வீரர் சூழ வெடியரசர் போயேறி
நாடியிங்கே மணிவாங்க நாடிவழி வந்தவனை
ஓடிவெட்ட வேணுமென்று உருக்களெல்லாம் பாய்வாங்கி
வாடியிடா போலடைய வளைந்துகொண்டு விட்டானே

(மேலது, செய்: 56)

விட்டபின்பு வேடிதனில் வீரர் தம்மை முகம்பார்த்து
மட்டுலவும் வெடியரசன் மனமகிழ்ந்தங்கேது சொல்வான்
பட்டணத்தான் தனக்காகப் படை வீரரஞ்சாதே
முட்டியவன்றனை வெட்டி முனையில் முன்னங் கொல்வனென்றான்

(மேலது, செய்: 57)

வெடியரசன் மீகாமனை நோக்கி "தேடியிங்கே வந்ததேதுன் தேசமெது பதியேது நாடியுன்னை விடுத்தவரார் நானறியச் சொல்லுமென்றான்" (மேலது, செய்:63) அவ்வேளையில் மீகாமன் தனது பெயர் மீகாமன் என்றும் தான் வருண குலத்தில் உதித்தவன் என்றும், மானாகர் கப்பல் இது என்றும், புகார் நாடு சோழ மண்டலம் பதி என்றும், மானாகர் மகள் கண்ணகையாருக்கு மணம் முடிக்க நாகமணி எடுக்க வந்தேன் என்றும், அண்ணாவே வழியை விடுங்கள் என்றும் சொல்லியதைக் கேட்காமல் "வழியை விடுவதில்லை மணிவாங்கப் போக வொட்டேன்" (மேலது, செய்: 66) என்று கூறுகின்றான். தயவுகூர்ந்து மீகாமன் மீண்டும் வெடியரசனை நோக்கி "விருதராசர் கொண்டாடும் வெடியரசே பெருமானே" என்று மரியாதையுடன் விழித்து வழியை விடும்படி கேட்கிறான். அதற்கு கடலரசன் என்று என்னை உலகோர் அறியார்களோ? என்றும் கெடு கருமங் கருதி வந்து விட்டாய் தப்பிச் செல்லமாட்டாய் என்றும் வெடியரசன் பதிலளிக்கின்றான்.

கடலரசன் என்றென்னைக் காசினியோ ரறியாரோ
கெடுகருமங் கருதிவந்தாய் கிளையோ முனைவானில்
படைமலைவேன் மீகாமா பாயைவிடாய் என்றுரைத்தான்

(மேலது, செய்: 68)

ஒப்பற்ற வீரனாகிய வெடியரசனை மீறி யாரும் இலங்கைக்குள் நுழைய முடியாது என்றும் அப்படி மீறிச் செயற்படுகின்றவர்களை வெடியரசன் உயிருடன் செல்ல விடமாட்டான் என்றும் உலகோர் அறிந்து வைத்துள் ளார்கள் என்பதனை கண்ணகி வழக்குரையாசிரியர் வெடியரசனூடாகவே வெளிப்படுத்தியிருப்பதோடு

அந்த வீரம் தளர்ந்தது என்று உலகோர் அறியக் கூடாது என்றும் வெடியரசன் கருதிச் செயற்படுவதாகக் காட்டமுனைந்துள்ளார்.

திரை உனக்குத் தருவேன்; கடலரசே! அண்ணாவே வழியை விடு என்று மீகாமன் கேட்க வெடியரசன் அதனை மறுத்து படைகளோடு உனையும் அழித்து விட்டு முப்புரத்தையும் அழித்த சிவன்போல் திகழ்வேன் என்று கூறுகின்றான். இச்சந்தர்ப்பத்தில் வெடியரசனின் வீரப் பேச்சும், வீறாப்புக் குணமும் அவற்றினூடாக வீர உணர்ச்சியும் உச்ச நிலையை அடைவதைக் காணலாம். அதாவது தன்னை முப்புரங்களையும் அழித்து நின்ற சிவபெருமானுடன் ஒப்பிட்டு அவன் கூறுவது வெடியரசன் ஓர் வீரக் கதாபாத்திரம் என்பதனை தெட்டத் தெளிவாகவே காட்டுவதாகவுள்ளது.

அண்ணாவி என்று சொன்னாய் அடல்புனையுமீகாமா
பண்ணாரு மொழிமடவார் பணிக்குமணி வாங்க முன்னே
எண்ணாதார் புரமதனை ஈசன் எரித்தாப்போலே
விண்ணேற விட்டிலனால் வெடியரச னல்லேனோ
(செய்: 70)

நிணம் செருக்கி வந்தாய்காண் நீதிபுகார் மீகாமா
மணந்தனக்கு மணிவாங்கி மகிழ்ந்துபோக வந்தவுன்னை
குணம் பெருக வுன்படையைக் கொடும்புலிதான் புல்வாயைக்
கணந்துரந்தாற் போற்றுரந்து கடலெங்கு மொட்டேனோ
(செய்: 77)

கம்பராமாயணத்தில் கைகேயி கேட்ட வரத்தின் பிரகாரம் இராமன் வனத்திற்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் தன்னிலையை அண்ணனிடம் சொல்லி விடவேண்டுமென்ற எண்ணத்துடன் பரதன் சென்ற வேளையில் இராமனுக்குத் துணையாக இருந்த இலக்குவணன் கோபப்பட்டு வீர வார்த்தைகளை வெளிப்படுத்தி, தான் பரதனையும் அவனது படைகளையும் அழித்துவிட்டு முப்புரங்களை அழித்த சிவபெருமான் போல் நிற்பேன் என்று குறிப்பிடுவது இவ்விடத்தில் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

வெடியரசனின் வார்த்தைகளால் கோபங் கொண்ட மீகாமன் உன்னை வெற்றி கொள்ளவில்லையாயின் என் பெயர் மீகாமனில்லை என்று கூறுகின்றான். இருவருக்கும் வாக்கு வாதங்கள் பெருத்து இறுதியில் இருதரப்பினரும் போரிடத் தொடங்கினர். மீகாமன் - வெடியரசன் யுத்தம் இராம - இராவண யுத்தம் போலவும், மகாபாரதப் போர் போலவும் நீண்ட நேரம் வெற்றி தோல்வி இன்றி நடைபெற்றது. வெட்டும் சமர், குத்தும் சமர் என்று கடலில் பெருத்த யுத்தம் நடைபெற்றது. கடலரசனின் படைகள் கடலில் மிதந்து கொண்டிருந்தன. உடல்கள் நீரில் மிதந்துகொண்டிருந்தன. மீகாமனின் ஐந்நூறு கப்பல்கள் வளைத்து நிற்கக்கண்ட வெடியரசன் திகைத்துப்போய் நின்றான். போரில் தோற்றுப்போனால் யாவரும் தன்னைப் பழிப்பர் என்று எண்ணி போர் செய்யவே மீண்டும் படை திரட்ட எண்ணினான் வெடியரசன். இச்செயற்பாடு தன் வீரத்தை உலகம் போற்றவேண்டுமென்று கருதிச் செயற்பட்ட அவனது மனநிலையினைப் புலப்படுத்துகின்றது.

வெடியரசனது செயற்பாடுகளும் வீரப் பேச்சுக்களும் சங்க காலத்தில் வேந்தனொருவன் தன் வலியை உலகோர் புகழ்வதையே விரும்பிச் செயற்பட்ட நெய்தல் நிலப் போர் ஒழுக்கமாகிய தும்மையைப் புலப்படுத்துவதாகவுள்ளது.

இறுதியில் வெடியரசன் மீகாமனிடம் சிறைப்படுகின்றான். தன்னிகரில்லாத வீரம் மிக்க கடலரசனாகிய வெடியரசன் முற்கூறியபடி விஷ்ணுவிடமிருந்து எதிர்த்த படை வெல்வதற்குரிய வரத்தைப் பெற்றவனாவான். தோற்கடிக்கமுடியாத வெடியரசன் மீகாமனுடன் மேற்கொண்ட போரில் தோற்றுப்போயிருக்கின்றான். அழியாத வரம் பெற்ற இராவணன் எப்படி இராமனால் தோற்கடிக்கப்பட்டானோ அதேபோன்றுதான் கண்ணகியின் அருளினால் வெடியரசன் தோற்கடிக்கப்பட்டான். மீகாமன் வெல்வதற்குகண்ணகியின் அருளே காரணம் என்பதனையும் தனது திருமணத்தின் பொருட்டு நாகமணி எடுக்க வந்த மீகாமன்

பக்கமே கண்ணகியின் அருள் இருந்தமையினால்வெடியரசன் தோற்றான் என்பதனையும் மீகாமனின் கூற்றாக வரும் பின்வரும் பாடல் எடுத்துக்கூறுகின்றது.

"விண்ணிலவன் றனைவிடுவேன் வீரருள்ளோ ரஞ்சாதே
கண்ணகைதன் அருளாலே கடல்வினையும் வாராது"
(மேலது, செய்: செய்: 51:1-2)

### 5. 3. வெடியரசனின் ஏனைய குணவியல்புகள்

வெடியரசன் தம் தம்பிமார் மீது அளவு கடந்த பாசமுடையவனாக காட்டப்பட்டுள்ளான். வெடியரசன் மீகாமனால் சிறைப்பிடிக்கப்பட்ட பின்பு வீரநாரணன் படைகளைத் திரட்டிக்கொண்டு போருக்கு வந்தபோது அச்சந்தர்ப்பத்தில் மீகாமன் வெடியரசனிடம் "உன்னை மானாகரிடம் அழைத்துச் சென்று காட்டிவிட்டு பின்னர் விடுகின்றேன். யாதொன்றும் உனக்கு நேராது. உனது தம்பியை திரும்பிச் செல்லுமாறு ஓலை அனுப்பி விடு" என்று மீகாமன் கூறுகின்றான்.அதற்கு அமைய வெடியரசன் தம்பியாகிய வீரநாரணனுக்கு ஓலை அனுப்புகின்றான். எனினும் அதனைக் கேட்காது வீரநாரணன் படைகளுடன் வந்து மீகாமனுடன் போரிட்டு இறக்கின்றான். இச்சந்தர்ப்பத்தில் வெடியரசன் பலவாறு சொல்லி அழுகின்றான்.

"ஆராப்பார் உன்சமர்த்துக் ககிலதலத் துள்ளோர்கள்
வீரியத்தால் மிகப்பெரிய வீரனல்லால் வேறுமுண்டோ
காரொத்த கொடையானே கடல் வீர நாரணனே
சீரொத்த வான்நாடும் சென்றீரோ வெனவழுதான்"
(க.வ.,கடலோட்டுக்காதை, செய்: 263)

"தேவரு வேனானும் திறல்வீர நாரணனே
கோடிழந்த யானைபோலும் கொம்பிழந்த மந்திபோலும்
வாடுகின்றேன் தம்பியரே மதியிழந்த வாறானேன்
ஆடுகின்ற நெஞ்சுகொண்டு ஆறேன்நான் என அழுதான்"
(மேலது, செய்: 267)

சகுணங்களை நம்புகின்றவனாகவும் வெடியரசன் காணப்படுகின்றான். நீலகேசி கனவினைக் கண்டு அதனை எடுத்துக் கூறியபோது எப்படை வரினும் கொன்றுவிடுவேன் என்று வீர வார்த்தைகளைப் பகன்ற வெடியரசன் அதிகாலையில் கண்ட கனா கூடாதென்று கற்றுணர்ந்தோர் சொல்லி வைத்துள்ளனராதலின் அற்றவர்க்கும் மறையவர்க்கும் அன்னதானம் வழங்குமென்று குறிப்பிடுகின்றான். (க.வ., கடலோட்டுக்காதை, செய்: 20) இதன் மூலம் அவன் சகுனத்தை நம்புகின்றவன் என்பது புலனாகின்றது.

தொன்று தொட்டு வருகின்ற நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற ஒருவனாகவும் வெடியரசனை ஆசிரியர் காட்டியுள்ளார். போருக்குப் புறப்படுகின்றபோது மனைவியிடம் விடைபெற்று, வாளை வாங்கிச் செல்வது பண்டு தொட்டு வருகின்ற வழக்கமாகும். வெடியரசன் கப்பல்கள் கடல் எல்லைக்குள் வருகின்றன என்பதை அறிந்து போருக்குப் புறப்படுகின்ற வேளையிலே மனைவியிடம் விடைபெற்று வீர வாளையும்அவளது கையாலே வாங்கிச் செல்கின்றான். (மேலது, செய்: 42) போருக்கு வீரர்களைத் தயார்படுத்தி அனுப்புகையில் அவர்கள் அனைவரதும் நெற்றியிலே கற்பூர வெற்றிலையிடுகின்றான். (மேலது, செய்: 41) இவ்வாறு வீரக்குணவியல்புகள் கொண்டவனாகவும், சகோதர பாசம், பழமைகளையும் சகுணங்களையும் மதிக்கின்ற தன்மை முதலான பண்புகளை உடையவனாகவும் வெடியரசன் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம்.

## 6. வெடியரசனும் முக்குகர் சமூகமும்

கண்ணகிவழக்குரையில் முக்கியத்துவம் பெறுகின்ற வெடியரசன் பாத்திரம் தொடர்பாக தனி ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.அத்துடன் அப்பாத்திரம் பற்றிய கருத்துக்களும், கதைகளும் மக்கள் மத்தியில்

காணப்படுகின்றன.இவ்விடயங்கள் தொடர்பாகவும் வெடியரசன் பாத்திரம் முக்கியத்துவப்படுத்தப்படுவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பாகவும் ஆய்வு செய்யவேண்டியது அவசியமானதாகும். மு.சு.சிவப்பிரகாசம் எழுதிய விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு என்ற தனி ஆய்வு இவ்விதத்தில் கவனிப்புக்குரியதாகும். வெடியரசனை முதன்மைப்படுத்தியதாகவும், அவனை முற்குகர் வம்சத்தலைவனாக எடுத்துரைப்பதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

ஈழத்துப் பூர்வீகக் குடிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற நாகர் இனத்தவரில் ஒரு பிரிவாகக் காணப்படுகின்ற முகளிநாகரின் தலைவன் குகன் என்றும், இக் குகன் விஷ்ணுவின் தொடையிலிருந்து வந்தவன் என்றும், அவனே வெடியரசன் என்றும் குறிப்பிடுகின்ற மு.சு.சிவப்பிரகாசம் வெடியரசனின் பிரசைகளாகிய முற்குக மக்கள் சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணக்குடா நாடு, கிழக்கிலங்கை உள்ளிட்ட பிரதேசங்களில் பரந்து வாழ்ந்தனர் என்ற கருத்தினையும் வலியுறுத்துகின்றார். மேலும் அவர் மீகாமனது படையெடுப்பில் செல்வமும் செல்வாக்குமிழந்த வெடியரசன் வழிவந்த முற்குகர் குலத்தோர் கிழக்கிலங்கை நோக்கிக் குடிபெயர்ந்து அங்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்ற கருத்தினையும் உணர்த்துகின்றார்.இக்கருத்து மட்டக்களப்பு முற்குகர் வரலாறு தொடர்பாகக் கூறப்படுகின்ற கருத்துடன் ஒத்துப் போவதாகவுள்ளது.

அதாவது மட்டக்களப்பு முற்குகர் வரலாற்றை எடுத்துக் கூறுகின்ற மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் என்ற நூலில் அதன் ஆசிரியர் ஞா.சிவசண்முகம் முற்குகர் குலத்தலைவன் வெடியரசன் என்று குறிப்பிடுவதுடன் "குகன் முறை அகவலை" எடுத்துக் கூறி, மீகாமனால் தோற்கடிக்கப்பட்டு, கண்ணகி இட்ட சாபத்தினால் மட்டக்களப்பிற்கு வந்தவர்களே முற்குகர் என்ற கருத்தினையும் குறிப்பிடுகின்றார்.

"கண்ணகை அம்மன் காற்சிலம்பிற்காய்
வண்ணமாய் நாகமணிதனை எடுக்க
வந்த மீகாமன் வழிதனை மறித்து
ஆகாச் செயல்கள் அடாது புரிந்து
தொந்தோம் என்றாடி தோற்கப்பண்ணி
வந்தவழியே வகையாய் துரத்திட
கோவலன் தேவி கூறு சாபத்தால்
பூலகந்தனில் புறங்கொடுத்தேதான்
அம்புவியோர்கள் அனைவரும் மதிக்க
தம்பி தமையனாய் சத்தியம் செய்து
ஓடமீதேறி ஓடியே வந்து
நீடிய இராட்சதர் நிறைந்திடும் இலங்கையில்
மட்டுமா நகரில் வந்தே இறங்கி
பாட்டாணிகளைப் பரிவுடன் சேர்த்து
கந்த பாணத்துறைக் கந்த மூர்த்திக்கும்
கொக்கட்டிச்சோலை குருபரனார்க்கும்
பண்டகாணிக்கை பரிவுடன் கட்டி....

இத்தகைய கருத்துக்கள் கண்ணகி வழக்குரையில் காணப்படவில்லை.

மேலும் மு.சு.சிவப்பிரகாசம் "வெளிநாடாம் வட ஈழத்தை ஆண்டமையால் வெளி அரசன்(வெடியரசன்) என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான் என்றும், சங்கு சக்கர சின்னத்துடன் ஆண்டு வந்தான் என்றும் குறிப்பிடுகின்றார். ஆனால் கண்ணகி வழக்குரையிலோ ஏனைய கண்ணகி இலக்கியங்களிலோ வெளியரசனே வெடியரசனானான் என்ற செய்திகள் எவையும் இல்லை. வெடியரசன் தொடர்பான கதைகள் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன என்பதையே மேற்கூறிய கருத்துக்கள் குறிப்பிடுகின்றன. இதனையே பேராசிரியர் சி.பத்மநாதனின் பின்வரும் கூற்றும் புலப்படுத்துகின்றது.

"வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் கரையோரப் பகுதிகளிலே வாழ்ந்த தமிழ் மக்களிடையே வெடியரசன் கதை நெடுங்காலமாகச் செல்வாக்குப் பெற்றிருந்தது. நாடகம், கூத்து, கல்வெட்டு முதலிய நாட்டார் வழக்கிலுள்ள இலக்கியங்களிலே வெடியரசன் ஒரு

பிரதான பாத்திரமாகக் காணப்படுகிறான்" என்பார் சி.பத்மநாதன் (1988, முன்னுரை, விஷ்ணுபுத்திரர் வெடியரசன் வரலாறு)

இலங்கைக் கடற் பிரதேசத்தினை ஆண்டவர்களாகக் குறிப்பிடப்படுகின்ற வெடியரசனும் அவனது தம்பிமாரும் மற்றும் மீகாமனும் ஈழத்துச் சமூக வகுப்புக்களுடன் தொடர்பு பட்டவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். குறிப்பாக மீகாமன் பரதவர் சமூக வகுப்பினைச் சேர்ந்தவனாகவும் வெடியரசனும் அவனது தம்பிமாரும் முற்குகர் வம்சத்தினைச் சேர்ந்தவர்களாகவும் காட்டப்பட்டுள்ளதுடன் மீகாமன் - வெடியரசன் ஆகிய இருவருக்குமான போர் பரதவர் சமூகத்தினருக்கும் முற்குகர் சமூகத்தினருக்குமிடையிலான ஆதிக்கப்போராகவும் வெளிப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கண்ணகி வழக்குரையில் காணப்படுகின்ற மீகாமன் - வெடியரசன் பகுதி பற்றியும் அப்பாத்திரங்கள் சாதியமைப்பினைப் பிரதிபலித்து நிற்பது பற்றியும் கணநாத் ஒபயசேகர தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதி பின்வருமாறு:

> கதையினுடைய இப்பகுதி (கப்பல் கட்டும் கதை) பத்தினி தொன்மத்துடன் இணைக்கப்பட்ட உள்ளூர்ப் பிரதியாக உள்ளது. இதன் மூலம் இலங்கையின் கிழக்குக் கரையோர சாதிகளுக் கிடையே காணப்பட்ட முரண்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன... கரையார் தென் இந்தியா மற்றும் இலங்கைக் கடற்பிரதேசங்களில் வசிப்பவர்களாக உள்ளனர். கண்ணகி வழக்குரையில் கரையாருடன் தொடர்புடைய ஒரு பெரிய பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இவர்களது மூதாதையர் சிவனுடன் தொடர்புடையவர்களாக உள்ளனர். மீகாமன் சிவனுடன் உறவுத் தொடர்பு கொண்டவனாக உள்ளான்... முற்குகர் இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் தாய்வழி மீனவர்களாகவர். தற்போது அவர்கள் விவசாயம் செய்கின்றார்கள். வடக்கு முற்குகர் தந்தைவழி சமூக அமைப்பு சார்ந்தவர்களாக உள்ளனர். கரையாருடைய பாரம்பரிய எதிரிகளாக முற்குகர் விளங்குகின்றனர். கரையார், முற்குகர் மோதல் இராமர் - இராவணன் யுத்தம் போலவும், மகாபாரதப் போர் போலவும் ஒரு வீர அளவில் விபரிக்கப்பட்டுள்ளது. (1984:571)
>
> கரையாருக்கும் முற்குகருக்கும் இடையிலான யுத்தத்தில் யாரும் வெற்றிபெறவில்லை. ஆனால் கரையார் சிறிது உயர்த்தப்பட்டுள்ளனர். இந்த பிரதி வேளாளர் மையப் பார்வையிலிருந்து எழுதப்பட்டுள்ளது. முற்குகருக்கும் கரையாருக்கும் இடையிலான பாரம்பரிய விரோதப் போக்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. வேளாளர் பார்வையில் முற்குகரை விடவும் கரையார் உயர்ந்த சாதியினராகக் கருதப்பட்டுள்ளனர்.(1984:572)

ஈழத்தில் வழங்குகின்ற பிரதான கண்ணகி இலக்கியங்களில் ஒன்றான கண்ணகி வழக்குரையில் மீகாமனின் குலப்பெருமை(பரதவர் குலப்பெருமை) பற்றிச் சொல்லுகின்ற 92 பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் வழங்குகின்ற சிலம்புகூறல், கோவலனார் கதை ஆகியவற்றில் கரையார் சாதியினரின் பெருமையைக் கூறுவதாகவுள்ள இப்பாடற்பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. அதேவேளை முற்குகர் பெருமை சொல்லுகின்ற பாடற் பகுதிகள் இம் மூன்று நூல்களிலும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு, மந்திகை ஆகிய இடங்களில் வருடாவருடம் பாடப்படுகின்ற கண்ணகி இலக்கியங்களைப் பேணி வருகின்றவர்களாகவும், அங்கு நடைபெறுகின்ற விசாகப் பொங்கல் நிகழ்வில் முக்கிய பங்கு வகிப்பவர் களாகவும் உயர் வேளாளர் சமூகத்தினரே காணப்படுகின்றனர். இவ்விதத்தில் இப்பிரதேசங்களில் மேலோங்கிக் காணப்படுகின்ற உயர் வேளாளர் சாதியினரின் செல்வாக்கு இதற்கு காரணமாக அமைந்திருக்க வாய்ப்புகள் உண்டு. அதேவேளை மட்டக்களப்புப் பிரதேசம் முற்குகர்கள் அதிகமாக வாழுகின்ற இடமாகக் காணப்பட்டாலும் கூட சாதிச் செல்வாக்கு வட பகுதி போன்று இங்கு மேலோங்கியிருக்கவில்லை. தவிர முற்குகர் குலத்தினைச் சேர்ந்த வெடியரசன் போன்றோரின் வீரம் மேன்மைப் படுத்தப்படவேண்டுமாயின் மீகாமன் போன்ற வீரம்மிக்க கரையார் எதிர்ப்படையாக விளங்குவது சிறந்த தென்ற காரணத்தின் அடிப்படையில் அப்பாடல்களை கண்ணகிவழக்குரையில் அப்படியே பேணப்பட்டு வந்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

கண்ணகி வழக்குரையில் வெடியரசன் மற்றும் அவனது தம்பிமாரினூடாக முற்குகர் சாதி பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இந்நூல் மட்டக்களப்பு முற்குகரின் பெருமையைச் சொல்வதற்காக எழுந்தது என்று கருதமுடியாது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் முற்குகர்கள் கூடுதலாக வாழ்ந்தாலும், மட்டக்களப்புப் பிரதேசம் முற்குகர் தேசம் என்று அழைக்கப்பட்டாலும் கூட வடபகுதியிலும் முற்குகர் என்ற சமூக வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். வடபகுதியில் வெடியரசன் பற்றிய வாய்மொழிக்கதைகள் இன்றும் நிலவுவதுடன் வெடியரசன் கதை கூத்தாகவும் நாடகமாகவும் நிகழ்த்துகை செய்யப்பட்டும் வந்துள்ளன. கண்ணகிவழக்குரையில் மாத்திரமன்றி சிலம்பு கூறல், கோவலனார் கதை ஆகிய கண்ணகி இலக்கியங்களிலும் வெடியரசனதும், அவனது தம்பிமார் பற்றியதுமான பாடல்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் சமூக வகுப்புக்களுள் ஒன்றாக விளங்குகின்ற முற்குகர் வம்சத்தவருடன் வெடியரசன் என்ற பாத்திரம் தொடர்புபடுத்தப்படுவது காரணமாகவே ஏனைய பாத்திரங்களை விடவும் வெடியரசன் பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றுள்ளதுடன் வாய்மொழிக் கதைகளும் நிலை பெற்று வந்துள்ளன எனலாம்.

## 7. தொகுப்புரை:

சிலப்பதிகாரத்திலோ கண்ணகி தொடர்பாக கேரளா, தமிழகம் உள்ளிட்ட நாடுகளிலோ இல்லாத தனிச்சிறப்புக்கள் ஈழத்து கண்ணகி இலக்கியங்களுக்கு உண்டு. அச்சிறப்புக்களுள் முக்கியமானதொன்று வெடியரசன் உள்ளிட்ட வீரக்கதாகாத்திரங்கள் ஈழத்துக் கண்ணகி இலக்கியங்களில் காணப்படுகின்றமையாகும். வெடியரசன் இலங்கைக் கடலரசனாகவும், விஷ்ணுவின் தொடையிலிருந்து பிறந்தவனாகவும், முக்கியர் குலத் தலைவனாகவும் ஒப்பற்ற போர் வீரனாகவும் இலங்கைக் கடற் பிரதேசத்தினை வெளித்தேசத்தார் - வெளிப்படைகளிடமிருந்து காத்துவந்த வீரம் மிக்கவனாகவும் காட்டப்பட்டுள்ளான். கடலோட்டுக்காதை வெடியரசனை வீரக்கதாபாத்திரமாக மெய்ப்பித்து நிற்கின்றது.

வெடியரசன் தொடர்பாகப் பல்வேறு பட்ட செய்திகள் கூறப்படுகின்றபோதிலும் ஆதாரபூர்வமாக நிருபிக்கக் கூடிய சான்றுகள் தெளிவாக இல்லாமல் உள்ளது. எது எப்படியாயினும் கண்ணகிவழக்குரையில் வருகின்ற கருத்துக்களையும், வெடியரசன் தொடர்பாக சமூகத்தில் நிலவுகின்ற கருத்துக்களையும் இணைத்து நோக்குகின்றபோதுவெடியரசன் ஒரு பெரும் படைத்தலைன் என்பதும், அவனோர் வீரக்கதா பாத்திரம் என்பதும் ஐயமின்றிப் புலனாகின்றது. அத்துடன் வெடியரசன் முற்குகர் சமூகத் தலைவன் என்பதும் வெடியரசன் - மீகாமன் போரினூடாக முற்குகர் - கரையார் சமூகங்களுக்கிடையிலான ஆதிக்கப்போரே வெளிப்படுத்தப்பட்டுள்ளதென்றும் துணியலாம்.

## உசாத்துணைகள்


1. கந்தையா,வீ.சீ.(பதிப்பாசிரியர்), (1968), கண்ணகி வழக்குரை, காரைதீவு: காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.
2. செல்லையா,மா.செ., (1962), கோவலனார் கதை, வியாபாரிமூலை: கலாபவன் அச்சகம்.
3. கோயிலார் சிவசாமி, (2014), கண்ணகை அம்மன் சிலம்பதிகாரம் கோவலனார் கதை, முல்லைத்தீவு: புதுக்குடியிருப்பு.
4. சிவப்பிரகாசம், மு.சு., (1988), விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு, யாழ்ப்பாணம்: அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம்.
5. சிவசண்முகம்.ஞா.,(2000), மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும், மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு.
6. மேகராசா.த., (2015), சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களும் - ஒப்பயில் ஆய்வு, மட்டக்களப்பு: பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.

Gananath Obeyesekere, (1984), The Cult of The Goddess Pattini, United states of America.



# ஆய்வுரை - II

## “வீரநாரணன்”

ஆய்வாளர் **திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**

(தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

### அறிமுகம் :

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், கண்ணகியின் காற்சிலம்பிற்காக நாகமணிகளைப் பெற விரும்பும் மாநாய்கன், சோழ நாட்டின் தென்பாலுள்ள தீவொன்றில் அவற்றைப் பெறலாம் எனக் கேள்வியுற்று, அங்கு மீகாமனைக் கப்பற்படையுடன் அனுப்புகின்றான். குறிப்பிட்ட தீவை நோக்கிப் பயணிக்கும் மீகாமனையும் அவனது படையையும் அப் பகுதிக்குத் தலைவனாக இருந்த முக்கியர் கோனாகிய வெடியரசன் எதிர்க்கின்றான். இருவருக்கு மிடையே நடைபெற்ற போரில் வெடியரசன் மீகாமனால் சிறைப் பிடிக்கப்படுகின்றான். பின்னர் நாக மலைக்குச் செல்லும் மீகாமன், அங்கு நாகராசனைக் கண்டு வணங்கி அதனிடமிருந்து தேவையான மணிகளைப் பெற்று மீள்கின்றான்.

தளத்திலிருந்து மீண்ட வீரனொருவனால் வெடியரசன் சிறைப்பிடிக்கப்பட்ட செய்தி வெடியரசனின் மனைவியாகிய நீலகேசிக்கு அறிவிக்கப்பட்டது. தன் கணவனின் நிலையறிந்து அழுது புலம்பும் நீலகேசி, தன் தாலியைக் காப்பாற்றுவதற்குப் பொருத்தமான பெரும் வீரன் வெடியரசனின் தம்பியருள் ஒருவனான வீரநாரணன் எனத் தேர்ந்து முதலில் அவனுக்குச் செய்தியனுப்புகிறாள். இவ்விடத்திலேயே வீரநாரணன் கண்ணகி வழக்குரையில் அறிமுகப்படுத்தப்படுகின்றான்.

“.......................................................................

.......................................................................

கல்லான நெஞ்சுடையான் கடலுக்கஞ்சாத்திறல் வீரன்
வில்லாண்மை நாரணனும் வேட்டைக்கென்று புறப்பட்டான்”

(நீல.புல.வீர.கதை: 127)

வேட்டைக்கென்று புறப்பட்ட வீரநாரணனை நீலகேசியினால் அனுப்பப்பட்டவன் சந்திக்கின்றான்.

“வேட்டை கொண்டு புறப்பட்ட வீரநாரண தேவன்
ஓட்டத்தில் வருமவனை உற்று அங்கே பார்த்து நின்று
வாட்டத்தில் வந்தாய் நீ வந்தபடி செப்புமென்னப்
பாட்டுற்ற புகழானே பகரவினிக் கேளுமென்றான்”

(நீல.புல.வீர.கதை: 128)

கேளுமியல் மானாகர் கிளர்ந்த கப்பல் ஆயிரமும்
வாளரவின் மணி வாங்க வரும் வழியில் திரண்டுசென்று
மூள அமர் செய்து வந்து முகரியிலே படையனைத்தும்
தூள் எனவே படக்கொடுத்து தோற்றான் காண் உங்கள் அண்ணன்”

(நீல.புல.வீர.கதை: 129)



"............... மீகாமன் கைகளிலே போர் முனையிற்
சேர்ப்புண்டான் உங்கள் அண்ணன் ..................."

(நீல.புல.வீர.கதை: 130)

என அவன் வாயினின்றும் நடந்த விபரங்களைக் கேட்டதும் வீரநாரணன் தம் குலத்திற்கே அபகீர்த்தி ஏற்பட்டதாகப் பதைத்து, சிந்தை தளர்ந்து, சினமுற்று வஞ்சினமுரைக்கின்றான்.

'புகாரைச் சேர்ந்த மீகாமனை வெம் போரில் வென்று அவனைக் கொல்லாவிட்டால் நான் கடலரசனான வெடியரசனின் தம்பியல்ல' எனவும்

'கடலில் புகழ் படைத்த கடல் வீரர் முன்னால் மீகாமனின் படையை அழித்து அக் களத்திலே படை வீரர்களைப் பருந்து உண்ணுவதற்கு விருந்தாகப் படைக்காவிட்டால், அடைக்கலமாகத் தந்த பொருளைக் கவர்ந்த பாவத்தைச் செய்தவன் ஆவேன்' எனவும்

'அரவின் மணி வாங்க வந்த மீகாமனைக் கடலில் கொல்லாவிட்டால் தனக்குச் சொந்தமான மனைவி வீட்டிலிருக்க வேறு பெண்கள் மீது ஆசை வைத்த வெட்கமற்றவனாவேன்' எனவும்

'உடன் பிறப்பு கெட்டொழியப் பார்த்திருந்து பின் அருகில் சென்று வீரம் பேசும் பாவியாகக் கருதப்படுவேன்' எனவும் வீரநாரணன் வஞ்சினம் உரைக்கின்றான். இவ்வுரைகள் மீகாமனை வெல்வதிலுள்ள தீவிரத்தையும் தமையன் மேலுள்ள பாசத்தையும் பிரதேசப் பற்றினையும் தன் வீரத்தின் மீது அவன் கொண்ட நம்பிக்கையையும் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

மனைவியைத் தவிர்த்து வேறு பெண்களை நாடுதல், உடன் பிறப்பின் கஸ்டத்தில் உதவாதிருத்தல், அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்ட பொருளைத் தானே கவர்தல் ஆகியன தகாதவை என்பதை வீரநாரணன் ஊடாக வலியுறுத்தும் அதேவேளை, அக் கதாபாத்திரம் அவற்றினைக் கைக்கொள்ளாது வாழ்ந்த பண்புக்குரியது என்பதையும் ஆசிரியர் குறிப்பால் உணர்த்துகின்றார். தம் படை வீரரை ஒருங்கிணைத்து போருக்கு ஆயத்தமாகின்றான் வீரநாரணன்.

இச்சந்தர்ப்பத்தில் நாக மலைக்குச் சென்ற மீகாமன், அங்கு நாகராசனைக் கண்டு வணங்கி அதனிடமிருந்து தேவையான மணிகளைப் பெற்று சோழ நாடு நோக்கி மீள்கின்றான். இது குறித்த பகுதி சில ஏடுகளில் 'மணி வாங்கின கதை' எனவும் சிலவற்றில் 'வீரநாரணன் கதை' எனவும் கூறப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

தூரத்தே படைகளைக் கண்ணுறும் மீகாமன், தன்னை எதிர்த்து வருபவன் வெடியரசனின் தம்பி என அறிந்து கொள்கிறான். வீரநாரணன் பற்றிக் குறிப்பிடும் போது மீகாமனே அவனை,

"ஆண்மைக்குத் தாழ்வில்லை கண்டாய் அடலரசே உன் தம்பி
வாய்மைக்கும் வீரனொப்பான் வழிமறித்தல் எல்லையினால்"

(நீல.புல.வீர.கதை: 205)

எனப் புகழ்ந்துரைப்பதனைக் காணலாம்.

வீரநாரணனைப் போரிடாது விலகிச் செல்லுமாறும் வெடியரசனைப் புகாரில் மாநாய்கனுக்குக் காட்டிய பின் தான் அவனை விடுவித்து விடுவதாகவும் மீகாமன் கூறுகின்றான்.

மீகாமனின் வேண்டுகோளின்படி வெடியரசனால் அச்செய்தி தாங்கிய ஓலை அம்பில் இணைக்கப்பட்டு வீரநாரணனின் கப்பலில் விழும்படி எய்யப்படுகின்றது. அந்த ஓலையை,

"செழும் புகழ்சேர் அண்ணாவின் திருமுகமென்றே போற்றி
தொழும் பரிசை தொழுதெடுக்கின்றான்"

(நீல.புல.வீர.கதை: 209)

வீரநாரணன். அண்ணன் மீது அவன் கொண்ட மதிப்பும் மரியாதையும் இதில் துலங்குகின்றது.

ஆயினும் ஓலை வாசகம் அவனைச் சினமுறச் செய்கின்றது. தீயில் எண்ணெய் சொரிந்ததைப் போல சினம் மேலெழ மீண்டும் வஞ்சினமுரைக்கின்றான்.

"சொன்னதுவும் மிகவழகு தொல் புகாரில் மீகாமன்
தன்னையும் நான் போகவிடேன் சமுத்திரத்தைச் சென்றுழக்கிப்
பின்னையண்ணன் சிறை விடுத்துப் பெரும் புகழ் எய்தேனென்றால்
என் வீரம் அழகியவாறென்று பின்னை என் சொலுவான்"

(நீல.புல.வீர.கதை: 210)

"மீண்டு நான் போறவனே மீகாமன் தனக்கஞ்சி
மூண்டவனைப் பொருவனாகில் முட்ட வெட்டி அமர் மலைந்து
பாண்டவர் செய் படுகளம் போல் படையனைத்தும் விட்டிலனேல்
ஆண்டவனைப் படக் கொடுத்து மீண்டவர் களாகேனோ"

(நீல.புல.வீர.கதை: 211)

எனச் சூளுரைத்து மீகாமனின் கப்பல்களை வளைந்து கொள்கிறான் வீரநாரணன். தொடர்ந்து இரு பகுதியினருக்கு மிடையே நடைபெற்ற போர் பற்றிய காட்சிகளை ஏறத்தாழ 45 செய்யுள்களில் (215 – 257) விபரித்துச் செல்கிறார் ஆசிரியர்.

"வில்வளைத்தனர் மேதிக் குழா மென
மேக தாரைபோல் அம்பைச் சொரிந்தனர்
கல்லெடுத்துக் கவண் கொணடெறிந்தனர்
காடு போலச் சவளம் நிரைத்தனர்
வல்லெறி கோல் வளை தடியீட்டி கூர்
வாங்கு அருவாள் மருவுகோல் சக்கரம்
எல்லெடுக்கெதிர் வாளும் பரிசையும்
எடுத்திரண்டு படையும் எதிர்த்ததே"

(நீல.புல.வீர.கதை: 216) எனவும்

"படைமுறிய வேலெறிவார் பண்தெறிக்க வெட்டிடுவார்
இடியம்பு விடுவாரும் எண்ணெய் காய்ச்சி யெறிவாரும்
கடிதுடனே கல்லெறியக் கால் தறிந்து விழுவாரும்
தடிகள் கொண்டு பொருது மிகத் தாக்கியமர் மலைந்தனரே"

(நீல.புல.வீர.கதை: 219)

எனவும் பரதவர் குலத்தவர்க்கும் முக்கியர் குலத்தவர்க்கும் இடையே நடந்த கடற்போர் பற்றிய செய்திகள் விபரிக்கப்படுகின்றன.

மிக நீண்ட காலத்தையுடையதாக அமைந்த அப்போரில் இரு பகுதியினரதும் வெற்றியும் தோல்வியும் மட்டிடப் பட முடியாததாகப் போய்விட, மீகாமனுடன் தனித்துப் போரிடுவதற்கு வீரநாரணன் முடிவு செய்கின்றான்.

"...........................................................................
படைத்தொழிலால் இருபேரும் படுவதனாற் பயனுமிலை
கடற்குள் இருபேர் சமத்துங் காணவிங்கே மீகாமா
தடம் பெரிய திறலோனே தனித்து வெட்ட வாருமென்றான்"

(நீல.புல.வீர.கதை: 244)

தனித்த நெடும் போரில் வீரநாரணன் மீகாமனைத் தோல்வியுறச் செய்கிறான்.

"ஒட்டிநின்ற தல்லாது உற்றவனும் ஒருகாயம்
வெட்ட இடமில்லாமல் வீரநாரணன் வெட்டத்
தொட்டெதிரே நடந்து சென்று தொங்காமற் பொருதிடவே
விட்டுப் போய் மீகாமன் மிகத் தளர்ந்து தோற்றனனே."

(நீல.புல.வீர.கதை: 251)

"தோற்றுப் போய் மீகாமன் துயரமுற்றுக் கப்பலிலே
ஆற்றாமற் போய் விழுந்தான் அணியக் கடையாலளவும்
வேற்றொருவர் ஒவ்வாத வீரநாரணன் படையும்
சாற்றரிய வெற்றி கொண்டு தான் மிகவும் ஆர்ப்பரித்தான்."

(நீல.புல.வீர.கதை: 252)

தோல்வியுற்ற மீகாமன் மீளவும் போர் செய்யத் தொடங்குகின்றான். வீரநாரணனுடனான போரில் வீரநாரணனின் வாளேந்திய கை வெட்டப்படுகின்றது.

"தெறித்துக் கை வீழ்ந்திடவே விறல் வீர நாரணனும்
மறித்து மற்றக் கை தனிலே வாளெடுத்து நடந்து சென்று"

(நீல.புல.வீர.கதை: 255)

போரிடுகின்றான். மீகாமன் ஆற்றாமல் பத்தினியார் அருளை உள் நினைந்து கொண்டு சூரன் என்னும் வேலெடுத்து வீரநாரணனை நோக்கி வீசுகின்றான். எதிரெதிரே போர் செய்ய வேண்டுமென்ற நிலைப்பாட்டினை மாற்றி மீகாமனின் செயலால் வீரநாரணன் வருமாறு உரைக்கின்றான்.

"பட்டவேல் தன்னைப் பிடித்துப் பார்த்து வீர நாரணனும்
வெட்டியெதிர் பொருவோ மென்று மீகாமா வந்தெதிர்த்துத்
தொட்டெதிரே போர்செய்யாமற் சோராயம் செய்துகொண்டாய்
இட்டபடி எனக்கிதுவோ என்று வீர நாரணன் பட்டான்"

(நீல.புல.வீர.கதை: 257)

சிறை மீட்பு அல்லது வீர மரணம் என்ற வைராக்கியத்துடன் களம் புகுந்த வீரநாரணனின் இறப்பு முக்குகரைச் சிதறியோடச் செய்கிறது. மீகாமனுடனான போரில் வீரநாரணனின் வீரச் சிறப்பைக் காணமுடிகின்றது. சொல்லில் மட்டுமன்றி செயலிலும் அவன் காட்டிய வீரச் செயல்களை கடற்போரில் ஆசிரியர் சித்திரித்துள்ளார். ஆயுதமேந்திப் போராடியதில் மட்டுமன்றி நற்பண்புகளும் நல்லொழுக்கங்களும் மிக்கவனாக அவன் சித்திரிக்கப்பட்டிருப்பது அவனது வீரத்திற்கு மேலும் அணி சேர்ப்பதாயுள்ளது.

"சிங்கத்துக் கொப்பான திறல் வீர நாரணனைச்
சங்கொத்த வாளாலே மீகாமன்
அறுத்து வெடியரசன் முன்னே வைத்தபோது"

(நீல.புல.வீர.கதை: 259)

வெடியரசன் புலம்பியழுகிறான்.

"ஆரொப்பார் உன் சமர்த்துக்கு அகில தலத்துள்ளோர்கள்
வீரியத்தால் மிகப் பெரிய வீரனல்லால் வேறுமுண்டோ
காரொத்த கொடையானே கடல் வீர நாரணனே
சீரொத்த வான் நாடும் சென்றீரோ என அழுதான்."

(நீல.புல.வீர.கதை: 261)

என்னும் அவனது கூற்று, தன் தம்பி மீது அவன் கொண்ட பாசத்தையும் வீரநாரணனின் வீரத்தையும் வெளிப்படுத்துகின்றன.

"தேடிவருவே னானும் திறல் வீர நாரணனே
கோடிழந்த யானை போலும் கொம்பிழந்த மந்தி போலும்
வாடுகின்றேன் தம்பியரே"

(நீல.புல.வீர.கதை: 267)

என்பதிலும் தம்பியின்றி வாழ்வது கண்ணிழந்த வாழ்வை ஒக்குமென்று (265) கூறுவதிலும் உற்ற துணையாக, ஆதாரமாக வீரநாரணன் விளங்கியிருந்த தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

"தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்பது முதுமொழி. உடன் பிறந்தவனின் அருமை பற்றி வீரநாரணனைப் போலவே வெடியரசனும் குறிப்பிட்டுள்ளான்.

"காசினியில் வாழலாகும் காரிகையைத் தேடலாகும்
வீசுபுகழ் பொன்னும் முத்தும் மிகமிகவே தேடலாகும்
ஓசையுடன் மாற்றலரை ஓடவெற்றி கொள்ளலாகும்
தேசமெங்கும் தம்பியரைத் தேடவொண்ணாதென அழுதான்."
(நீல.புல.வீர.கதை: 266)

பெண்களைத் தேடலாம்: பொன் பொருளைத் தேடிப் பெறலாம்: பகைவரை வெற்றி கொள்ளலாம் ஆனால் தம்பியரைத் தேடிப்பெற முடியாது. அவரை இழந்தால் அதற்கு மாற்றீடு இல்லை என அவர்தம் பெருமையினை உணர வைத்துள்ளார் ஆசிரியர்.

கண்ணகி வழக்குரையில் போர்க்களக் காட்சிகள் சித்திரிக்கப்படுவது மீகாமனுக்கும் மற்றும் அவனது தம்பியரான வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோருக்கும் இடையே நடைபெறும் கடற்போரின்போதுதான். சிலப்பதிகாரக் காப்பியத்தில் இடம்பெறாத இந்நிகழ்வு, முக்கியரின் அரசியற் செல்வாக்கினையும் பரதவரின் மாண்பினையும் வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. வீரம் மற்றும் அவலச் சுவையுடையனவாக அமையும் இப் பகுதிகள் இராமாயண, மகாபாரத யுத்தக் களக் காட்சிச் சித்திரிப்புக்களை ஓரளவு ஒத்தனவாகக் காணப்படுகின்றன. அதேவேளை கடற் போரின் தனித்துவங்களையும் தமிழரின் போர்த் தொழில் திறமைகளையும் சிறப்பாக வெளிப்படுத்துவனவாயும் இவை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரநாரணன் பற்றிய சித்திரிப்புக்களும் நடத்தைக் கோலங்களும் கம்பராமாயண கும்பகர்ணனை நினைவிற்குக் கொண்டுவருவனவாயுள்ளன. முதனாட்போரில் வெறுங்கையோடு இலங்கா நகர் மீண்ட இராவணனின் துயர் தீர்க்கும் வண்ணம் இராம லக்குமணரை எதிர்க்கக் கூடிய வீரனாக உடனடியாகவே மகோரதனால் கும்பகர்ணன் சிபார்சு செய்யப்படுதல்.

படைபலத்தோடு வரும் கும்பகர்ணனை யாரென விபீடணனிடம் இராமன் வினவியறிதல். அவனைத் தம் பக்கம் அழைத்து வருமாறு விபீடணனை அனுப்புதல். இரு சகோதரருக்குமிடையே நடைபெறும் உரையாடலில் கும்பகர்ணனின் சகோதர பாசம் வெளிப்படுதல். அண்ணனுக்கு உதவுவதே தம்பியின் கடமை எனவும் தம்பி இல்லாமல் அண்ணன் மாண்டு கிடப்பது தகுமோ? எனவும் கும்பகர்ணன் வினவுதல்.

"நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னை
போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது அங்கு போகேன்"
(கம்ப: 1366)

என்று அவன் வாதிடுதல். இராமனுடனான போரில் முதலில் வாளொடு இருந்த வலக்கையை கும்பகர்ணன் இழத்தல்.

"வலக்கை அற்றது வாளொடும் கோளுடை
வானமாமதி போலும்
இலக்கை அற்றது அவ்விலங்கைக்கும் இராவணன்
தனக்கும் என்று எழுந்தோடி"
(கம்ப: 1550)

என்பது கம்பர் வாக்கு.

அற்று வீழ்ந்த கையை அறாத கையால் எடுத்துப் போரிடுதல் என வரும் நிகழ்வுகள், ஆகிய கம்பராமாயண கும்பகர்ணன் வதைப் படலச் சித்திரிப்புக்களை நினைவூட்டுவனவாக வீரநாரணனின் போர்க்கள வீரச் செயல்கள் பற்றிய சித்திரிப்புக்கள் அமைகின்றன.

கண்ணகி வழக்குரையில் வீரநாரணன் என்னும் பாத்திரம், அண்ணன் மீது கொண்ட பாசத்தை வெளிக்காட்டும் பாத்திரமாகவும், குலகௌரவத்தையும் மானத்தையும் காக்க உயிரைக்கூடக் கொடுக்கத் துணிந்த பாத்திரமாகவும், நற்பண்புகள் கொண்ட பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளது எனத் துணிந்து கூறலாம்.



# ஆய்வுரை - III

## "மீகாமன்"

ஆய்வாளர் **திரு.கோ. குகன்**

**(விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)**


ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய இலக்கியங்களுள் கண்ணகி வழக்குரைக் காவியமும் கதிரைமலைப் பள்ளும் நாட்டார் வழக்குடன் தொடர்புடைய இலக்கியங்களாகின்றன. கண்ணகி வழக்குரைக் காவியம் சிலப்பதிகாரத்தைத் தழுவி எழுந்த ஓர் இலக்கியமாகும். இதன் ஆசிரியர் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவரே என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் முடிவு. இது பதினொரு காதைகளையும் 2226 செய்யுட்களையும் கொண்டுள்ளது. 'காவியம்' என்னும் பெயரையுடையதாகக் கண்ணகி வழக்குரைக் காவியம் அமைந்தாலும் அதன் பொருளும் பா வடிவங்களும் அது செந்நெறிப் பாங்குடையதல்ல என்பதை உணர்த்தும்(சண்முகதாஸ் அ.,2008:3).

சிலப்பதிகாரச் செந்நெறிக் கதை மரபிலிருந்து வேறுபட்ட பல பொதுமக்கட் சார்பான கிளைக்கதைகள் கண்ணகி வழக்குரையிலே இடம்பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் எங்காவது கண்ணகியின் காற்சிலம்புக்கு நாகமணி கொண்டுவரப்பட்ட செய்தி கூறப்படவில்லை. சிலப்பதிகார வழக்குரை காதையில் கண்ணகியால் நியாயம் நிலைநாட்டப்படுகின்ற சந்தர்ப்பத்தை,

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுரை அரியே, எனத்
தேமொழியுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம்புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே"

(சிலப்பதிகாரம் - வழக்குரை காதை: 66-72)

என்று இளங்கோவடிகள் பாடுகின்றார். இச்சந்தர்ப்பத்தில்தான் கண்ணகியின் காற்சிலம்புக்குள் இருந்தது 'மணி' என்பதும் பாண்டிய மன்னனின் மனைவியின் சிலம்புக்குள் இருந்தது 'முத்து' என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது. இதுதான் சிலப்பதிகாரக் கதைப்போக்கில் திருப்பத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இடைவெளியை அல்லது நுட்பத்தைப் பயன்படுத்தியிருக்கின்ற கண்ணகி வழக்குரை ஆசிரியர், கண்ணகியைப் பிறப்பிலேயே தெய்வீகப் பெண்ணாகப் பிறக்க வைத்து அவளின் காற்சிலம்புக்கு இதுவரை மனிதர்களால் பயன்படுத்தப்படாத நாகமணி பரலாக இடப்பட வேண்டும் என்றும் அந்த நாகமணியை இலங்கைக்குச் சென்று பெற்றுவர வேண்டும் என்றும் அதற்கு வெடியரசன் என்ற கடலரசன் தடங்கல் செய்வான் என்றும் அவனை எதிர்கொண்டு நாகமணியைப் பெற்று வருவதற்குப் பொருத்தமானவன் மீகாமன் என்றும் அவ்வாறே நாகமணி பெற்று வந்து கண்ணகி திருமணம் நடந்தது என்றும் கதை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்காகக் கண்ணகி வழக்குரைக் காவியத்தில் கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை என இரு



காதைகள் இடம்பெறுகின்றன. இவற்றில் மீகாமன் கதை, தூரியோட்டுக் கதை, கப்பல் வைத்தல், வெடியரசன் போர், வீரநாரணன் கதை, மணி வாங்கின கதை எனப் பல கதைகள் இடம்பெறுகின்றன. இவை ஈழத்துக் கிராம மக்கள் மத்தியில் நிலவிய வாய்மொழிக் கதைகளின் விரிவாக்கமாகவே அமைந்துள்ளன(சந்திரசேகரம் சி.,2015:67). இவை போன்ற பல நாட்டார் வழக்குடைய கதைகள் கண்ணகி வழக்குரையிலே இடம்பெறுவதால் அது ஓர் செந்நெறி இலக்கியமல்லாது நாட்டார் வழக்குக் காவியமாக அமைகிறது.

**ஆய்வின் நோக்கம் :**

கண்ணகி வழக்குரையின் ஒரு நோக்கம் நாகதீவில் இருக்கின்ற அரவத்திடம் நாகமணியைப் பெற்று கண்ணகியின் திருமணம் நடத்தப்பட வேண்டும் என்பதாகும். இதில் கண்ணகி பிறப்பிலேயே தெய்வமாக்கப்பட்டவள். இதனால் சமய நோக்கிலும் சாதாரண கதைப்போக்கிலும் இந்நோக்கம் நிறைவேற்றப்படும் என்பது வெளிப்படையான விடயம். இதற்காக இரண்டு காதைகள் முழுமையாக ஒதுக்கப்பட்டதன் காரணம் என்ன? முக்குவர் குலத்தைச் சேர்ந்த வெடியரசனுக்கும் பரதவர் குலத்தைச் சேர்ந்த மீகாமனுக்கும் சண்டை நிகழந்த பின்னணி என்ன? இதில் மீகாமனின் குலமரபு விரித்துரைக்கப்படுவதன் அரசியல் என்ன? என்பதெல்லாம் விளங்கிக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

**கண்ணகி வழக்குரையில் மீகாமன் :**

மீகாமன் என்பது ஒரு பொதுப்பெயர். மாலுமி என்பது இதன் அகராதிப்பொருள். இப்பெயர் கண்ணகியின் திருமணத்திற்காக நாகமணி பெற வந்த குழுவின் தலைவனுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. இவன் கண்ணகி வழக்குரையில் பரதவர் அல்லது கரையார் குலத்தைச் சேர்ந்தவன் என்று கூறப்படுகின்றான். அதேநேரம் வருண குலத்திலுதித்தவன் என்றும் சொல்லப்படுகின்றான்.

கண்ணகியின் வளர்ப்புத் தந்தையான மானாகர் சமுத்திர யாத்திரை சென்ற போது அரவத்திடம் பெற்றுக் கொண்ட வரத்தின்படி தேவையான நாகமணியைத் தான் தருவதாக மானாகருக்கு அரவம் கூறியது. அத்தோடு தேவை வரும்போது யாரையாவது அனுப்புமாறும் கூறியது.

"திடமுடைய தென்திசையில் தீவுமுண்டு அத்தீவில்
கடல்கடந்து போய் வாங்கக் கருத்துடையோர்தனிலொருவன்
சடுதியிலே ஆராய்ந்து தானுரையும்"

என்று மானாகர் புரோகிதரைக் கேட்க,

"...............................நாகமணி வாங்குதற்கு
வென்றிபுனை மீகாமன் அல்லது வேறில்லை"

என்று புரோகிதர் பதிலளிக்கிறார். (இச்சந்தர்பத்தில்தான் மீகாமனின் குலமரபு கூறப்படுகிறது.)

மீகாமனை அழைத்துவரத் தூதுவர்கள் அனுப்பப்படுகின்றனர். பரதவர் இருக்கும் தெருப்புகுந்து மீகாமன் அழைத்துவரப்படுகிறான். அழைக்கப்பட்டதன் நோக்கம் அவனுக்குச் சொல்லப்படுகின்றது. அப்போது,

"மணிவாங்கப் போம்வழியில் வழிமறிப்பான் வெடியரசன்
மணிவாங்க மனதுமுண்டால் மரக்கலமாயிரந்தேடி
மணிவாங்க எனைவிடுநீ வாங்கி வந்து தருவேனே"

என்று மீகாமன் நிபந்தனையுடன் சம்மதம் தெரிவிக்கிறான்.கப்பல் வாங்கத் தேவையான நிதியைத் தருவதாக மானாகர் சொல்கிறார். அப்போது மீகாமன் தன் நிலைப்பாட்டைப் பின்வருமாறு சொல்கிறான்.

"...............................................................................

பொருவினைக்குமாகாது பொன்கொடுத்துக் கொண்ட கப்பல்
பொன்கொடுத்துக்கொண்ட கப்பல் போருக்குமாகாது
வன்படையால் வெடியரசன் மரக்கலங்களை மறிப்பான்

முன்படையாய் விட்டுப்போக முகமொத்த கப்பல் வேணும்
என்கொடுத்தும் பலகைதேடி எடுக்கவேணும் கப்பல்"

இங்கு எதிரியின் பலத்தை உணர்ந்துகொண்டவனாக, அவனை எதிர்கொள்ளும் சாதுரியம் உள்ளவனாக மீகாமன் காட்டப்படுகின்றான்.

இலங்கைக்கு வந்து பலகை தேடி எடுத்து பலம் வாய்ந்த கப்பல் கட்டப்பட்ட கதை விரிவாகச் சொல்லப் படுகின்றது. அதில் இலங்கையின் சிறப்புகள் கூறப்படுகின்றன. கப்பல் அழகாகவும் பலமாகவும் செய்யப்பட்ட வரலாறு 266 பாடல்களைக் கொண்ட கப்பல் வைத்த காதையில் நன்கு விளக்கப்படுகின்றது.

கப்பல் கட்டப்பட்டதன் பின் 'கண்ணகை தன் அருளாலே கடல்வினையும் வாராது' என்று கண்ணகைத் தெய்வத்தை நினைத்துக்கொண்டு கப்பலேறி இலங்கைக்கு வருகிறான் மீகாமன். கடலில் வெடியரசன் வழிமறித்து,

"தேடியிங்கே வந்ததேதுன் தேசமெது பதியேது
நாடியுன்னை விடுத்தவரார்"

என்று கேட்கிறான். அதற்கு மீகாமன்,

"..............................................................
மல்லமரும் திண்புயத்தான் மானாகர் கப்பலிது
நல்லபதி புகார்நாடு நற்சோழ மண்டலங்காண்
மெல்லவிங்கே நான் போந்தேன் மீகாமனென்பேரு"

என்று பதிலளித்து,

"தென்பாகை மானாகர் திருமகளார் மணம்முடிக்க
அன்பாக நான் போந்தேன் அண்ணாவி வழியை விடாய்"

என்று கேட்கிறான். வெடியரசன் சம்மதிக்கவில்லை. மீகாமன் திரும்பவும்,

"திருவின்மணம் முடிப்பதற்குச் செய்யமணி வாங்க வந்தேன்
விருதரசர் கொண்டாடும் வெடியரசே பெருமானே
தருமமிது புகழுண்டாஞ் சலதி வழி விடுக"

எனச் சொல்கிறான். வெடியரசன் எதையும் கேட்கத் தயாராயில்லை. கடும் சண்டை நடக்கிறது. வெடியரசனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு நாகமணி பெறுவதற்கு நாகதீவினுள் நுழைகிறான். பழங்கள், இளநீர் போன்றவற்றைப் படைத்துப் பூசை செய்து ஐம்புலன்களை அடக்கி அரவத்தைத் துதிக்கிறான். அவனுடைய பக்தியை உணர்ந்துகொண்ட அரவம் 'இவன் எளியனல்லன்' எனத்தேறி அவன் ஊரும் பேரும் குலமும் அறிந்து மானாகருக்குத் தேவையான நாகமணியைக் கொடுக்கிறது. மீகாமன் நாகமணியைப் பெற்றுத் திரும்புகிறான்.

வெடியரசன் சிறைப்பிடிக்கப்பட்டதை நீலகேசி மூலம் அறிந்துகொண்ட வீரநாரணன் மீகாமனை வழிமறிக்கிறான். அப்போது 'சதியாக மறித்தவனுன் தம்பியடா வெடியரசே' என்றும் அவனிடம் வழியைவிடப் பணிக்குமாறும் வெடியரசனைக் கேட்கிறான். வெடியரசன் வீரநாரணனுக்கு ஓலை எழுதுகிறான். ஆயினும் அவன் மீகாமனுடன் யுத்தம் செய்வதற்கே ஆயத்தமாகிறான். கடும் யுத்தம் நடக்கிறது. மீகாமனைக் கொலை செய்யுமளவிற்கு வீரநாரணன் நெருங்கிவிடுகிறான். அப்போது 'பத்தினியார் அருளை உள்ளே நினைந்து கொண்டு' வேலை எடுத்து எறிகிறான். வீரநாரணன் இறக்கிறான். இறுதியாக வெடியரசனின் மற்றுமொரு தம்பியான விளங்குதேவனுடன் மீகாமன் சண்டை செய்கிறான். முடிவின்றித் தொடர்ந்த யுத்தத்தின் இறுதியில் எல்லோரும் சமாதானப்பட்டுக்கொள்கின்றனர். நாகமணி கொண்டுசெல்லப்பட்டு கண்ணகியின் திருமணம் நடக்கிறது.

மொத்தத்தில் மிகுந்த சகிப்புத் தன்மையோடும் பொறுமையோடும் தனது கருமத்தை நிறைவேற்றியவனாக மீகாமன் காட்டப்படுகின்றான். கண்ணகியின் அருள் அவனுக்கு எப்போதும் இருந்திருக்கிறது. அதேநேரம் போர்த்தந்திரமும் வீரமும் மனிதநேயமும் உள்ள ஒருவனாக கண்ணகி வழக்குரையில் மீகாமன் வெளித்தெரிகிறான்.

**மீகாமனின் குலமரபு :**

இவ்வாறு பார்க்கும் போது முக்குவ குலம் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட வெடியரசன் தரப்பு மீகாமனிடம் தோற்றது என்பதே வெளிப்படையான விடயம். மட்டக்களப்பைப் பொறுத்தவரை முக்குவ குலம் சாதியமைப்பில் உயர்ந்த அந்தஸ்த்துப் பெற்றது. இவர்களுடைய பாரம்பரியத் தொழில் விவசாயம். இது தொடர்பாகக் கண்ணகி வழக்குரையில் விரிவான செய்திகள் இடம்பெறவில்லை. ஆனால் மீகாமனின் குலமரபு பற்றி 120 செய்யுட்களில் தனிப்பகுதியில் பேசப்படுகின்றது. அவன் வருண குலத்திலுதித்தவன் என்று சொல்லப்படுகின்றது. முக்குவ குலத்தோர் உயர்ந்த குலத்தில் பிறந்தவரிடமே தோற்றனர் என்பதைச் சொல்வதற்கான முயற்சியாகவே இது பார்க்கப்பட வேண்டும்.

இதிகாச, புராணங்களில் வருகின்ற உயர்நிலைப் பாத்திரங்களோடு மீகாமனுடைய குலமரபு தொடர்பு படுத்தப்படுகின்றது. இது தொடர்பில் பின்வரும் கதைகள் இணைக்கப்பட்டுள்ளன.

1. வேதவியாசரின் மரபில் வந்தவன் என்றொரு கதை சொல்கிறது. மச்சகெந்தி என்பவள் ஒரு மீனவகுலப் பெண். அவளுக்குப் பதினைந்து வயதாக இருக்கும் போது ஒரு மாமுனி விதிப்பயன் எனச் சொல்லி அவளோடு தவறான முறையில் புணர்கிறான். குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தைதான் வேதவியாசர். சிரஞ்சீவியான வேதவியாசர் 'துயருற்ற போது அழைத்தால் வருவேன்' என்று சொல்லி மறைந்துவிடுகிறார். பின்புதான் மச்சகெந்திக்கு சந்தனமகராசனோடு முறையான திருமணம் நடக்கிறது. அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறக்கிறார்கள். இருவரும் சமரில் இறக்கிறார்கள். துன்பம் தாங்க முடியாத மச்சகெந்தி வேதவியாசரை நினைக்கிறாள். அவரருளால் மச்சகெந்திக்கு திருதராட்டிரனும் பாண்டுவும் குழந்தையாகப் பிறக்கிறார்கள். இவர்களின் வழி கௌரவர்களும் பாண்டவர்களும் பிறந்து அரசாண்ட வரலாறு சொல்லப்படுகின்றது. இந்த மரபில் உள்ளவன்தான் மீகாமன் என்று அக்கதை சொல்கிறது.

2. 'சமுத்திரத்தில் வலைவீசி முன்னம்பட்ட மீனதனை முக்கணற்கென்றே' விட்ட அதிபத்தநாயனார் மரபில் வந்தவன் மீகாமன் என்று மற்றொரு கதை சொல்கிறது.

3. பாண்டிய மன்னனுக்குப் பிள்ளை பிறக்கிறது. அந்தப் பிள்ளையின் பிறப்பு ஜாதகப்படி தந்தைக்கு மரணம் உண்டு என்றும் அதனால் கடலில் எறிந்துவிடுமாறும் வேதியர்கள் சொல்ல, பரதவர் குலத்திலுள்ள ஒருவனிடம் குழந்தையைக் கொடுத்து கடலில்விட்டுவிடுமாறு அனுப்புகிறான். அவன் கடலில் எறிந்துவிட்டதாகப் பொய்கூறி தனது வீட்டில் ஓர் அறையில் பிள்ளையை வளர்க்கிறான். மன்னன் இறந்த பின்பு அரசாள யாருமில்லை என்றவுடன் அவன் உண்மையைச் சொல்கிறான். அந்தப் பிள்ளையே பின் நாட்டை ஆள்கிறது. இப்படியான மனிதநேயம் கொண்ட பரதவர் குலத்தில் வந்தவன் மீகாமன் என்கிறது அந்தக் கதை.

அரச மரபும், இறைபக்தியும், மனிதநேயமும் கொண்ட உயர்குலத்தவனிடமே வெடியரசன் தோற்றான் என்று சொல்வதற்காகவே இவ்வாறு மீகாமனின் குலமரபு உயர்த்திக் கூறப்படுகின்றது எனக் கருதலாம். எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தோன்றிய கண்ணகி வழக்குரை, கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு செல்வாக்குப் பெற்றபோது ஒவ்வொரு கோயில்களிலும் ஏடுகளாக எழுதப்பட்ட சந்தர்ப்பத்தில் இடைச்செருகல்களாக இடம்பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் வெடியரசன் மீகாமன் சம்பந்தப்பட்ட இந்தக் கதை யாழ்ப்பாணத்தில் வழங்குகின்ற கோவலனார் கதையிலும் முல்லைத்தீவில் தோன்றிய சிலம்பு கூறலிலும் வேறுபட்டிருக்கிறது. இவற்றில் புதிது புனைதலும் விடுபாடுகளும் விரிவுபடுத்தல்களும் மலிந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது(சந்திரசேகரம் சி., 2015:69). தவிர, 'சிங்கள சாகித்திய வம்சய' என்ற நூலை எழுதிய புஞ்சுவண்டார சண்ணஸ்கல கி.பி.1660 ஆம் ஆண்டளவில் 'முக்கர ஹட்டன' என்றொரு சிங்கள இலக்கியம் வெளிவந்ததாகக் குறிப்பிடுகின்றார். 'முக்கர' என்றால் 'முக்குவர்'. 'ஹட்டன' என்றால் 'சண்டை' ஆக, 'முக்குவர் சண்டை' எனப்பொருள்தரும் இந் நூல் வெடியரசன் - மீகாமன் சண்டை பற்றியே குறிப்பிடுகின்றது. அதில் மீகாமன் 'மாணிக்கத்தலைவன்' என்று குறிப்பிடப்படுகின்றான்.

அதேபோல வெடியரசன், மீகாமன் பற்றிய சில வாய்மொழிக் கதைகளும் இலங்கைத் தமிழரிடையே வழங்குகின்றன.

இவ்வாறு ஒரு மூலக்கதையின் மாற்று வடிவங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்ற போது அந்த வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு அமைப்பியல் ஆய்வு முறையே ஏற்ற அணுகுமுறை ஆகும். இலக்கிய உறுப்புக்களை இனங்கண்டு அவை இலக்கியக் கட்டமைப்பில் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை ஆராய்வதே அமைப்பியல் ஆய்வாகும். இவ்வகை ஆய்வை வலியுறுத்திய பிராப் நாட்டார் கதைகள் தொடர்ச்சியான செயற்பாடுகளைக் (Funtion) கொண்டுள்ளன என்று குறிப்பிடுகின்றார். செயல் என்று பிராப் குறிப்பிடுவதை கதைக்கூறு (Motifemes) என்று குறிப்பிடும் ஆ. சிவசுப்பிரமணியன் ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவு செய்யும் பல்வேறு கதைக்கூறுகளைப் பிராப் பெயரிட்டு விளக்க முயலாத நிலையில் அக்கதைக்கூறுகளை மாற்றுக் கதைக்கூறன் (Allomtifemes) என்று பெயரிட்டுள்ளார்(2000:42). இம்மாற்றுக் கதைக்கூறன்கள் தொடர்பாக ஒரு முழுமையான ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டால் ஒரு நாட்டார் கதைக்கு எவ்வளவு விரிவான மாற்றுக் கதைக்கூறன்கள் உள்ளன என்பதும் மாற்றங்கள் எத்தகையன என்பதும் அவற்றுக்கான காரணங்களும் தெரியவரும்.

ஆகவே, வெடியரசன், மீகாமன் சம்பந்தப்பட்ட கதை இலங்கையின் வெவ்வேறு இன, சமூகப் பிரிவினரிடையே வெவ்வேறுவிதமாக வழங்குகின்ற நிலையில் அவற்றை இவ்வகை ஆய்வுக்குட்படுத்துகின்ற போது முற்குறிப்பிட்டது போல இம்மாற்று வடிவங்களில் இடம்பெற்றிருக்கின்ற புதிது புனைதலுக்கும், விடுபாடுகளுக்கும், விரிவுபடுத்தலுக்குமான காரணங்களைக் கண்டறிய முடியும். அதன் அரசியலைப் புரிந்துகொள்ள உதவும்.

**முடிவுரை :**

- கண்ணகி வழக்குரையில் மீகாமன் என்ற பாத்திரம் உயர்ந்த பண்பு நலன்களோடு படைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மீகாமனின் பரதவர் குலத்தை உயர்த்திக் காட்டுவதற்கல்ல. அவனிடம் தோற்ற முக்குவ குலத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகும்.
- நாட்டார் வழக்குடைய கண்ணகி வழக்குரைக் காவியத்தில் மூலக்கதையான சிலப்பதிகாரத்தோடு தொடர்பில்லாத நாகமணி பெறுதல், வெடியரசன் - மீகாமன் சண்டை போன்ற புதிய பகுதிகள் இடம்பெறுகின்றன. இவை ஈழத்தின் பிரதேசச் சிறப்புக்களைக் கூறுவதற்காகவும் பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்துவதற்காகவும் இணைக்கப்பட்டவை ஆகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. கந்தையா வி.சீ.(தொகுப்பு), 1968, கண்ணகி வழக்குரை, காரைதீவு: காரைதீவு இந்துசமயவிருத்திச் சங்கம்.
2. சந்திரசேகரம் சி, 2015, "ஈழத்துக் கண்ணகை அம்மன் இலக்கியங்கள்: இலக்கிய மீளுருவாக்கம் பற்றிய ஆய்வு", இன்பமோகன் வ.,மொழிதல் (தொகுதி 2, எண் 1), மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம்.
3. சண்முகதாஸ் அ,2008, "இலக்கியமும் செந்நெறி மரபும்" யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.
4. சிவசுப்பிரமணியன் ஆ., 2000, "ஆய்வுக் கோட்பாடுகளில் சாமியாடும் மனைவி", சண்முகசுந்தரம் சு., முத்துக்குமார் ச., நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகள், தன்னனானே, நாட்டுப்புறவியலுக்கான அரையாண்டிதழ்.
5. சிவலிங்கராஜா எஸ்., 2009,ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.
6. பத்மநாதன் சி., 2004,ஈழத்து இலக்கியமும் வரலாறும், சென்னை – கொழும்பு: குமரன் புத்தக இல்லம். விசாகரூபன் கி.(தொகுப்பு), 2009,ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள், யாழப்பாணம் : மலர் பதிப்பகம்.



# ஆய்வுரை - IV

## "விளங்குதேவன்"

ஆய்வாளர் **செல்வி. க.தங்கேஸ்வரி பி.ஏ** (தொல்லியல் சிறப்பு)

செல்வி. க.தங்கேஸ்வரியின் ஆய்வுரை ஆய்வரங்க இணைப்பாளர் திரு.த.சோமசுந்தரம் (கோட்டக் கல்விப்பணிப்பாளர், மண்முனை மேற்கு, அவர்களால் அரங்கில் வாசிக்கப்பெற்றது.


கண்ணகி வழக்குரையில் கூறப்பட்டிருக்கும் வீரப் பாத்திரங்களில் மிக முக்கியமானவனாக வெடியரசனின் தம்பி "விளங்குதேவன்" காணப்படுகின்றான். இங்கு நமக்குத் தரப்பட்டிருக்கும் தலைப்பு விளங்குதேவன் ஆகும். விளங்குதேவனின் பாத்திர அமைப்புப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் முன்னோடியாக சில விடயங்களைப் பார்ப்பது அவசியமானது.

### வெடியரசன் வரலாறும் கர்ண பரம்பரைக் கதைகளும்

வெடியரசன் வரலாறு எமது மக்களிடையே கர்ண பரம்பரையாகப் பேசப்பட்டு வரும் ஒரு கதையாகும். முக்குவ மன்னனான வெடியரசன் வரலாறு பல்வேறு விதமாக ஐயப்பாடு உள்ளதாகவும் காணப்படுகின்றது. பல பேராசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவும் உள்ளது.

### வெடியரசன் இராசதானி

கண்ணகி வழக்குரையில் முக்கியர்கோன் என பலமுறை கூறப்பட்டிருக்கும் வெடியரசன் ஆட்சிப் பிரதேசம் வட பகுதியில் குடாநாடு குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, காரைதீவு, தொல்புரம், ஆனைக்கோட்டை, திருவடிநிலை, கீரிமலை, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்ததாகப் பேராசிரியர் பாலசுந்தரம் "யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வு" என்பதில் தெளிவாக கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இவனது இராசதானி தொல்புரத்தை மையமாகக் கொண்ட இராசதானியாக இருந்தது எனவும் வெடியரசன் குலத்தவரான முக்குவர்கள் மேலும் சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணக்குடா நாடு, கிழக்கிலங்கை வரை பரந்து வாழ்ந்ததாகவும் குறிப்பிடுகின்றார். இன்று மட்டக்களப்பு மாவட்டம் முழுவதுமே பரந்து செறிந்து வாழும் ஓர் இனமாக முக்குவ இனம் உள்ளது.



முக்குவர் புகழ்பாட எழுந்த ஒரு காவியம் போலவே கண்ணகி வழக்குரை அமைந்துள்ளது. இது சற்று ஆழமாக நோக்க வேண்டிய ஒரு விடயமாகும். முக்கியர் மன்னான வெடியரசன், அவன் தம்பிமார் வீரநாரணன், விளங்குதேவன் போன்றோர் கோட்டை கொத்தளங்களை அமைத்துச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர் என்பது பல விடயங்களால் தெளிவாகின்றது. கண்ணகி சம்மந்தமான இலக்கியங்கள் மூலம் இலங்கைக்கு கண்ணகி வழிபாட்டினைக் கொண்டு வந்தவன் கஜபாகு மன்னன் எனப்படுகின்றது. இது கி.பி 2ம் நூற்றாண்டு. எனவே இக்காலங்களில் இம்முக்குவர் புகழ் ஓங்கி இருந்தது என்பதைக் கண்ணகி வழக்குரைக் காவியத்தின் மூலம் காணமுடிகின்றது. கண்ணகியின் காற்சிலம்புக்கு நாகமணி கொண்டு வரப் புறப்பட்ட கதையில் முக்கியமான இரு குலங்கள் பற்றிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு கரையார் குலமும் முக்குவர் குலமும் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

### கண்ணகி வழக்குரையில் முக்குவரின் முக்கியத்துவம்

கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை இரண்டையும் ஊன்றிக் கவனித்தால் இது நன்கு புரியும். அதிலும் முக்குவ குலத்தவருக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் மேலானது. முக்குவ மன்னான வெடியரசன், அவனது தம்பிமாரான வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோருடைய வீரமும் சிறப்பும் வெகுவாகக் காட்டப்பட்டது.

### நாகர்கள்

முக்குவர் என்றால் முக்கியர், முக்கியமானவர், முத்துக்குளிப்போர், முத்துக்குளிப்பதால் பொருள் வளம் உடையோர் என்றெல்லாம் பொருள் கொள்ளப்படும். முக்குவர்கள் கண்ணகி காலத்துள் பயந்து நாகதம்பிரான் ஆலயம் தோறும் கண்ணகிக்குச் சிலை வைத்து வழிபட்டனர் எனவும் அறிய முடிகின்றது. அதன் தொடர்ச்சியோ என்னமோ தற்போது முக்குவர் வாழுமிடமெல்லாம் கண்ணகி வழிபாடு சிறந்தோங்கி உள்ளதும், கண்ணகி குலதெய்வமாக வழிபடப்படுவதும் என எண்ண வேண்டியுள்ளது. மீகாமன் படையெடுப்பு, யுத்தத்தினால் கடும் அழிவுற்ற இவர்கள் வெடியரசன் காலம் பொன்னும் மணியும் மலிந்து காணப்பட்ட இவர்கள் யுத்த காலம் நலிவுற்ற நிலையில் சிலாபம், புத்தளம், மட்டக்களப்பு போன்ற கிழக்கிலங்கைக்குப் பரவினர் என பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

நாகர் எனப்படும் முகுளிநாகர் சங்கநாகர் முத்துக்குளிப்போர் எனப்படும் மூன்றும், கடற்கோளின் போது, ஒரு லட்சம் மீனவ சிற்றூரும், தொள்ளாயிரம் முத்துக்குளிப்போர் ஊர்களும், நானூறு சிற்றூர்களும் அழிந்தன என இராச மாணிக்கன் கூற்று. முக்குவர் விஷ்ணு வழிபாடு உடையவர். இதனால் விஷ்ணு புத்திரன் வெடியரசன் எனப்பட்டான்.

நாகர் ஈழத்து பூர்வீகக் குடிகள். இவர்கள் கி.மு 28000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக டெரனியகல கூறியுள்ளார். முகுளிநாகர்கள் தலைவன் குகன். இராமபிரான் குகனுக்கு சேதுபதி மகாராசா என்ற பட்டம் கொடுத்தான். சேதுபதி நாட்டு மன்னன் மகள் நீலகேசியை வெடியரசன் மணந்தான் என்பதும் ஒரு கதை.

சிலப்பதிகாரம் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக முதல் முதல் ஈழநாட்டில் அறிமுகம் செய்துள்ளது. ஆனால் வழக்குரை சோழ நாட்டின் பெருந் திருமகளாக காவிரிப்பூம் பட்டினத்து நங்கையர் திலகமாக ஈழநாட்டவருக்கு அறிமுகம் செய்வதோடு தமிழரின் நுண்தொழில், போர்த்திறமை என்பதையும் திறம்பட காட்டுகின்றது. தமிழரின் இந்த வீரத்தினை சான்றாக கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை என்பன தெளிவாகக் காட்டுகின்றன. வெடியரசன், அவனது தம்பியர் வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோரது போர்த்திறமை, நிர்வாகத்திறமை போன்ற பலவிடயங்கள் வழக்குரை மூலம் வெளிப்படுகின்றது.

### முக்குவர்காலம்

வெடியரசன் காலம் கஜபாகு காலம் கி.பி 2ம் நூற்றாண்டு என்பது தெரியும். அதே நேரம் ஆதார பூர்வமாக மட்டக்களப்பிலே அரசி உலகநாச்சி காலம் கி.பி 3ம் நூற்றாண்டு. இக்காலம் முதல் முக்குவதேசம் என மட்டக்களப்பு வழங்கப்பட்டுள்ளது. உன்னரசுகிரி தொடக்கம் கிழக்கு மாகாணம் முழுவதுமே முக்குவர் பரந்து செறிந்து வாழ்ந்து ள்ளனர். வாழ்கின்றனர். மட்டக்களப்பு கிராமப் புறங்களில் வெடியரசன் வரலாறு ஒரு கதையாக உலா வருகின்றது.

இந்தப் பின்னனியில் விளங்குதேவன் பற்றி நோக்கலாம். விளங்குதேவன் அறிவிற் சிறந்தவன், சமயோசித புத்தி உள்ளவன், சிறந்த வீரன், இராஜதந்திரம் உடையவன், நிர்வாகத் திறமை மிக்கவன் என மேலும் பல ஆற்றல்கள் வாய்ந்தவன் என்பது இவனுக்கும் மீகாமனுக்கும் இடையில் ஏற்பட்ட சமரின் போது தெளிவானது.

வெடியரசனிடம் சிறைப்படுகின்றான். வீரநாரணன் சண்டையிட்டு மடிந்து போகின்றான். வீரர்கள் ஓடிச் சென்று விளங்குதேவனிடம் விபரம் கூறுகின்றனர். தனது தமயனது வீரம் பயனற்றுப் போனதை உணர்ந்து கடற்கரைக்குச் சென்று நாவாய்களை போருக்குத் தயார் செய்யுமாறு கூறுகின்றான்.

### விளங்குதேவனின் வீரர்களை மதிக்கும் பண்பு

செய்தி அறியப்படும் போதே யாழ் கேட்டு மற்போரும் பார்த்துக் கொண்டிருந்தவன் எனப்படுகின்றது. கப்பல் முழுவ தற்கும் கொடி கட்டி (மகர மீன் கொடி உடையவன்), மேல்வாள், சிறுவாள் ஏந்தியதுடன், எறிவாளம், சூலம், எறிகோல், ஈட்டி, முனைக்கட்டை, கருவாள், அம்பு, யந்திரவில்லு, பலுஅம்பு, பிறை அம்பு, பிரட்டம்பு, கவந்தி

என்பவற்றுடன் படைத் தலைவனை அழைக்கின்றான். போருக்குரிய அத்தனை ஆயுதங்களையும் ஆயத்தத்துடனே படைத் தலைவர்களை அழைத்துக் கேட்கின்றான். நாகமணி வாங்கியதும் என் தமையன் பட்டதும் "கேட்டறிந்தீர் முக்குவரே" என விளித்து இக்கணமே வெட்டி மீள்வோம் எனச் சபதமிட்டான். முக்குவரே என விளக்கும் பண்பு மேலானது. விளங்குதேவன் படைகளை மதிக்கும் பண்புடையவன் என்பதை "முக்கியர்களே", "குகன் குலத்தவர்களே" என அடிக்கடி கூறும் வார்த்தைகள் உற்சாகமூட்டுகின்றன. சேனை பதினையாயிரம் பேர், வில் வீரர்கள் புலி போல் வந்து நிற்கின்றனர். ஒரு லட்சம் சேனையுடன் நின்ற விளங்குதேவன் வீரர்களுக்கெல்லாம் பொற்சிலம்பு கவரிகள், கையிலிடும் கவசம், கழுக்கட்டை எல்லாமே கொடுக்கின்றான். முதலில் கப்பல்களில் ஆயுதங்கள் ஏற்றுவிக்கின்றான்.

"ஏற்றி யருக் கரிப் பெட்டியுடனே
எழுதிய வண்ணச் சவளஞ் சுளுக்கித்
தோற்றும் முழுவுடனே கன்னிக் காடனும்
சூல மெறிகோலுடன் தொங்கனியும்
ஊற்றமதான வேல் ஈட்டி முனைக்கட்டை
யுட் கதி முப்படையொருவாங் கருவாள்
போற்றியத் தாரி மட்டார் மலரம்பு
பூச்சு வில் காலுமி யந்திரவில்லும்
வில்லம்புடன் னச்சம் பலகம் பிரட்டம்ப
வெவ்வாய முழுவம்பு மிக்கூரம்பு
மல்லிகை மொட்டம்பு னுடன் பிறையம்பு
கல்லுடன் பாம்புக் புடம் வெண்கருமணல்
காஞ்சி யெறியவே என்னையும் கூடவே
எல்லாம் குறைவற ஏற்றி"

இவையனைத்தும் யாருக்கு ஏற்றினான் என்றால் படைக்கு மேலும் சம்பாவுடன், உப்புக்கண்டம், தயிர்க்குடம், சாடி நெறுநெற், பழக்குலை, குடைப்பணிகாரம், தேங்காய், அவல், வெள்ளைச்சீனி, பழம், பாக்கு, வெற்றிலை, சந்தனம், குங்குமம் எல்லாம் ஏற்றுவிக்கின்றான். (வழக்குரை - விளங்குதேவன் போர் - பக்கம் 111, பாடல் 288, 287)

நீங்கள் படைகளை வெட்டுங்கள். முதலில் போர்க் கவசம் அணிகின்றான். பெண்மணிகளும் அணிகின்றனர். நான் மீகாமனைக் கொல்வதைப் பாருங்கள் என்று கூறுகின்றான். போருக்கு வீரர்கள் அணியும் அணிகளாக வீரர்களுக்கான சொட்டை கட்டி, கைக்கவசம், வீரக்கழல், சிலம்பு, ஐம்பொன் மாலை தரித்து வாளை உறையிடுகின்றான். இங்கு இவனது நிர்வாகத் திறமை, நிதானம் புலப்படுகின்றது. அதேநேரம் இவனுடன் போரிடும் மீகாமனும் குறைந்தவன் அல்ல. மச்சகந்தி, அதியரசன் பரம்பரையில் வந்த சிறந்த வீரன் என்பதையும் ஆசிரியர் தெளிவாகக் காட்டியுள்ளார். ஏற்கனவே வெடியரசனை பெரும் சமரிட்டு பிடித்துக் கட்டியவன். வீரநாரணனை வெட்டி வீழ்த்தியவன். மீகாமனுடன் போரிடத் தயாராகின்றான்.

**விளங்குதேவன் - மீகாமன் போர்**

படைகள் கடலென முழங்க போருக்குப் புறப்படுகின்றான். கப்பலின் கஞ்சான் ஆஞ்சான் கயிற்றை இறக்கி போருக்குத் தயாராகின்றான். ஒரு லட்சம் சேனையுடன் தண்டிகை மேல் ஏறி சாமனரன் வீச புலி போல் சென்றான். இது பெரும் கப்பற்றோர், முரசம், மணியோசை, தாரை, கொம்பு, சின்னம் ஊதி சண்டை தொடங்குகின்றான். மூவாயிரம் கப்பல்கள் போரில் ஈடுபடுகின்றன. படகுகள் படகுகளை மோதுகின்றன. பாய்கள் பாய்களை முட்டுகின்றன. முக்கியர்கோன் விளங்குதேவன் ஆர்ப்பரித்து வெட்டத் தொடங்குகின்றான். மீகாமனின் கப்பலின் முகரிகள் (முகப்புகள்) முறிந்தன. இரவாகியது. நங்கூரம் பாய்ச்சினர்.

கிழக்கில் சூரியன் உதித்திட மீண்டும் போர் தொடங்கியது. அறுசுவை உணவுண்டு போர் தொடங்கியது. கப்பல்கள் முகப்புகளில் கைகள் சிதறிட, கடல் நுரை சிதறிட வீரர்களை வெட்டி வெட்டிப் பெரும் போரிட்டான். எண்ணி லடங்காத ஆயுதங்கள் பாவிக்கப்படுகின்றன. அம்புகள் பொழிவார் ஒருபுறம். தீ அம்பு சொரிவார் ஒருபுறம். இப்படி இருபுறமும் வெட்ட வெட்ட பிணங்கள் கடலில் விழுகின்றன. இரு பக்கப் படைகளும் இறந்து விட்டன. மரக்கலங்கள் கரைதட்டின. எனவே, விளங்குதேவன் நமது படைகள் இறந்து விட்டன. நாம்

மட்டும் சண்டை பிடிப்போம் என மீகாமனை அழைக்கின்றான். தமிழர் பரம்பரையானது போரையும் கலையாகவே கொண்டது. போரிலே தோல்வியுள்ள மன்னன் துவண்டு விழமாட்டான். அடுத்த இலக்கை நோக்குவதுதான் மரபு. இங்கு போரிலே பலவித நுட்பங்கள், உத்திகள் பாவிக்கப்பட்டன. அவை எல்லாமே ஒரு கலை போன்றே அமையும். போர்மட்டுமல்ல யுத்தத்திற்கான கப்பல்கள், படகுகள் கட்டுவதும் கூட பண்டைய தமிழரது கலையே ஆகும். அதற்கேற்றபடி இங்கு வழக்குரையில் பாவிக்கப்பட்ட ஆயுதங்கள், போர்க்கருவிகள் உள்ளன. மீகாமன், வெடியரசன், விளங்குதேவன் போரிலே தரைப்படை, கடற்படை இரண்டிலும் பயிற்சி பெற்ற வீரர்கள் சண்டையிடுகின்றனர். வழமையான போர்களை விட உக்கிரமான போர். படை வீரர்களின் போர் ஒருபுறம். இறுதியில் மீகாமன் - விளங்குதேவன் போர்.

**மீகாமன் - விளங்குதேவன் தனிப்போர்**

“பொருத கப்பல் பிடிபடவும் போர் வீரர் தலையறவும்
பின்படையாய்ச் செல்லுவோம் நாம்”

என கப்பல் எல்லாம் ஒரு தீவில் கல்லுவிட்டு ஒதுங்கிய பின் ஆராய்ந்து பார்த்து பாலும் பழமும் சீனியுடனும் உணவுண்டு எப்பொழுது விடியும் என்று பார்த்திருந்து “முக்கியரே! அஞ்சாதீர், நான் இருக்கின்றேன். காகுந்தி மீகாமன் என் வாளாலே கொல்லுவேன்” எனப் புறப்படுகின்றான். முகரிகள் அதாவது கப்பல்கள் பொருதன. கடலில் நுரைகள் சிதறின. பெரும்பாலான வீரர்களையெல்லாம் வெட்டிக் கடலோடு விட்டான். தாரை சின்னம் முழங்கின. சாதாரண மீனுடன் மகரமீன் பொருதுவது போல மீகாமனுடன் போரிட்டான். “கரிந்த மேகம் சொரி மழை” எனவே, வேலம்பு, ஈட்டிகள் விட்டு வெம்போர் விளைப்பான்.

“ஒட்ட மிக விரு படையில் உள்ளோமிறந்து விட்டார்
வெட்ட வேண்டாம் நாமிருவர் மீகாமா”
(கண்ணகி வழக்குரை - விளங்குதேவன் போர், பக்கம் 122)

என்ற பின்பும் வெட்டு தொடர்கின்றது. இறுதியில் இறங்கி வருகின்றனர். சிங்கமென நின்ற வாள் வீமர் விளங்குதேவன், மீகாமா என்தம்பி உன்தம்பி என ஆணையிட்ட வெடியரசன் இனி போர் போதுமென்றான். மீகாமன் உங்களண்ணர் என்றான். வீரர்கள் ஆர்ப்பரித்தனர்.

“ஆர்பரித் தது கண்டு அடல் புனையு மீகாமன்
போர்க்குமோ மிகவலியான் பொருததெல்லாம் உன்மனதில்
ஏற்க நீ கொள்ளாதே என்றிரு கை தனைப் பிடித்தான்
இருபேரும் சம்மதித்து ஏகாந்தக் கப்பலின் மேல்”
(வழக்குரை - விளங்குதேவன் போர், பக்கம் 126, பாடல் 367)

கை பிடிக்கத் தலை சாய்ந்தான் கடலரசன் தம்பியவன். அதனோடு போர் முடிகின்றது. நாவாய்கள் புறப்படுகின்றன.

**அடிக்குறிப்புகள்**

01. யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வு - பேராசிரியர் பாலசுந்தரம்
02. கண்ணகி வழக்குரை

**தொகுப்பு**

01. முக்குவர்கள் பற்றி பல விதமாக அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஆராயப்பட வேண்டும்.
02. முக்குவர்கள் கண்ணகி வழக்குரையின் படி நாகர்கள், முத்துக்குளிப்பவர்கள், பொருள் வளம், வீரம், அஞ்சாநெஞ்சம், இராஜதந்திரம், படைப்பலம் உடையவர்கள்.
03. வட பகுதியிலும் ஏனைய கிழக்கு, புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகளிலும் வாழ்ந்தனர்.
04. உலகநாச்சி காலம் முதல் மட்டக்களப்பில் ஆட்சியில் உள்ளவர்கள். மட்டக்களப்பு முக்குவ தேசம் என அழைக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலும் போர் வீரர்களும் வன்னிமைகளும் அந்நியரை எதிர்த்து நின்றவர்கள். முக்கிய சட்டங்கள் கூட இருந்துள்ளன.



# ஆய்வு மதிப்பீடு

**திரு.க. இரகுபரன்**
(மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

மட்டக்களப்பு 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' அமைப்பு வருடாந்தம் நடாத்திவரும் 'கண்ணகி கலை இலக்கிய விழா'க்களில் இடம்பெறும் ஆய்வரங்குகள் பயன்மிக்கவை. இவ்வாண்டு கன்னன்குடாவில் இடம்பெறும் கண்ணகி கலை இலக்கிய விழாவிலும் ஆய்வரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வரங்கு இலக்கிய நுண்ணாய்வுக்கு இடங்கொடுக்கும் வகையில் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. கண்ணகி என்றவுடன் எல்லோருக்கும் சிலப்பதிகாரக் கண்ணகியே மனக்கண்முன் வருவதுண்டு. சிலப்பதிகார வழி அறியவரும் கண்ணகி, கோவலன், மாதவி முதலான பாத்திரங்களே பொதுவான தமிழறிவுலகுக்கு அறிமுகமானவை. அவ்வாறன்றி கிழக்கிலங்கையில் கண்ணகி கோவில் தோறும் வருடாந்தம் இடம்பெறும் சடங்கின்போது பயபக்தியோடு படிக்கின்ற அளவில் மதிப்போடு பேணப்படுகின்ற 'கண்ணகி வழக்குரை' காவியத்தின் பிரதானமான நான்கு பாத்திரங்களின் படைப்பினை – அவற்றின் உருவாக்கத்தை நுண்ணாய்வு வெய்வதாக அமையும் வகையில் 'கண்ணகி வழக்குரை கதையின் வீர கதாபாத்திரங்கள்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆய்வரங்கு இயல்பாகவே புத்துணர்ச்சி ஊட்டுவதாய் அமைந்தது.

ஆய்வரங்கு கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் தலைமையில் இடப்பெற்றது. திரு த. மேகராசா, திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், திரு கோ. குகன், செல்வி க. தங்கேஸ்வரி ஆகியோரின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவை முறையே வெடியரசன், வீரநாரணன், மீகாமன், விளங்குதேவன் என்னும் தலைப்புக்களில் அமைந்தன.

சங்கச் செய்யுள்கள் சிலவற்றில் காணப்படும் உதிரிச் செய்திகள், கண்ணகிகதை தமிழகத்தில் நிலவிய தொல்பழங்கதை என்பதை உணர்த்துகின்றன. வாய்மொழி மரபில் நிலவிய அக்கதையை அடிக்கருத்தாகக் கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற செந்நெறிக் காப்பியத்தை நன்கு சுவைபட ஆக்கினார். அது கண்ணகி கதையை மாத்திரமல்லாது தமிழகத்தின் கலை, பண்பாட்டு மரபுகள் யாவற்றையும் புலப்படுத்துவதாய் தமிழகத்தின் அரசியற் பிரிவுகள் யாவற்றையும் ஒருங்கிணைப்பதாய் அமைந்து சகல தரப்பாரையும் கவர்ந்த ஒரு காவியமாய் அமைந்தது.



சிலப்பதிகாரக் கதையில் ஈடுபட்ட மக்கள் அவற்றை நாடகம், கதைப்பாடல் முதலான கலைவடிவங்களுக்கூடாக வெளிக்கொணர விரும்பினார்கள். அதனால் சிலப்பதிகாரக் கதை கூத்துக்களாகவும் வில்லுப்பாட்டாகவும் கதைப்பாடலாகவும் பொதுமக்கள் மயப்பட்டது. அவையவை உருவாகிய பிராந்தியங்களின் அரசியல், பொருளாதார, சமய, பண்பாட்டு அம்சங்களும் அவற்றை உருவாக்கியவர்களின் கருத்துநிலைகளும் மொழியறிவும் அவற்றில் தாக்கம் செலுத்தின. அவை வெகுசன இலக்கியங்களாகவன்றி புலமை அங்கீகாரம் பெற்றவையாக அமையவில்லை.

இலங்கையில் கண்ணகி, வெறுமனே கதைக்குரிய பேசுபொருளாக மாத்திரம் அமையவில்லை. அவள் வழிபாட்டுக்குரியவளாய் விளங்கினாள். இலங்கைவாழ் சைவ மக்கள் மத்தியில் மாத்திரமன்றி பௌத்த மக்கள் மத்தியிலும் அவள் நம்பிக்கைக்குரிய சக்திமிக்க தெய்வமாகவே கொண்டாடப்பட்டு வருகிறாள். சிலப்பதிகாரம் கூறுவதை ஏற்றுக் கொண்டால் அம்மரபு கஜபாகு மன்னன் காலம் முதலாகவே – நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகிறது எனலாம். இலங்கைவாழ் தமிழ்பேசும் சைவ மக்கள் தம் மனங்கொண்ட தெய்வமான கண்ணகிக்கு ஊர்தோறும் கோவிலமைத்து சடங்குகள் இயற்றி வழிபடலானார்கள். அச்சடங்குகளின்போது கண்ணகியின் கதைகூறும் நூல்கள் இசையோடு பாடப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் 'கோவலனார் கதை' என்றும் வன்னிப் பிராந்தியங்களில் 'சிலம்பு கூறல்' என்றும் மட்டக்களப்பில் 'கண்ணகி வழக்குரை' என்றும் வழங்கும் கண்ணகி கதை நூல்கள் முழுமையாக ஒத்தும் இருக்கவில்லை. முழுமையாக வேறுபட்டும் இருக்கவில்லை. ஒரே ஆக்கம் காலகதியில் பிராந்தியங்கள் தோறும் அவ்வப் பிராந்தியத்தின் சமூக பண்பாட்டு மரபுகளுக்கேற்ப வாய்மொழி மரபுக்கே இயல்பான மாற்றங்களைப் பெற்று வழங்குகின்றது எனலாம். அவ்வகையில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் வழங்கும் 'கண்ணகி வழக்குரை' அப்பிராந்திய சமூக அசைவியக்கத்தின் தாக்கத்துக்கு உட்பட்டது என்பதை உணர்த்துவனவாக ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் அமைந்திருந்தன. குறிப்பாக மட்டக்களப்புப் பிராந்தியத்தில் முக்குவ சமூகம் பெற்றுள்ள சமூக முக்கியத்துவத்தை கண்ணகி வழக்குரை நன்கு வெளிப்படுத்துகிறது என்பது இக்கட்டுரைகள் மூலம் புலனாகியது. மட்டக்களப்புப் பிராந்தியத்தில் வாழும் ஏனைய சாதியாருக்கும் முக்குவர்களுக்கும் இடையிலான சமூக ஊடாட்டங்கள், அவ்வச் சாதியாரின் சமூக வழக்காறுகள் என்பவற்றின் தன்மையும் தொன்மையும் இந்தக் கட்டுரைகள் மூலம் வெளிப்பட்டன.

கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களின் நடவடிக்கைகள் தமிழக - ஈழ மீனவர் சமூகங்கள், கடலோடிச் சமூகங்களுக் கிடையிலான தொடர்புகளையும் முரண்பாடுகளையும் சித்திரிக்கின்றன. தமிழக - இலங்கை மீனவர்களுக்கிடையில் தற்காலத்தில் நிலவும் கடல் எல்லைப் பிரச்சினை, பொருளாதார ஆதிக்கத்தின் அடிப்படையிலானது. அதன் முற்காலத்தைய வெளிப்பாடாக மீகாமன் - வெடியரசன் போரைக் கொள்வது சமூக வரலாற்றுக்கு முரணாகாது.

கண்ணகி வழக்குரை காவியம் வாய்மொழி மரபிலானது ஆயினும் அது செந்நெறி இலக்கிய மரபின் செல்வாக்குக்கு உட்பட்டது என்பதும் இந்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் புலனாகியது. குறிப்பாக வெடியரசனின் தம்பியாகிய வீரநாரணன் பாத்திரம் படைக்கப்பட்டிருக்கும் முறை கம்பராமாயணத்தில் இராவணனின் தம்பியாகிய கும்பகர்ணன் பாத்திரப் படைப்பின் பாதிப்பை எடுத்துக்காட்டுகின்றமை உணரப்பட்டது. இவ்வாறாகப் பல்வேறு புதிய பல செய்திகளைத் தெரிவிப்பனவாக இந்த ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் அமைந்தமை மனநிறைவான விடயமாகும்.



ஆய்வரங்கில் அவையோர்



# தொகுப்புரை

## ஆய்வாளனுக்கு முதலில் கேள்வி கேட்கத் தெரிந்திருக்க வேண்டும்

பேராசிரியர் சி.மௌனகுரு

கண்ணகி வழக்குரையை ஆழமாகக் கற்றுச் சுழியோடி பல கருத்துக் களையும் கூறி எம்மைச் சிந்திக்க வைத்த ஆய்வாளர்களுக்கு முதற்கண் எனது பாராட்டுக்கள்.

கண்ணகி வழக்குரையில் வரும் மீகாமன், வெடியரசன், வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோரின் கதைகள் ஈழத தமிழர் வரலாற்றில் எழுதப்படாத ஒரு பக்கத்தைக் காட்டி நிற்கின்றன.பெரும் கப்பற்போரொன்று நடைபெற்றிருப்பதை கண்ணகி வழக்குரை காவியம் காட்டுகிறது.

வடபுலத்தில் வெடியரசன் ஆட்சியும் அவன் ஆட்சியின் கீழ் ஒரு பெரும் கப்பற்படை இருந்தமையும் ஆய்வுகளினூடாக மேற்கிளம்புகிறது.

